உ

குகமயம்.

ஓம் குமார குருப்யோ நம:

கவிரத்ந காளிதாசர்

வடமொழியில் இயற்றியருளிய

# உத்தரகாலாமிருதம்

தமிழ் மொழிபெயர்ப்பு.

இது

பறங்கிப்பேட்டை

கணித-ஜோதிஷ-ஆயுர்வேத-சித்த வைத்திய

சிற்பசாஸ்திர பண்டிதரும்

வைத்திய ரத்ந பிஷங்மணியுமான

ஸ்ரீ சு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரி அவர்களால்

தமிழில் மொழிபெயர்க்கப்பெற்று

திருக்கைலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதீன

வித்வசிகாமணி

ஸ்ரீ ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று

பல அன்பர்களின் பொருளுதவி கொண்டு

ஆசிரியரால் பதிப்பிக்கப்பெற்றது.

விரோதி௵ மகரரவி.

1950

[*All Rights Reserved.*]

க

குகமயம்.

ஓம் குமார குருப்யோ நம:

உத்தரகாலாமிருதம்

# பதிப்புரை.

## காப்பு.

குமரனை வள்ளிதன் கோமானை வானில்
அமரர்க் கதிபதியை யார்ந்து—பமரம்
பதுமத்துப் பாடும் பறங்கிநகர்த் தேவை
சதுமுகனுக் காசானைச் சாற்று.

காலக் கடலைக் கனமதி மந்தரத் தாற்கடைந்து
பாலர்க் கரிட்டம் முதற்றேட மெல்லாம் பரிகரித்துச்
சீலத் துறுபோகந் துய்ப்ப வமுதந் திரட்டிவைத்த
கோலக் கவிகாளி தாசன் குணநலங் கூறுதுமே.

உத்தர தேசத்தின்கண் உலகமெலாம் போற்றும்படி வட மொழியில் காவியம்-நாடகம்-அலங்காரம் முதலிய பற்பல நூல்களை யாத்து இற்றைக்கு 2300 வருடங்களுக்குமுன் அறம்-பொருள்-இன்பம்-வீடு என்னும் புருடார்த்தம் நான்கினையும் மாந்தர்கள் உணர்ந்து உய்யும் வண்ணம் இயற்றிய ஒன்பது வித்வ சிகாமணிகளுள் சிறந்து விளங்கியவர் ஸ்ரீ காளிதாசன் என்னும் மகாகவியேயாவர்.

இவர் செய்த நூல்களுள் ஒன்று உத்தரகாலாமிருதம் என்னும் சோதிட நூல். வேதாங்கங்களில் கண்ணாகச் சிறந்து விளங்கும் இக்கலையை மகா கவிகளுள் கண்போற் சிறந்து விளங்கும் இக்கவி சிரேஷ்டர் "கண்ணிற் சிறந்த உறுப்பில்லை" எனுங் கூற்றிற் கிலக்காமாறு அருளிச் செய்தபடியால், மாந்தர் யாவரும் தமக்கு இஃது அகக்கண் என மதித்துப் போற்றித் தமது வாழ்நாட்களில் உண்டாகக் கூடிய பலாபலன்களைக் கண்கூடாகக்கண்டு பேரின்பம் துய்ப்பார்கள் என்னும் நம்பிக்கையோடும் இவ் வடமொழி

நூலின் தமிழ்மொழி பெயர்ப்பையும் அதன் சாரத்தையும் ஸ்ரீ வல்லி தேவசேனாசமேத ஸ்ரீ குமாரக்கடவுள் திருவருளால் அச்சியந்திர மூலமாக வெளியிட முன்வந்துள்ளேன். இச் சிறந்த நூலை வெளியிடுவதற்கு என்னில் தகுதியில்லையாயினும் தமிழ் மக்களின் முன்னேற்றத்தைக் கருதி எனக்குள் எழுந்த பேரவாவாலும் பெரியோர் துணையாலும் இது யாவர்க்கும் பயன் தரும் என்னும் திடநம்பிக்கை கொண்டுள்ளேன்.

இந்நூல் எட்டு அத்தியாயங்களை யுடையது. முதலாவது ஜன்ம லட்சண அத்தியாயத்தில்: 11-சுலோகங்களும், 2-ஆவது பல சாதன அத்தியாயத்தில்: 22½ சுலோகங்களும், 3-ஆவது ஆயுர்த்தாய அத்தியாயத்தில்: 8 சுலோகங்களும், 4-ஆவது கிரக பாவ பல அத்தியாயத்தில்: 45 சுலோகங்களும், 5-ஆவது காரகத்துவ அத்தியாயத்தில் 54½ சுலோகங்களும், 6-ஆவது தசாபல அத்தியாயத்தில்: 42½ சுலோகங்களும், 7-ஆவது பிரசின அத்தியாயத்தில்: 19 சுலோகங்களும், 8-ஆவது பிரகீரண பல அத்தியாயத்தில்: (விவிதபலன்கள்) 50 சுலோகங்களும் உள்ளன.

ஒவ்வொரு அத்தியாயமும் பல பாவங்களை யுணர்த்துவதாய் மாந்தர்க்கு இன்றியமையாத பலாபலன்களை அறிவிக்கும். இப் பாவங்களின் விவரத்தை விரிவஞ்சி விடுத்துள்ளேன். இந்நூல் மூலமாக அவையிற்றை அறிந்து கொள்ளலாம். இதனுள் கூறப் பட்டிருக்கும் ஆரூட பலன்கள் யாவரும் போற்றத் தக்கன. 8-ஆவதில் பிரகீரண பலன்கள் பல கூறப்பட்டிருத்தலின் அதனை யாவரும் நன்கு கற்றறிந்து அதன்படி நடப்பார்களாயின் பல சௌகரியங்கள் இம்மையில் உண்டாகு மென்பதற் கையமில்லை. இதில் கூறப்பெற்றுள்ள விஷயங்கள் ஏனைய நூல்கள் எவற்றிலுங் காணப்படவில்லை.

இந்நூற் பிரதி எனக்குக் கிடைத்து அவ்வடமொழியைத் தென்மொழி யாக்குங்கால் சிற்சில சந்தேகங்கள் உண்டாயின. அவ்வையப்பாடுகளைப் பசவன் குடி பண்டித பூஷண பிரமஸ்ரீ V. சுப்பிரமணிய சாஸ்திரியாரவர்கள் B. A. அச்சிட்டிருக்கும் ஆங்கில மொழி பெயர்ப்பை அவருடைய அநுமதியின் பேரில் ஒத்துப்பார்த்து நீக்கிக்கொண்டு இனிய தமிழ் நடையில் யாவர்க்

கும் விளங்கும்படி இதனை வெளியிடலானேன். மேற்கண்ட பிரமஸ்ரீ சாஸ்திரியார் அவர்கள் செய்த நல்லுதவிக்கு நன்றி செலுத்துகின்றேன்.

"பிறர்க்குறாஉம் வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்" என்றபடி இந்நூலின் தவறுகளைத் திருத்தி யளித்ததுமன்றி இந்நூலினை முற்றிலும் பரிசோதித்துத் தங்கள் அபிப்பிராயத்தை எழுதித் தந்த திருக்கைலாய பரம்பரைத் திருத் தருமபுர ஆதீன வித்வ சிகாமணி ஸ்ரீ ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளை அவர்களுக்கு என் மனமார்ந்த நமஸ்காரம் உரிமையாகின்றது.

ஒரு நூலினை எழுதுவோர், எழுதுவிப்போர், சேமிப்போர், சேமிக்கச் செய்விப்போர் முதலியவர்களைப் பார்க்கிலும் இதனை அச்சிடுவோரும், அச்சிடுவிப்போரும் மிகச் சிறந்தோராவர். இவர்களுள்ளும் ஒரு நூல் துலங்கி மிளிரத் திரவியோபகாரம் செய்து அச்சுவாகனமேற்றி விளங்கச் செய்வோர் மிகமிகச் சிறந்தோராவர், ஏனெனில் அவர்கள் "இசையுடன் வாழ்வாரே வாழ்வார்" என்னும் பெருநாவலர் திருவாக்குக் கிலக்காய் வாழ்பவராகின்றனர்.

இதனை யொட்டியே இந்நூலினை ஒளிவளர் விளக்கெனப் பிரகாசிக்கச் செய்கின்ற பெரும் பாக்கியத்தையும் வெகு சிலாக்கியத்தையும் பெறுகின்றார்கள் இந்நூல் அச்சிடுவித்தோர்கள்.

இந்த மாபெரு நூலினை உலகோபகாரமாய் "தான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற வண்ணம் விளக்கிய இவர்கள் யாவரும் பன்னலங்களும் அரோக திடகாத்திர ஆயுர் ஆரோக்கியங்களையும் பெற்று வாழச் சேந்தன் திருவருள் பாலிப்பானாக. சுபம்.

விரோதி௵
ஆவணி௴ 20௳
பறங்கிப்பேட்டை.

சு. ஏ. குமாரஸ்வாமி.

குகமயம்.

ஓம் குமார குருப்யோ நம :

# முன்னுரை.

பிறையாறு
ஸ்ரீ தவசு முத்து நாடார்
உயர்நிலைப்பிள்ளித் தலைமையாசிரியரும்,
வரலாற்று நூலாசிரியருமாகிய
பிரமஸ்ரீ N. அரங்கசாமி ஐயர் B. A., L. T.
அவர்கள் எழுதியது.

'எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்' என்னும் முதுமொழிப் பொருளை ஆயுங்கால் எண்ணைப்பற்றிய நூலானது மக்களுக் கின்றியமையாத தென்பது புலப்படும். உலகத்திலுள்ள பல பொருள்களையும் எண்ணில் வைத்து ஆராயும் நூல் கணக்கு நூல் அல்லது கணித நூலெனப்படும். பல பொருள்களுள்ளும் காலமென்பது முதன்மையுடைய தொன்றாகும். நிலத்தினையும் காலத்தினையும் ஆசிரியர் தொல்காப்பியனார் முதற் பொருளென்றார். நிலமென்பது பலவுலகங்களையும் குறிக்கும் ஒரு அறி குறிச்சொல். காலமென்பது அவற்றின் இயக்கங்களை அளத்தற்குரிய கருவியாகும். நாம் வாழும் உலகத்திற்கு ஒளி தரும் கதிரவனும் அவனைச் சுற்றி வரும் கோள்களும் சுற்று வழியிலுள்ள விண்மீன் தொகுதிகளும் ஒரு அண்டமும் அதன் சார்புகளுமாகும். அவற்றின் இயக்கத்தால் மக்கள் வாழ்க்கை உருப்படுத்தப்படுகின்றதென்ற கொள்கை நம்மவர்களுள் தொன்று தொட்டு நிலவி வருகின்றது. அது காரணமாக நாள்நிலை கணித்தல், கோள்நிலை கணித்தல், அவற்றின் இயக்கம் கணித்தல், வாழ்க்கைப் பயன்கணித்தல், நிகழ் பயன் கணித்தல் முதலிய பல பகுதிகளாகக் காலக் கணக்கு நூல் விரிவடைந்துள்ளது. நாளும் கோளும் இன்னின்ன பயன் தரும் என்று ஆயும் நூலாகிய சோதிடமானது வாழ்க்கையின் துன்பங்களை நீக்குவதற்குப் பெரிதும் துணைபுரிவதாகும். ஒவ்

வொரு செயலையும் வெற்றிபெற முடிப்பதற்குரிய நற்பொழுதினைக் காட்டுவதும் தீய பொழுதின் வலியை அழிக்க உதவுவதும் அந் நூலேயாகும். ஒரு முயற்சி கைகூடாவிடத்துப் புள்ளும் பொழு தும் பழித்தல் இயல்பென்று பண்டைத் தமிழ் நூல் கூறுகின்றது. பண்டைத் தமிழருள் காலப்பயன் கணிப்போர் 'கணியர்' எனப் பட்டனர். கூடலூர்க் கிழார் முதலிய பல புலவர்கள் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னமே சிறந்த சோதிடப் புலவர் களாய் விளங்கினரென்பது புறநானூறு முதலிய சங்க விலக்கியங் களால் தெளியப்படும். பரிபாடல் சிலப்பதிகாரம் முதலிய இலக் கியங்களில் கோள்களின் நிலையைப்பற்றிய விவரங்கள் ஆங்காங்கு காணப்படுவதால் பண்டைத் தமிழருள் இவ்வொளி நூலானது மிகவும் பயின்று வந்ததென்பது ஊகித்துணரப்படும். சித்தர் நூல்களில் ஒவ்வொரு செயலுக்கும் உரிய காலப் பொருத்தங்கள் காணப்படுவதும் அதனை வலியுறுத்தும்.

பண்டைத் தமிழிலுள்ள பல கலை நூல்கள் பிற்காலத்தில் படிப்பாரும் பேணுவாருமின்றி மறைந்தமைபோல சோதிட கலைக் குரிய நூல்களும் கிடைத்தற்கரியனவாய்ப் போயின. பிற்காலத் தில் வடமொழியிலியற்றப்பட்ட சோதிட நூல்கள் பலவும் நம் மவர்களுக்குப் பயன்பட்டு வந்தன. ரேகை நூல்கள் மிகுதியாக ஏடுகளில்தான் இருந்து வருகின்றன. தற்காலத்தில் வழங்கும் பல வகைச் சோதிட நூல்களை நன்கு ஆராய்ந்து உண்மை அறிவதற் குச் சிறந்த வடமொழி நூல்கள் பெரிதும் துணை புரிவனவே. வடமொழியில் முதநூலும் முதுநூலுமாகிய இவ் வுத்தர காலா மிருதம் ஜன்ம லட்சணம் பல சாதனம் - ஆயுர்த்தாயம் - கிரக பாவ பலம் - காரகத்துவம் - தசாபலம் - பிரசினம் - விவிதபலம் முதலிய விரிவான எட்டு அத்தியாயங்களையுடையது.

ஸ்ரீ கவிரத்ந காளிதாச ரென்னு மிந்நூலாசிரியர் நான்காம் நூற்றாண்டில் அரசாண்ட விக்கிரமாதித்திய சந்திரகுப்த வமிசத் துப் போஜன் காலத்துப் புலவர்கள் ஒன்பதின்மரில் தலைசிறந்தவ ரென்பது வரலாற்று நூல்களால் தெரிய வருகிறது. இவர் நூல் களோடு கிரேக்கராகிய யவனருடைய ஓரை நூல்களும் ஒரு சில ஒத்திருக்கின்றன. ஓரை நூலினைக் கிரேக்கர்கள் ஆதியில் பண் டைத் தமிழரிடமிருந்து கற்று விருத்தி செய்தனரென்பது தொல்

காப்பியத்திலுள்ள ஓரையென்னுஞ் சொல் வழக்காராய்ச்சியால் தெளியப்படும்.

ஓரை நூலின் கடுமையை இவ்வுத்தர காலாமிருதம் என்னும் இந்நூல் ஒழித்து ஒளிதில் அறிவு விளக்கம் அளித்தலின் ஓரை நூற் பாலைவனத்தில் நடந்திளைத்த மாணவர்க்குக் காளிதாசரது அறிவென்னும் மலையினுதித்த காலாமிருதம் என்னும் ஆறுனது விடாய் தணிக்கும் தெளிபளிங்கன்ன தீம்புனல் நல்குவதாகும்.

வற்றாத இத்தீம்புனல் ஆற்றினைத் தமிழ் மக்களுக்குப் பயன் படும் பொருட்டுத் தமிழ்நூல் நிலத்தில் திருப்பி வழி வகுத்த பெருமை வடமொழி தென்மொழி என்னும் இருமொழியிலும் வல்ல பறங்கிப்பேட்டை திருவாளர் சு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரியார் அவர்களுக்கே உரியதாகும். அவர்கள் கணித நூல் ஓரை நூல் இருமொழி மருத்துவ நூல் சிற்பநூல் முதலிய பல கலைகளில் தேர்ச்சி பெற்றவர்களாதலின் அவர்கள் இயற்றியுள்ள மொழி பெயர்ப்பு நூலானது திட்ப நுட்பஞ் சிறந்ததாய் மூல நூலின் உண்மைப் பொருளைத் தெள்ளிதின் விளக்குவதாகும். அவர்களுக்குத் தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

பிறசோதிட நூல்களுட் கூறப்படாத இராஜயோகம் முதலிய வற்றைப்பற்றிய அரிய நுட்பங்கள் பல இந்நூலுட் காணப்படு கின்றன. ஓரை நூலென்பது மிகுந்த நுட்பங்களை யுடைமையால் அதனை மிக நுட்பமாக ஆராய்ந்து தேர்ச்சியுறுகின்றவர்களே பயன் கூறும் தொழிலில் வெற்றி பெறுதல் கூடும். ஆதலால் சோதிடங் கற்க விரும்பும் யாவரும் இத்தகைய அரிய நுட்ப நூலினைக் கற்றுத் தேர்தல் மிகவும் அவசியமாகும். ஆதலால் அவர்களும் பிறரும் இந்நூலினை வாங்கி ஆதரித்தல் இன்றியமை யாதது. இந்நூல் தமிழில் சோதிடக் கலையை வளர்த்துப் பயன் தரச் செய்வதற்கு ஏற்ற முறையில் எங்கும் பரவவேண்டுமென்று இறைவன் திருவருளை வழுத்துகின்றேன். சுபம்.

தலைமை ஆசிரியன்
தவசு முத்து நாடார் உயர்நிலைப்
பாடசாலை
பிறையாறு

இங்ஙனம்
நா. அரங்கசாமி
வரலாற்று ஆசிரியன்.

உ

குகமயம்.

## சிறப்புப் பாயிரம்.

இது

பிறையாறு
லுத்தரன் மிசியோன் பெண்கள் கலாசாலைத்
தமிழ்ப் பண்டிதரும்
மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவானும் பறங்கிப்பேட்டை
தமிழாசிரியருமான
வித்வான் ஸ்ரீ ப. அ. கிருஷ்ணஸ்வாமிப்பிள்ளை அவர்களால்
இயற்றப் பெற்றது.

### நேரிசை ஆசிரியப்பா.

உலக மேத்துவ உலக மேத்துவ
அலகில் சீரரு ளாடல் இசைஇய
ஓத்திடைக் கிடைத்த மாத்திரல் தழூஉம்
உதாத்த மாதி விதமாற் பெறவே
உரைகொளக் கிடந்த புரையறு சிட்சை
விதிவழி கிடைத்து விளங்குமாக் குயிற்ற
மதிவழி தொகுத்து மாண்பமர் கற்பம்
சொல்லொரு பொருளும் நல்லவாக் கான
தகுமுறை பெறுவ தகுவியா கரணம்
அருத்த முரமிளிர் இருத்தமார் வகையே
கருத்துரை புகல்வ நிருத்த மென்ப
இறைமலி வடிவத் தெழுத்தணி வகையின்
முறைகெழு சந்தோ விசித மொழிப
சொல்லிடைக் கிடைத்த வல்லவா ரியற்ற
மேதகு காலம் போத வழுத்துவ
மேதக் கோரின் மிகுமதி விளங்க
போதக் கொழுந்தின் பொலிசோ திடமே
இத்தகை மருவி ஒத்தன வுணர
வேய்ந்த சீரின் வாய்ந்த விழிப்புலன்
எனவே வழுத்தலின் ஏற்ற முருவ

ஈங்கிது விரித்த பாங்கமர் கணிதம்
வலமலி செலவின் நிலவுமா நலன்றேர்
பாவ மாக மேவப் பெறுவ
வேண்டுவ மாண்டக காண்டகா ரூடம்
என்பதி னிடையின் பொன்பர மொளிரும்
நாத்திர முணர்த்தும் சாத்திரம் பலவே
கற்பவர் கற்று பொற்பமர் பெறவும்
சொற்பொரு ளியங்கி நிற்ப நிறுவப்
பெறுதலின் சோதிடம் பெற்றிமைத் திகழும்
போஜ னவையில் புலமை வாய்ந்த
கவிரத்ந காளி தாசன் தானும்
சொல்லார் நூற்கு வில்லார் நகவே
உத்தர காலா மிருதமா முயர்நூல்
வடமொழி வகுத்த நிடமுள நூலே
உலக மேத்துவ உலக மேத்துவ
புலமலி அறிஞர் போற்றுந் தகைஇய
பொற்பமர் பெருநூல் ஏற்ற மாரிய
இயல்மொழித் தேற்றத் துணரின் மாண்பின்
பொய்ச்சமில் கேள்விப் போதமர் புநிதன்
மொழிபெயர்த் துதவி முதிர்சுவை நறுநூல்
தொகுத்தன விரித்துப் பகுத்தன மிகுத்த
பண்புசால் முறையே எண்பெற அமைத்தனன்
காலா மிருதமெனப் பேரா தரவில்
பொற்பமர் புலவர் கற்ப கவின்பெறு
சீரிய முறையில் தெரிந்துரை பாக்கு
பேரியல் பெறவே பெட்புற வமைத்தனன்
அருக்க ஞாதி பெருக்கு நவத்த
கோணிலை யுணர்த்த ஏணமை கணிதம்
சூரிய சித்தாந் தப்பெயர் சொலவும்
வீரிய திருக்கு வியன்மார் கணிதமும்
இருமூன் றியற்பலன் ஒருமொன் பார்க்கும்
பொருந்தக் கிளத்த மருந்தென சீபதி
பத்ததி யெனவும் ஒத்த துணையின்
நிலவிய நீல கண்டதா சிகமும்
கணித்த முறையில் பணித்த பலன்றெரி
ஆற்றல் சார அமைபல தீபிகை.
விண்பொழி வியன்சீர் எண்பெறு புட்ப

பந்த மருவிய செந்தமிழ் மச்சமும்
மயன்முறை பெரீஇய நயஞ்செறி மனைகள்
திருந்துபு வகுத்த செழித்தவா யாதி
பொருந்த சிற்பம் புகல்பெறு நூலும்
வரகன் னிகையின் விரவிய கேண்மை
தெரிதர விரித்த செம்மை கோவையும்
கணம்பயில் முனிவர் இணங்க நாடியான்
ஆய்ந்துணர் நோய்கள் தேய்ந்திடு மருத்துவ
வைத்திய ரத்தின பூடண மலிய
க்ல்யாண வர்மன் கழறிய நூலாம்
சாரா வளியெனும் பெருநூ லதனை
பயிற்று முறையின் பண்பி னமைத்தே
மேன்மை சான்ற பான்மைசேர் புலவன்
ஏடவிழ் கமல வீடுடை யவட்கு
நாடக சாலை நான்மறை முழக்கம்
ஒலிகடல் கடக்க கலியுக மாவணம்
பல்பெருந் தேத்து நன்குநன் மணிகள்
துவர்தரு காயும் சுருக்கணி கறியும்
"இவர்சினை பராரை இணையிட் டறுத்தொகை
ஏடக மாதிய காடகத் தெனவும்
கலன்கொளப் பெரீஇய நிலந்தரப் பயிலும்
மாக்கவின் மிகுத்தே தேக்குமா வணமும்
புரவம் பெருகிய தரம்பயில் பொருளும்
பண்ணை மிகுத்த செந்நெலும் குறிஞ்சிக்
கண்ணிடை தழைத்த கள்ளுந மேனலும்
ஓவறக் கொழிக்கும் மேவிய சீரின்
மூட்டாட் டாமரை கட்கமழ் நெய்தல்
விளைநில கழனி களையெனத் தழைய
பைஞ்சுளை யூற்றின் விஞ்சுமாப் புனலும்
மஞ்சுளி துளியின் மழைநீர்ப் பெருக்கும்
ஒழியா வளத்த விழுமிய மணிமுத்
தாநதி மருங்கு வானுயர் பதியின்
அறந்தவழ் பதியாம் பறங்கிப் பேட்டைத்
தொன்ன கரத்தே மன்னு விழுக்குடி
விச்சுவ மரபின் எச்சமில் குலத்து
கேழ்கிளர் பசும்பொன் காழிலங் குறுபணி
மணியணி ஷித்து வயங்கு பணியின்

சுபர்ண விருடி தொழுவழி கோத்திரத்
திபமுக னருளும் இராறு தோளின்
குஞ்சரி குறமின் விஞ்ச வணைத்த
குகபரன் குமரன் நகம்பெறு கடவுள்
நல்லருள் புரிய எல்லியின் மிளிரும்
சீர்கெழு நடையின் ஏர்மிகு வரவோன்
ஏகாம் பரனடி வாகார் மனத்து
ஏகாம் பரன்பெற இயங்குமாக் குமரன்
இலக்கண மிலக்கியங் கலக்க மிலாது
தெள்ளிய வுணர்வி னுள்ளிய முறையே
ஆய்ந்துணர் கேள்வி வாய்ந்த சீரியன்
சாத்திர சமயம் சார்பல வகையும்
நாத்திர மாக நவின்ற வாழியன்
மகிடமர்த் தனிதாள் நிகழ்மனத் தேற்றுபு
வழிவழித் தொண்டின் பழகு செல்வன்
சிற்பம் சோதிடம் செம்மையார் கணிதம்
கற்பவர் கற்க பெற்றியிற் கழறவும்
மருத்துவ நூல்வழி திருத்து மாற்றலும்
மழுவல முயர்த்த செழுமறைப் பெருமான்
சூர்பயம் தொலைப்ப சரவணத் துதிப்ப
அருண்மக வாகும் பொருண்முரு கையன்
தண்ணருள் பெரிஇய எண்ணலத் துரியன்
எண்டிசை புகழ கொண்டவா தரவின்
மக்கட் பெரியர் தொக்கவா தரவன்
புறஞ்சொலா மனத்தி னறங்கவி நெறியே
ஊதிய மென்ன மேதகு குணத்தன்
மருமலி கமலத் தொருமகள் கருணை
வாழிய திருவின் கோழி யோங்கிய
விறற் கொடியோனை மறவாக்
குமர சுவாமிக் குணமிகு கோனே.

உருவளிக்கு முத்திரகா லாமிர்த முரைக்குமுறை யுறுதி கூறித்
திருவளிக்குஞ் சோதிடத்தின் திருக்கணிதச் சித்தாந்தம் திரட்டித் தந்தான்
மருவளிக்குந் தண்டலைசூழ் பறங்கிநகர் வருகணிதர் மகிழுஞ் சீலன்
குருவளிக்கும் பலன்கொண்டே குலமளிக்குங் குமரசாமிக் குரிசின் மாதோ.

---

# INTRODUCTION*

By

N. R. TIRUVENKATACHARIAR, B.A.,

*Astrologer and Journalist,*

'SRI KASYAPA ASRAM,' 307, Mint Street, Madras.

Astrology is that science which treats of the correspondence between the position of the heavenly bodies and human events. It is a science of tendencies ; it teaches the universal harmony of nature, the connection between all effects and all causes. Astrology is to Astronomy as the grammar of a language is to the dictionary of the language.

The value of a study of Astrology is that it reveals to each individual his or her own nature and character, assisting him or her to realise his or her high and glorious destiny.

"What kind of a personality we have brought over as the karmic inheritance of our activities in previous lives we may learn from a study of Astrology. It is able to inform us, struggling men and women, what we are, our inherent tastes, our innate desires and capacities, our mental, psychic and physical peculiarities, our limitations and our possibilities of growth, our unfelt and latent forces, our secret aspirations or it may be lack of aspiration, in a word the materials supplied by the involution of the past for the evolution of the future. This is our stock in trade on the handling of which will depend our future prosperity and happiness."

Many people treat the idea of the study of Astrology even when they believe in the science, as unpractical and therefore useless in this world of ours and consider that

* The works of Alan Leo, Bessie Leo, I. M. Pagan, Alfred H. Barley, the articles of late Prof. B. S. Rao of Bangalore and Dewan Bahadur K. S. Ramaswami Sastrigal, have been laid under contribution in the preparation of this Introduction.—*N.R.T.*

if an individual devotes himself to such a study he is likely to become only a dreamer and unpopular in other and more evident and visible walks of life, that he is likely to lose much of what may be called his practical value in this world.

Such a view is certainly a decided mistake. If the study of the science of Astrology be pursued for its own sake and not for its commercial value, it will turn the mind of the aspirant inwards leading him to the realms of abstract thought. The study of this science educates, draws out and stimulates the capacity of the Thinker within by strengthening and developing the mind and body together with its physical instrument, the brain.

One important lesson that Astrology teaches us is that character is destiny. It teaches us and explains to us that moral and spiritual causes are no less effective than physical causes, that the planetary forces concerned with our evolution scrutinise and tabulate every act and deed of man and that the effect of harm or benefit to ourselves and our neighbours is attached to every moral act. There is no escape, no loss, no uncertainty. "As needs must be in a cosmos—a beautiful order, the core and centre of whose physical system is a moral order—the cosmical truth enshrines an ethical truth, and the symbolism of nature becomes a sacrament of Spirit." The effects of causes generated on the moral plane will ultimately exhaust themselves in physical and material circumstances. Astrology shows the laws of cause and effect working. We are made to realise that every man is the framer of his own destiny inasmuch as he can pluck any fruit he likes in the garden of life. But at the same time he has to bear the consequences ensuing from his own actions. The semi material theories of luck, fate, chance are all swept away ; nothing which shifts responsibility or paralyses efforts can the science of Astrology postulate. We must realise that the conditions of life in which we find ourselves is no accident or nature's freak.

Whatever our idea, whatever the effect, whatever the result, it is all ours only. For we must each do our own thinking and none can do it for us. Our evolution is in our own hands. The formative power is lodged in us. Deep within each heart is the germ of Divinity and it is for each of us to evolve that germ into leaf, bud, flower, and sweet fruit. Astrology demonstrates the inflexibility of moral law and opens to us a vista of glorious possibilities. It affirms the moral consciousness, vindicates the moral sense, spurs the moral motive. It is in very truth a guide in life practical and practicable.

Astrology is the science applied to human life and unfoldment dealing with character, mind and disposition brought over by each individual from past life. Astrology is the law in manifestation and each soul brings with it a record of past experiences or in other words its character and disposition, moral and mental attributes.

A horoscope cast for the exact moment of any child's birth reveals to the astrologer the child's character, mind, and nature and enables him to tell the parents the lines upon which the child can best be trained. The parents knowing beforehand the nature and status of the new comer can lay out a plan of education and training adopted to the exact nature of their child thus avoiding friction and promoting harmony. They can starve out the evil they may foresee and nourish and develop all the good in the nature of the child. Let us suppose that the child is found from the planets' positions at birth as one with a passionate temper, we can try to neutralise it by using calmness and tact in management never exciting the weak side of its character. Let us suppose that a child is found to be morally weak and intellectually strong; then it is the former that the parents should seek most earnestly to stimulate and develop endeavouring both by precept and example to show the child the greatness of morality. If on the other hand the nativity shows moral development with not sufficient mentality then to the mental side of

the character should the stimulus be applied. The child should be encouraged to think and the mind should be energised and helped on the lines of least resistance which may also be seen in the horoscope. Thus it is clear that the science of Astrology has a practical and useful aim in the training of children's faculties and in this respect it has not any other substitute. A universal knowledge of Astrology would materially quicken evolution. The parents will do well to have the horoscopes of their children computed by competent Astrologers and get their advice on their training and management and last but most important follow it.

Let us discuss what Destiny is, and how it works. All who are interested in Astrology believe in destiny. But into the meaning or even into the *modus operandi* of that Destiny few care to investigate. Every human being is a creator and generator of countless myriads of entities called thoughts. These thoughts are so many forces. They pass out from him into the world as angels or demons, as blessings or curses.

We must cognise that this power of thought is the mightiest power that man can hold either for good or evil both as regards himself and others around him. Let us see what this power of thought is and how it works. Every time we send forth a thought of anger, hatred, jealousy or selfish desire, every time we think how we can outwit some neighbour, every time we plan revenge, in fact whenever we give birth to any selfish or malicious thought we are weaving by the shuttle of the mind our own web of destiny. For thought means character and character is destiny. If we send forth gloomy or worrying thought then we are gradually forming a despondent nature and thereby put ourselves under the unfavourable aspect of *Sani*. That is to say our future birth will take place under a discordant vibration of *Sani*. If we give birth to impure and sensual thoughts then will the sway of martial affliction be ours, corresponding to the character

we have made for ourselves by thought. Consequently in a future birth we shall probably find ourselves seriously handicapped by the coarser vibrations of Mars (*Kuja*). So it is clear how we suffer from ourselves, how we make our own fate by our thought. We must learn and appreciate that we live in a realm of law, God's law called in one of its workings, Astrology. It is an unseen but an unerring law. In the beginning a certain sense of helplessness is apt to overcome us, a feeling that we are in the grip of a mighty power that carries us whither it chooses. But as we learn more of planetary laws and conditions we come to know that the very reverse of this is the case. For this mighty power when we understand it and work with it, will carry us where we will. As we realise the power of thought that we become in time what we think and that our birth time is chosen in accordance with what we have become and reveals just what we are, just what we have made ourselves, then we feel that we must each begin to make by thought our future lives nobler, better and purer by bringing ourselves under the good aspects of the planets, instead of the bad ones. For, the law is just and gives every man according to his work. It is largely by our thoughts that we affect others. If by sending against them forces of destruction like evil wishes and curses they "come home to roost."

The evil thought comes back to be atoned for, atonement or equilibrium being attained in the present life or in the future incarnation. Just as we have thought in the past so will our character be in the present; for thoughts are things, forces; and they are not empty nothings and man's thought-sphere creates and moulds his future; and just as we control our thoughts so far we control our destiny. So if we would alter the conditions by which we find ourselves handicapped today, we must fill our shuttle, the mind with different thoughts and thus create a fresh set of causes to be worked into a new pattern of a different kind. As we learn to think more wisely and people our current in space with perfect thoughts of

purity, truth and love, thoughts of goodwill and service to all mankind, we shall indeed rule our destiny and overcome all planetary forces. It is clear that generation of thought-forms is the most potent factor in controlling destiny.

Another objection to Astrology frequently raised by its opponents is that it teaches fatalism and denies free-will. Astrology indicates truly the fate man has made for himself but at the same time it also shows the strength of his free-will within this fate. How can a man be free and yet be under the compulsion of an inexorable destiny ?

If we study man's divine nature, we are bound to recognise free-will as an attribute thereof ; otherwise, his divinity would be limited. This divinity or seed of God, if we may so view it, is the nucleus derived by man from his divine Progenitor. Man in the exercise of his free-will really chooses his own conditions, makes his own fate, joy or sorrow. Man must be considered as dual in his nature—human yet divine and immortal. As a human he has strong desires, passions and appetites and more or less enslaved by his animal nature and instinct. His desire in nature is exercised more than his will-power. Man is left free to do exactly as he pleases to kill or heal, to curse or bless, to be sensual or pure, avaricious or charitable or selfish or kind. But since the choice is his own, he must also take the consequences which flow spontaneously from these actions either in the current life or in the succeeding one. Let us illustrate this by an example. Just in the same way, if we fall asleep at night owing any one a debt and on waking totally forget the occurrence, in time the bill will be produced and will have to be paid back ; for we incurred it and are therefore consequently responsible for it. We chose the object of attraction and naturally have to pay the price demanded. A man has free-will to commit murder or suicide but having used his will in these ignoble lines, he has to pay the penalty and face the sufferings and misfortunes occa-

sioned by such actions. If a man puts his hand into the fire or goes beyond his depth in water, he will assuredly be burnt or drowned and that is not the fault of the fire or water but is due to misuse of his free-will. Thus man contracts debts by violating the laws of nature in the physical as well as in the moral and mental world and these debts even though contracted in ignorance or in utter disregard of the workings of Nature's Laws must be paid when the time for settlement arises. Nature is no respector of persons. She regards each person precisely as any other, notes the very smallest act in her complete account book and when the time arises for settlement either today or tomorrow here and now or in the next birth, pays each deed with exact and scrupulous fidelity as every horoscope proves. Having outraged the Law of harmony by our selfish actions in the past we have come back into this world with a great load of so-called fate to be worked off. Each of us is under fate compelled by necessity though self-imposed, but within the very fate lies again the power of a new choice. For, we have freedom of thought. The formative power is lodged in us. Under all limitations and bondages, the will or living power is there, however heavy the bonds of fate may be that man has woven in the past by his thoughts and actions. He who made can alter; he, who bound can loose. As we slowly realise that we make our own fate by the misuse of our own free-will, we shall seek to become wise. The future we are making is in our own hands today. We are today hampered by fate; but by knowledge of its workings, we may be able to overcome it, for knowledge is power. As we slowly cognise and realise the invariability and the inflexibility of the great moral laws of the God's universe, we shall choose to obey them with unbounded zeal. Then fate (limitations of circumstances and environment) will be overcome.

The subject of re-incarnation comes next. "If rebirth be true, why is it I do not remember my past lives?" is the question generally put by most people. Now, if one

wants proofs in the sense of a scientist proving a scientific discovery, we must recognise that such proof is quite impossible in the case of rebirth, but we can demonstrate logically that it is the only reasonable philosophic principle that can in any way satisfactorily account for the inequality of the human race and the varied and perplexing phenomena of human life. As a reasonable hypothesis, it must commend itself to the intellect as the only theory extant which meets the facts of human life and explain them. We must cognise the fact that evolution of the human soul is accomplished by means of successive returns to physical life; otherwise, the pivot on which the wheel of destiny turns will be wanting. The ideal of a sequence of lives on earth, each life taking up the thread of evolution and building faculties for the future tend more towards a life of moral purity and benevolence than the idea of an eternal heaven of song or a hell of unceasing torture as preached by some schools of thought which appear to be inconsistent and irrational with a dignified and lofty conception of an all wise and compassionate Providence. The brain of the present existence cannot remember a previous existence in which its cells were not the actors in the drama of life, but the soul retains the memory of the part it played as leading actor and it has brought over the cream of that memory in *character*. By nature's slow process which leads you from infancy to manhood, your personal life has been composed of distinct days, separated from each other by nights of sleep. Each day conditions the next. In the divine plan of evolution you are educated from the lowest stage of human littleness to the highest plane of godlike wisdom and power. Your individuality is therefore composed of distinct lives separated from each other by periods of withdrawal. In each life, you act and learn and form your own character; as is that character so must be the lives that follow and express it. The science of astrology demonstrates that rebirth is the law of human development. We come again and again to this world to improve,

advance and struggle upwards to perfection. True astrology thus explains and justifies the inequalities of human life. There is no accident but the self-generated effect of a previously existing cause. To realise this law and partly discern its workings acquits Providence, calms all resentment or discontent and vindicates justice. So we should all try to lead a nobler life stimulated by this knowledge.

" With each step the soul takes into the limitations of matter. Nature closes the door behind it, and thus shuts out the consciousness of the past in order that the present and the future may bring new experience." That is one of the reasons why we do not remember our past lives.

Now what is Karma ? Metaphysically considered, it is the law of retribution, the law of cause and effect. We act and certain consequences spring from our actions. So every cause must have its corresponding effect. The great law never fails. The stars are not the causes, they are the judges, the awarders of what we earn of good or evil ; and just in accordance with what we have done, thought or felt in the past, so are the conditions or the qualities of the matter in which we are working, these limitations constituting our Karma. It is in the make up of our own vehicles of consciousness that lies our fate and limitations. Life after life placed by Karma in environment after environment in which the soul can grow at last seizing to do evil we learn to do well to understand the law and work with it and thus win our freedom from the bonds of Nemesis.

We must never lose sight of the fact that the unbroken causation is the law everywhere and the harvest is according to the seed. The mind is the shuttle of destiny. We fashion our next horoscope by our mode of thinking in the current life. The rationale of working of the great law of self unfoldment is this :—We all generate thoughts and these thoughts take form. These forms clothe themselves with matter and are endowed with life of their own. They

are living creatures bad or good according as the thought is evil or beneficial. These thought-forms people our psychic atmosphere. They are in fact within our thought-sphere or aura and help to make our fate. We gave birth to these thought-children and we are responsible for them. They re-act upon us and form our habits, tendencies to act and think in a certain way and so create our character. Thus our character represents our past and governs our future. Therefore character is destiny. In a word thoughts are things. If our thoughts are pure and noble free from selfishness and fashion, we are a force in the world for good ; if foul and base a power for evil. Hour by hour we are spinning the web of thought which in the past produced our present destiny and are making hour by hour our future life. Realise therefore that thought is fate. For the soul working as mind creates a mental image. This mental image remains attached to its owner, a part of the contents of his consciousness. So it matters every thing to men and women as to how they are thinking. Their present happiness or misery and their future heaven or hell, are both alike the result of thought. Evil action is the outcome of evil thought. A good character is formed from good thoughts. All mental images eventually become powers of the soul. This body of ether on which the physical is built expresses the faculties the soul has evolved and also the limitations imposed upon it by its wasted opportunities and past failures. So we should realise that thoughts build character and actions make environment. Remembering that we become what we think, we shall control our thoughts and become what we choose to be masters of destiny. We cannot escape reaping the seed we have sown. The conditions and environments of our current life represent some of the seeds sown in our past but the way and the attitude with which we meet the conditions in which we find ourselves generates a fresh force of a different kind. Man is not altogether the slave of destiny, but so far as he creates his thoughts, he is its master. Astrology unfolds to man the law of his

own being. We must endeavour to extricate the mind from all that demoralises, cramps, limits or binds it and while extracting to the full the lessons which life has to teach us, resist to the utmost the alluring temptations of the desire nature which would make of the God a slave.

We should remember that the God within us seeks to express divine harmony through us ; but unfortunately, some keys are dumb in our human mechanism by our wrong and selfish thinking in the past births which prevent the vibrations from the Player. Our part, therefore, is to make the instrument more fitted for the Player, by trying to dominate the selfish and sensual nature. Let us therefore struggle with our lower nature and thereby we may save ourselves many eartholives. Our happiness depends on our character. It is already stated that man is a creature of reflection ; that which he thinks upon he becomes by force of the divine power within him. To think is to create. To realise is to become. Now suppose we are forced to realise that Truth is not an attribute of our character, but yet admiring it we aspire to become truthful ourselves. What we must do is this : We must deliberately think of Truth as an ideal virtue every day and then seek to practise it in the life. In a few years we shall have made a channel in ourselves through which the Divine Light of Truth will flow. This task is no doubt very hard requiring enormous patience and unflinching faith in the growth of mind by exercise. But we should remember we are building for eternity and the virtue once established is ours for all time of which none can rob us ; so, we may well take time and patience with eternity before us. For, when Truth has become one with our nature, all illusion and falsehood is impossible ; for, we then have the spiritual insight which pierces through all illusion. Thus we must build our character by Thought and Practice.

Let us look at this subject practically for a moment. It is a recognised truism that even worldly success is

ultimately referable to personal merit ; and in that noblest work of all that of building character, truth and integrity draw to us as a natural result success, honour and advancement on the material plane.

Astrology shows us what we are today ; it also teaches us what we can make of ourselves, the innate possibilities that we can live up to and thus it is one of the most useful factors in life for those who are attracted by its practical worth. Astrology not merely proclaims the doctrine of planetary influence but also deliverence from planetary influence. For the Will of man is free and the true man is divine. But to that emancipation and freedom the way is long and the path is rugged. Astrology teaches how we can work with the forces of nature to transcend our limitations of circumstances and environment, in a word Fate. Thus it becomes a science of life. It is literally true that by directed thought and action, we can make here and now the capacity we desire. It is evident then that Astrology is a practical as well as a divine science. Character in the past made the destiny of the present and the character of the present is making the destiny of the future.

The power of conquest lies within ourselves. We must realise the power and force of the soul—its innate, inherent, inalienable, ineffable, glory and freedom, being a part of the Universal Soul. People who lead good, pure, virtuous lives eventually get a happy environment. Having observed the Law of Harmony, the Law of God conscientiously they, as a matter of course receive harmony in the future birth. So Astrology is ethics scientifically applied. Unhappy fate is the result of transgression of moral law—God's Law.

As we use our Will in co-operation with stellar forces by aspiration and individual effort the higher notes of the scale of each planetary rate of vibration would come into play and progress will go on by leaps and bounds. By

striving to think and live purely, we throw out the coarser matter of impurity. In loving we throw out the coarser matter which can respond to the vibration known as hate ; and so on continuously replacing the grosser by the finer, ever travelling towards the centre of our being, the true and divine self within us and which is the immortal and eternal part of our being. It is therefore evident that meditation is the means to self-unfoldment.

Astrology traces our previous Karmas which have made us as per Laws of Nature what we are and advises the doing of some good Karmas in order to modify and mitigate the severe effects of previous evil karmas. Thus Astrology deals with the Laws of Nature governing human action and its effects, physical and mental. This is the rationale of Shanties or remedial measures.

As we think so do we become ; as we have made ourselves by our desires and thoughts so do the planets reflect us in our horoscope of birth. For the thought is the creative power the Divinity within us.

The Akasha is Nature's living memory. The living photograph of every instant of the life of a wish or thought cherished by us is automatically by a subtle process recorded in it. So all the wide-spreading results of its activities are charged with absolute justice against its creator. So it is only too true that as a man sows so does he reap. Realise the glory of this spiritual and moral teaching. The true purpose of life consists in first understanding it and then trying to shape the life in accordance with this knowledge, trying to live as befits the children of God using the divine and creative force to overcome the animal senses and selfishness and so to purify the mind as to reflect divine wisdom.

[The law of survival of the fittest is perhaps adapted to the development of the animal but self-surrender and self-sacrifice is the law of evolution of the True Man."

The emotional, mental and physical nature must be controlled and purified before anything that can in any sense be called Spiritual progress is attainable. By means of the grace of the divinities attained by mantras, we can set in motion forces to cleanse body and mind.]

If one desires to become an Astrologer, it is no use sitting down and crying "Astrology! Astrology!". A certain plan of work and study must be followed. One must first learn to compute the positions of the planets in all the ten vargas and in the Bhava Chakra, to prepare the Ashtakavarga with the Triangular and Ekadhypathya reductions and the Shad balas. And then he must read and re-read the different combinations for different kinds of Yogas, good and bad. If the sceptic desires to know whether astrology is true or not, he must follow certain rules, methods of work and research and if he practises them honestly he himself will discover the truth and be convinced. I have invariably found that men born with the owner of the Rising Sign in the 10th house and the lord of the 2nd in the 11th have married in their 15th year. Another gentleman aged about 38 who consulted me a few days ago, was surprised to see me predict his marriage so early as in his 12th year. The great sage Parasara gives the dictum that any man born with Guru in exaltation in the 7th house, will surely marry in his 12th year. The principles and dictums given in Parasara Hora are daily being verified by me to my entire satisfaction. For want of space let me not give more examples to testify to the accuracy of the principles enunciated by Parasara.

It is a thousand pities that the late Raja Sir T. Madhava Rao, in a hasty, thoughtless and impulsive mood should have gone to the extreme extent of publishing a pamphlet containing his peculiar and indefensible condemnations of such a sublime and helpful science as Astrology, the Queen of all sciences.

Uttara Kalamrutha is one of the standard works on Astrology attributed to Kalidasa of immortal fame. In 8

chapters of about 252 stanzas in all, the author has covered all aspects of astrology including Horary. In the 4th chapter the methods, given by him, in determining the strength of the planets and Bhavas are found to be somewhat at variance with Sri Pathi's principles.

Kalidasa was a contemporary of Vararuchi, Varahamihira and Amara Simha and he was one of the nine gems who adorned the court of King Vikramaditya. From Indian Historical records, it is found that he should have lived between 350 A.D. and 400 A.D.

The Tamil public are laid in a deep debt of gratitude to *Sriman S. A. Kumaraswami Acharyar* of Porto Novo for his Tamil translation of Uttara Kalamrutha. He has already made himself widely known in our province by his publications of Phala Dhipika, Sripathi Baddhathi and Saravali. I wish him many more years of prosperity and success in his researches and publications.

"SRI KASYAPA ASRAM"
307, *Mint Street,*
*Madras.*
*29th June,* 1944.

N. R. THIRUVENKATACHARIAR, B.A.

சிவமயம்.

## சிறப்புப்பாயிரம்.

சென்னைப் புரசை சர். எம். சி. டி. முத்தைய செட்டியார் அவர்கள்
உயர்தரக் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர்
வித்வான் திருவாளர் சோ. அருணாசல தேசிகர் அவர்கள்
இயற்றியது.

---

புகழ்மிகு பறங்கிப் பேட்டைமா நகரிற்
பொற்பமர் விச்சுவ குலத்தில்
திகழ்தரு மேகாம் பரஞ்செயுந் தவத்தாற்
செகத்திடை தோன்றிய புலவன்
மகிழ்மிகு கணியாய்க் கணிதசாத் திரத்தின்
வகைகளை யுணர்ந்த சீராளன்
நிகழ்தரு கால நிலைமைதேர் கணிதம்
நேர்தரு வைத்திய நூல்கள். 1

மேதகுஞ் சாரா வளிமுத லான
வெளியிடுந் திறலினன் மிக்கோன்
நீதிசேர் குமார சுவாமியென் றுலகில்
நிலவிய பெரும்பெய ராளன்
காதலாற் கவிஞர் ரத்தின மான
காளிதா சப்பெரும் புலவன்
ஓதுமுத் தரகா லாமிருதந் தன்னை
யுயர்தமிழ் தனின்மொழி பெயர்த்தான். 2

சென்மலெட் சணகா லந்தரு காண்டந்
திகழ்பல சாதன காண்டம்
மன்னிய வாயுர்த் தாயமாங் காண்டம்
வருகிரக பாவநற் பலமே

பன்னுகா ரகத்வ காண்டமே தசையின்
பலனுரை காண்டமே பிரச்னம்
இன்னறும் விவித பலனுரை காண்ட
மெனமொழி காண்டமெட் டதற்கே. 3

ஓதிய வெட்டுக் காண்டமுள் ளுடைத்தா
யுத்தமப் பலனுணர்த் துவதாய்
மேதகு முறைத்தாய் விளங்குமிந் நூலை
வியந்துமேற் கொளத்தமிழ் தனிலே
நீதியி னச்சிட் டளித்தவிப் பெருமை
நிலவுல கத்தினும் பெரிதே
ஆதலாற் குமார சாமிசெய் யுதவிக்
காமெதிர் செய்திட வலரே. 4

சாலிவா கனமா யிரத்தெண் ணூ றதன்மேல்
சார்தரு பத்தாறி னைந்தில்
பாலதாம் சித்ர பாநுவிற் சீர்சால்
பறங்கியம் பேட்டையில் வாழ்வோன்
சீலமார் குமார சுவாமி யாச்சாரி
திறம்பெறு கணிதசாத் திரத்தோன்
கோலமா ருத்ரகா லாம்ருதந் தமிழிற்
குணமுற வெழுதின னினிதே. 5

வேறு

இத்திற காண்ட மெட்டினைக் கூறி
எங்கணும் புகழ்படைத் திருப்போ
னுத்தம பலன்க ளொப்பன செப்பி
யொன்பதின் கோள்வழி பாடே
பத்திசெய் நெறியிற் பயின்றரு நிலையைப்
பகவதி காளியே யருளென்
சித்தமார் குமார சாமியாங் குரிசில்
சீர்த்திகொள் சோதிடக் கணியே. 6

உ

குகமயம்.

ஓம் குமார குருப்யோ நம:

# வைத்திய ரத்ந வசன பூஷணம்.

## (சிறந்த வைத்திய நூல்)

***தும்பி மாமுகத் தூயோர்க் கிளைய***
***தம்பி யெம்பரற் ருழ்ந்திது சாற்றுவாம்.***

உலகினர் யாவரும் தங்கள் தங்கள் தேகத்தைத் திடப்படுத்திக் கொண்டால்தான் சதுர்வித புருஷார்த்தங்களையும் பெறலாம். ஆகவே, நம்மிடர் நோய்களைக் களையத்தக்க மார்க்கங்களைப் போதிக்க வல்ல வைத்திய நூல்களை ஆய்ந்தறிய வேண்டும். அன்றியும் மருந்து ஆக்கும் முறைகளைத் தெரிந்து கொள்ளவும் வேண்டும். அவ்வித மாக்கிய மருந்துகளைச் சாப்பிட்டுச் சௌக்கியமுமடைய வேண்டும்.

நம்முடைய பழைய முறைகளை நம்முடைய தேசத்துக்கும் தேகத்திற்கும் தக்கபடி அநுசரித்து வந்தால் நாம் ஆரோக்கிய மடைவோம். பிறநாட்டுப் புது முறைகளைக் கையாடுவதிலும் நம் நாட்டுப் பழைய முறைகளை அநுசரிப்பதே மேலானது. அன்றியும் அப்படிப்பட்ட நூல் ஒன்று வெளிவருவதும் மேலானதே.

இந்த விஷயங்களை அநுசரித்தே எனது முன்னோர்கள் எழுதிவைத்திருந்த சில ஏட்டுப் பிரதி முறைகளைக் கொண்டு இந்த நூலை வெளிப்படுத்தி யிருக்கிறேன்.

இந்நூலில் பொதுவிதிகள் நாடிலட்சணம், மருந்துகளின் சுத்திமுறைகள், சூரணம், கஷாயம், பாகு (ஷர்பத்து), மாத்திரை, பற்பம், செந்தூரம், மெழுகு, தைலம், லேகியம், திராவகம், பொதுவினம், கலம்பகம் முதலிய அரியபெரிய முறைகள் மிகத் தெளிவாய் கூறப்பட்டிருக்கின்றன.

வைத்தியர்களின் உதவியின்றி ஒவ்வொருவரும் செய்து சித்தி பெறலாம்.

செலவுடன் பிரதி 1-க்கு ரூ. 3-8-0

**சு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரி,**
நெ. 2346. **R. I. M. P.**
2. ஏகாம்பர ஆச்சாரி வீதி,
பறங்கிப்பேட்டை.

## சூசிபத்திரம்.


| அத்தியாயம் | விஷயம் | | சுலோகம் | | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 1. | ஜென்ம லட்சணம் | .... | 11 | .... | 3. |
| 2. | பல சாதனம் | .... | 22½ | .... | 8. |
| 3. | ஆயுர்த்தாயம் | .... | 8 | .... | 19. |
| 4. | கிரக பாவபலம் | .... | 45 | .... | 22. |
| 5. | காரகத்துவம் | .... | 54½ | .... | 41. |
| 6. | தசாபலம் | .... | 42½ | .... | 56. |
| 7. | பிரசினம் | .... | 19 | .... | 69. |
| 8. | பிரகீரணம் | .... | 50 | .... | 75. |


குறிப்பு: மேலே கூறப்பெற்றுள்ள அத்தியாயங்களைக் கொண்டே ஒவ்வோர் அத்தியாயத்தின் உள்ளுறைப் படலங்களைத் தெரிந்து கொள்ளல் எளிதாதலின் இவ்வுத்தர காலாமிருதத்தின் படல விஷய சூசிகை எழுதுதலை நிறுத்திக் கொண்டனன். சுபம்.

உ

குகமயம்

ஓம் குமார குருப்யோ நம :

# வேண்டுகோள்.

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்."

அன்பிற் பெரியீர் ;

"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

எனக் கூறிப்போந்த பெருநாவலர் ஓரிடத்தே அக்குறள் போன்ற வழியிலேயே,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

என்றுங் கூறுகின்றனர். இவற்றின் உள்ளுறைப் பொருள்கள் நூலிடத்தும் நூலை யுரைப்போனிடத்தும் கேட்கப் பெறுவன வற்றுள் நல்லன கொள வேண்டு மென்பதே யாகும்.

அதனை யொட்டியே இந்நூலை இயற்றினோரல்ல எழுதினோ ரிடத்தும் பதித்த பதிப்பித்த இருவரிடத்தும் காணப் பெறும் "குற்றங் கடிந்து"

"அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கால்
இன்மை யரிதே வெளிறு"

என்றாங்கு கொள்ளுமாறும், பிழைகளைக் கண்டு தெரிவித்து மறு பதிப்பில் வெளியிட உத்தரவாமாறும் பணிந்து வேண்டிக் கொள்ளுகின்றனன். சுபம்.

பறங்கிப்பேட்டை
விரோதி ஸ்ரீ சிம்ம ரவி

இங்ஙனம்,
சு. ஏ. குமாரஸ்வாமி

உ

குகமயம்.

ஓம் குமார குருப்யோ நமஃ:

# உத்தரகாலாமிருதம்.

### துதி.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

### விநாயகர்.

ஏரணமா மறைவிளங்க இபமுகங்கொண் டானை
எங்குநிறை பவானிதனக் கினியசுதன் தன்னைப்
பூரணமா முருத்திரன்கஞ் சன்திருமால் தேவர்
புருகூதன் முதலமரர்க் குதவிவரு முதலைக்
காரணமா மோதகம்பா சங்கரங்கொண் டானை
கருணைநிறை இரவிகுலத் துற்பவித்த வேந்தன்
நாரணநேர் விக்கிரமா தித்தர்க்குக் கோவை [மே.
நண்ணிமலர் பொன்னடியை யெண்ணியிறைஞ் சுது

### ஸ்ரீ அம்பாள்.

இக்கண்ணி யமருமதற் கிடங்கொடுத்துச்
சங்காழி இலகுங் கையாள்
அக்கண்ணி யாரொடடல் ஏறுகைத்து
விளையாடும் அன்னை பங்க
சக்கண்ணி ரவிகுலவிக் கிரமாதித்
தற்குநலம் தந்த தையல்
முக்கண்ணி முளரியடி யெம்முடிக்கு
முடியாக முன்கொள் வோமே.

### வேறு.

எண்ணி யேத்து மியல்பினர் தங்களைக்
கண்ணி யாங்கவர் கன்மங் களைபவள்
தண்ணி லாவைச் சடையிடங் கொண்டவள்
உண்ணி லாவி யுயர்திரு நல்குமே.

## வழிபடு கடவுள்.

பெண்ணுரு பாகன் விருப்புறு குமரன் பெரிதெம்பால்
கண்ணருள் செய்வோன் வள்ளிதன் கேள்வன் கணநாதர்
பண்ணிய பாடல் பலபல கேட்டுப் பரிசிவான்
எண்ணிய வாறே துணையெமக் காகு மியலானே.

### நூலாசிரியர் துதி

ஓரையதின் சாத்திரத்தை யுள்ளபடி
யாவருமே யுணரும் வண்ணம்
காரையொத்த கருணையினாற் கைம்மாறு
கருதாமற் கணித்துத் தந்து
போரையென்றும் புறத்தாக்கி வென்றிபெறு
விக்கிரம பூபன் போற்ற
நீரையொத்த தண்ணளிசார் கவிரத்ந
காளிதாசன் நீடு வாழி.

### வித்தியாசிரியர் துதி

நீர்பரவி நிலஞ்செழித்து நென்மலியும்
பறங்கிநகர் நிலைத்து வாழ்வோன்
பேர்பரவு முருகனிரு திருத்தாளை
யெஞ்ஞான்றும் பேணுஞ் சீலன்
பார்புகழும் பைந்தமிழு மாங்கிலமும்
சுவேதருக்குப் பயிற்றும் பண்பன்
சீர்மருவு முத்துத்தாண் டவராயன்
மலரடியைச் சிரமேற் கொள்வாம்.

## நூல்.

## முதலாவது அத்தியாயம்.

## ஜன்ம லட்சணம்.

**முதற் சுலோகம் :**

*ஸ்ரீமத் வக்த்ர சதுஷ்ட்யாச்சுதஹர சுவர்ஞய காத்யைஃ சுரைஃ |*
*கார்யாரம்பவிதௌ சமர்ச்சித பதத்வந்துவம் த்விபேந்திரானனம் ||*
*பாசாத்யாயுத லட்டுகப்ரவிலசத்தஸ்தைஸ்ச சதுர்ப்பிர்யுதம் |*
*ஸ்ரீமத் விக்கிரம சூரிய பாலன பரம்வந்தே பவானிசுதம் ||.*

### விநாயகர்.

**சுலோ.** *1 :—யானை முகத்தை யுடையவரும், பவானி தேவியாருக்கு மைந்தரும், எந்தக் காரியத்தை ஆரம்பிக்கும் பொழுதும் பிரமா-விஷ்ணு-சிவன்-இந்திரன்-முதலான தேவர்களாலும் பூஜிக்கப்படுபவரும், நான்கு திருக்கரங்களிலும் பாசம் முதலிய ஆயுதங்களையும் இனிப்பான மோதகம் முதலியவைகளையும் வைத்துக் கொண்டிருப்பவரும், சூரிய வம்சத்தைச் சேர்ந்த விக்கிரமார்க்க மகாராஜனின் வழிபடு தெய்வமுமான ஸ்ரீ கணபதியை நான் நமஸ்கரிக்கின்றேன்.*

### அம்பிகை.

**சுலோ.** *2 :—சரீரத்தின் இடது பாகத்தில் மன்மதன் வசிக்க இடங்கொடுத்தவளாயும், கைகளில் சங்கு சக்கரங்களைத் தரித்தவளாயும், பக்தர்களுக்கு வரங்கொடுத்து ரட்சிப்பவளாயும், சிம்மத்தின்மீது வீற்றிருப்பவளாயும், பிறையை இடது பாகத்தில் தரித்த சிவபெருமானோடு விளையாடுபவளாயும், மூன்று நேத்திரங்களுடையவளாயும், சூரிய வம்சத்தைச் சேர்ந்த விக்கிரமார்க்க மகாராஜனுக்கு க்ஷேமத்தைக் கொடுப்பவளாயும் உள்ள ஸ்ரீ காளிகா தேவியை நான் நமஸ்கரிக்கின்றேன்.*

### ஜனன காலம்-நவக்கிரகங்கள்-பாவங்கள் இவைகள் சொல்லப்படுகின்றன.

**சுலோ.** *3 :—இந்நூலின் பூர்வ பாகத்தில் ராசி-கிரகங்களின் சொரூபம்-காரகம் முதலியன விஸ்தாரமாகச் சொல்லப் பெற்றுள்ளன.*

இந்நூலின் உத்தர பாகத்தில் வித்வான்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுப்பதற்காக 1. ஜாதகங்களைத் தெரிந்து கொள்ளுவதும்; 2. பிரசினை பற்றித் தெரிந்து கொள்ளுவதும்; 3. பூத-பவுஷ்ய-வர்த்தமானங்களின் நுட்பமான பலாபலன்களை நிச்சயமாகத் தெரிந்து கொள்ளுவதும் ஆகிய இவைகளை விளக்கமாகக் கூறுகின்றேன்.

**சுலோ. 4:**—ஜனன காலத்தில் சூரிய உதயத்திலிருந்து நிச்சயமாக எத்தனை நாழிகை விநாடிகள் சென்றிருக்கின்றனவென்பதை யந்திரங்கள் மூலமாக அறிந்து கொள்ளல் வேண்டும். பிறகு ஜனனமான தேதியில் பகல் மானம் இராத்திரி மானம் இவ்வளவென்பதையும் அறிந்து கொள்ளல் வேண்டும். இதன் பின் சூரியன் மேடத்திலிருந்து எங்கே யிருக்கின்றார் என்று கண்டுகொண்டு இலக்கினத்தைக் கணித்துக் கொள்ளல் வேண்டும். இதன் பின்னர் குருவின் ஆசீர்வாதத்தினால் **திருக்கணித** முறைப்படி கிரகங்கள் இராசிகளில் இருக்குமிடங்களைத் தெரிந்து கொள்ளல் வேண்டும். பின்பு பாவங்களையும்-பாவ சந்திகளையும் அறிந்து கொள்ளல் வேண்டும். இவைகளை எல்லாம் ஜோதிஷத்தில் அதிக பயிற்சியுள்ள தைவக்ஞரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

**சுலோ. 5:**—சூரிய உதயத்திலிருந்து சென்ற நாழிகை விநாடிகளை நான்கினால் பெருக்கி வந்த தொகையை 9-ஆல் வகுக்க வந்த சேடம் ஜன்ம நட்சத்திரமும் அதன் திரிகோண நட்சத்திரமுமாகும்.

**உதாரணம்:**—சேடம் 1: ஆயின் அசுவினி மகம் மூலம். 2: ஆயின் பரணி பூரம் பூராடம். 3: ஆயின் கார்த்திகை உத்திரம் உத்திராடம் ஆம். இங்ஙனமே மற்றவைகட்கும் கொள்க.

அன்று சூரிய உதயத்திலிருந்து சென்ற நாழிகை விநாடிகளை விநாடிகளாக மாற்றி 225-ஆல் வகுத்து வந்த சேடத்தைக் கீழ்க் கண்டபடி 15. 30. 45. 60. 75. விநாடிகளாகக் கொள்க.

**சுலோ. 6:**—இந்த விநாடிக் கூட்டங்கள் முறையே ஆண்-பெண்-ஆண்-பெண்-ஆண் என்று குறிப்பிடுகின்றன.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சேடமானது | ஒன்று முதல் | 15க்குள் | இருப்பின் | ஆண் | சிசு | ஜனிக்கும் |
| ,, | 15க்குமேல் | 45க்குள் | ,, | பெண் | ,, | ,, |
| ,, | 45 ,, | 90க்குள் | ,, | ஆண் | ,, | ,, |
| ,, | 90 ,, | 150க்குள் | ,, | பெண் | ,, | ,, |
| ,, | 150 ,, | 225க்குள் | ,, | ஆண் | ,, | ,, |

சந்திரனும் குளிகனும் இருக்கும் ராசியையும் நவாம்சத்தையும் கண்டு பிடிக்கவேண்டும். இவைகளில் சந்திரனுடைய ராசியோ குளிகனுடைய ராசியோ இவ்விரண்டில் எது பலமுளதோ அது ஜன்ம லக்கினமாகும். அல்லது மேற் சொல்லப்பட்ட இவ்விரண்டிடங்களில் ஏதேனுமொன்றிலிருந்து 5-7-9 ஆமிடங்கள் இலக்கினமாகும்.

சந்திரனும் குளிகனும் இருக்கும்படியான நவாம்ச ராசிகள் பலமாயிருந்தால் இலக்கினமானது அவ்விரண்டு நவாம்ச ராசிகளில் பலமுள்ள நவாம்ச ராசிகளிலிருந்து மேற்கூறிய பிரகாரம் 5-7-9 ஆமிடங்கள் இலக்கினமாகும்.

**குறிப்பு** :—இந்நூலாசிரியரால் சொல்லப்பட்ட இலக்கின நிச்சய முறையானது ஸ்ரீமந்த்ரேஸ்வர முனிவர் கூறிய **பல தீபிகைக்கு** ஒத்து வருவதில்லை. ஏனென்றால் ஜனன காலத்தில் குளிகன் அல்லது சந்திரன் இருக்கும் இடத்தைக் கொண்டு இந்நூலாசிரியர் இலக்கினத்தை நிர்ணயிக்கின்றார்.

ஜனன காலத்தில் குளிகன் இருக்கும் இராசியையும், அக்குளிகனிருக்கும் இராசியாதிபதி இருக்கும் ராசியையும் அறிய வேண்டும். இலக்கினமானது குளிகன் இருக்கும் ராசியாதிபதிக்குத் திரிகோணமாகவோ, அல்லது குளிகன் இருக்கும் நவாம்சாதிபதி இருக்கும் நவாம்ச ராசிக்குத் திரிகோண மாகவோ இருக்கும். சந்திரன் பலம் பெற்றிருப்பின் இலக்கினத்தைச் சந்திரனைக்கொண்டு நிச்சயிக்கவேண்டும். இவ்விதி குளிகனைக்கொண்டு நிச்சயிக்கக் கூடாது.

**சுலோ.** 7 :—தினமானத்தின் பிரமாணம் எத்தனை கடிகைகளிருக்கின்றனவோ அவைகளை 26-22-18-14-10-6-2 இவைகளால் பெருக்கி முறையே 30-ஆல் வகுத்து வந்த ஈவு பகலில் ஆதிவாரம் முதல் சனி வாரம் வரையில் சனியின் புத்திரனாகிய **குளிகனுடைய** காலங்களாம்.

பகல் மானம் அல்லது இரா மானத்தை 8 ஆல் வகுத்து வந்த ஈவு கிரகங்களின் பாகங்களாகும். பகலில் முதல் 7 பாகங்களுக்குச் சூரியன் முதல் சனி வரையில் 7 கிரகங்களும் அதிபர்கள் ஆவர்.

**சுலோ.** 8 :—முன் 8-ஆல் வகுத்து வந்த கடைசிப் பாகத்திற்கு அதிபர்களில்லை. ஒவ்வொரு நாளிலும் சனியினுடைய பாகத்திற்குக் **குளிகன்** என்று பெயர். இரவில் முதல் 7 பாகங்களுக்கு அதிபர்கள் 5ஆவது வாரத்திலிருந்து முன் கூறப்பெற்ற பிரகாரம் எண்ணி வந்த கிரகங்கள். இதில் சனியினுடைய முகூர்த்தமானது குளிக காலமாம். குளிகன் இருக்கும் நிலை அவ்விலக்கினத்திற்குக் கடைசிப் பாகமாகும்.

சனி புத்திரர்களான **மாந்தியும்-குளிகனும்** மிகவும் கொடியவர்கள். இவர்கள் தாமிருக்கும் பாவத்தை நாசமாக்குகின்றார்கள் என்று **மாண்டவ்ய மகருஷி** கூறுகின்றார்.

**சுலோ.** 9 :—ஜன்மலக்கினமானது மேடம்-கடகம்-துலாம்-விருச்சிகம்-கும்பம் இவைகளாய் இருப்பின் சிசு ஜனித்த அறை அல்லது இடமானது வீட்டின் கீழ்ப் பாகமாய் இருக்கும். இலக்கினம் சிம்மம் அல்லது மகரமாய் இருப்பின் சிசு ஜனித்த அறை அல்லது இடமானது வீட்டின் தென் பாகமாய் இருக்கும், இலக்கினம் விருஷபமாய் இருப்பின் சிசு ஜனித்த அறை அல்லது இடமானது வீட்டின் மேல் பாகமாய் இருக்கும். இலக்கினம் மிதுனம்-கன்னி-தநுசு-மீனமாய் இருப்பின் சிசு ஜனித்த அறை அல்லது இடமானது வீட்டின் வடபாகமாய் இருக்கும்,

**சுலோ.** 10 :—ஜன்ம லக்கினத்தைச் சந்திரன் பார்க்காமலிருக்கச், சூரியன், முறையே சரம்-ஸ்திரம்-உபயம் இவ்விராசிகளில் இருந்து அது இலக்கினத்திற்கு 9 ஆமிடம் அல்லது 8 ஆமிடம் இவைகளில் இருந்தால் ஜாதகனின் பிதா ஜனன காலத்தில் வெளியூரிலும், உள்ளூரிலும், வழியிலும் இருப்பார் என்றுசொல்க.

**சுலோ.** 11 :—இலக்கினத்திற்கும் சந்திரனுக்கும் இடையில் எத்தனை கிரகங்களிருக்கின்றனவோ அத்தனை ஸ்திரீகள்

# முதலாவது அத்தியாயம்.

சிசுவின் ஜனன காலத்தில் தாயின் சமீபத்திலிருப்பார்கள். இலக்கினம் சந்திரன் இவர்களுக்கு வெளியில் எத்தனை கிரகங்கள் இருக்கின்றார்களோ அத்தனை ஸ்திரீகள் பிரசவ அறைக்கு வெளியில் இருப்பார்கள். சிசு ஜனிக்கும் அறையில் உள்ள விளக்கில் எண்ணெய் **சந்திரன்** இராசியில் எவ்வளவு தூரம் செல்ல வேண்டுமோ அவ்வளவு அளவு இருக்கும். விளக்கில் எரியும் திரியானது **சூரியன்** எவ்வளவு சென்றிருக்கின்றானோ அவ்வளவு எரிந்திருக்கும். விளக்கு எவ்வாறிருக்கின்றது என்பது சூரியன் இருக்கும் இராசியில் இருந்து கண்டு பிடிக்கலாம். எவ்வாறெனில் சூரியன் சர ராசியில் இருப்பின் விளக்கு கையில் எடுத்துக் கொண்டு போகக் கூடியதாய் இருக்கும். சூரியன் ஸ்திர ராசியில் இருப்பின் ஸ்திரமாய் விளக்கு இருந்த விடத்திலேயே இருக்கும். சூரீயன் உபய ராசியில் இருப்பின் இரண்டு விதத்திலும் உபயோகிக்கக் கூடியதாய் இருக்கும்.

சூரியன்-சுக்கிரன்-செவ்வாய்-இராகு-சனி-சந்திரன்-புதன்-குரு இவர்கள் முறையே கிழக்கு-தென்கிழக்கு-தெற்கு-தென் மேற்கு-மேற்கு-வடமேற்கு-வடக்கு-வடகிழக்கு இத்திக்குகளுக்கு அதிபர்கள் ஆவர்.

சிசு ஜனித்துள்ள அறையின் கதவு எந்தத் திக்கில் இருக்கின்றதென்பதைக் கேந்திரங்களில் உள்ள கிரகங்களைக் கொண்டும், அல்லது அவைகளில் எவை பலம் பெற்றிருக்கின்றனவோ அவைகளைக் கொண்டும், அல்லதாவது கேந்திரத்தில் ஒரு கிரகத்திற்கு மேலிருந்தால் அவைகளில் எது பலம் பெற்றிருக்கின்றதோ அதைக் கொண்டும் சிசுவின் ஜனன அறையின் கதவுள்ள திக்கைத் தெரிந்து கொள்ளலாம். கேந்திரங்களில் கிரகங்கள் இல்லாவிடின் கேந்திரங்களில் எந்தக் கேந்திரம் பலம் பெற்றிருக்கின்றதோ அந்தத் திக்கைச் சொல்ல வேண்டும்.

முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

# இரண்டாவது அத்தியாயம்.

## பல சாதனம்.

### கிரகங்களின் பலவகைப் பலத்தை அறிதல்.

**ஸ்லோ.** *1:*—பன்னிரண்டு ராசிகளும் ஒவ்வொன்றும் தனக்குக் கிழக்கிலிருந்து மேல் நோக்கிச் செல்லுகின்றன. இலக்கினத்திலிருந்து 6 இராசிகள் (1, 2, 3, 4, 5, 6) இவை ஜாதகனுடைய **வலது பக்கத்தையும்**, மற்ற 6 இராசிகள் (7, 8, 9, 10, 11, 12) இவை ஜாதகனுடைய **இடது பக்கத்தையும்** குறிப்பிடுகின்றன.

மேலே சொல்லப்பட்ட இராசிகளான 7, 8, 9, 10, 11, 12 ஜாதகனின் களத்திரத்தின் **வலது பாகத்தையும்**, 1, 2, 3, 4, 5, 6 ஜாதகனின் களத்திரத்தின் **இடது பாகத்தையும்** குறிப்பிடுகின்றன.

இலக்கினம் ஜாதகனின் உயிர் அல்லது ஆத்மாவையும், ஜன்ம ராசி அல்லது சந்திரனிருக்கும் ராசி தேகத்தையும் குறிப்பிடுகின்றன. இலக்கினம் சந்திரன் இவைகளைக் கொண்டும் இவ்விடங்களின் அதிபர்களைக் கொண்டும் அவ்வதிபர்கள் இருக்கும் பாவங்களைக் கொண்டும் †அப்பாவகாரகர்களைக் கொண்டும் ஜாதகனுடைய உயிர் உடல் இவைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.

**† பாவகாரகர்கள்.**

| | |
|---|---|
| இலக்கின பாவத்திற்கு : | சூரியன். |
| தன பாவத்திற்கு : | குரு. |
| மூன்றும் பாவத்திற்கு : | செவ்வாய். |
| நான்காம் பாவத்திற்கு : | சந்திரன்-புதன். |
| ஐந்தாம் பாவத்திற்கு : | குரு. |
| ஆறும் பாவத்திற்கு : | சனி-செவ்வாய். |
| ஏழாம் பாவத்திற்கு : | சுக்கிரன். |
| எட்டாம் பாவத்திற்கு : | சனி. |

ஒன்பதாம் பாவத்திற்கு : சூரியன்-சனி-குரு.
பத்தாம் பாவத்திற்கு : குரு-சூரியன்-புதன-சனி.
பதினோராம் பாவத்திற்கு : குரு.
பன்னிரண்டாம் பாவத்திற்கு : சனி.

**சுலோ. 2, $2\frac{1}{2}$. சூரியாதி கிரகங்களின் மித்துருக்கள்.**

**சூரியனுக்கு :** சந்திரன்-செவ்வாய்-குரு-மித்துருக்கள்.
**சந்திரனுக்கு :** சூரியனும்-புதனும்-மித்துருக்கள்.
**செவ்வாய்க்கு :** சூரியன்-சந்திரன்-குரு-மித்துருக்கள்.
**புதனுக்கு :** சூரியனும்-சுக்கிரனும்-மித்துருக்கள்.
**குருவிற்கு :** சூரியன்-சந்திரன்-செவ்வாய்-மித்துருக்கள்.
**சுக்கிரனுக்கு :** புதனும்-சனியும்-மித்துருக்கள்.
**சனிக்கு :** புதனும்-சுக்கிரனும்-மித்துருக்கள்.

**சூரியாதி கிரகங்களின் சத்துருக்கள்.**

**சூரியனுக்கு :** சுக்கிரனும்-சனியும்-சத்துருக்கள்.
**சந்திரனுக்கு :** சத்துருக்களே யில்லை.
**செவ்வாய்க்கு :** புதன் சத்துரு.
**புதனுக்கு :** சந்திரன் சத்துரு.
**குருவிற்கு :** புதனும்-சுக்கிரனும்-சத்துருக்கள்.
**சுக்கிரனுக்கு :** சூரியனும்-சந்திரனும்-சத்துருக்கள்.
**சனிக்கு :** சூரியன்-சந்திரன்-செவ்வாய் சத்துருக்கள்.

**சூரியாதி கிரகங்களின் சமமானவர்கள்.**

**சூரியனுக்கு :** புதன் சமமானவர். [வர்கள்.
**சந்திரனுக்கு :** செவ்வாய்-குரு-சுக்கிரன்-சனி சமமான
**செவ்வாய்க்கு :** சுக்கிரன் சனி சமமானவர்கள்.
**புதனுக்கு :** செவ்வாய்-குரு-சனி சமமானவர்கள்.
**குருவிற்கு :** சனி சமமானவர்.
**சுக்கிரனுக்கு :** செவ்வாய்-குரு-சமமானவர்கள்.
**சனிக்கு :** குரு சமமானவர்.

இரண்டு கிரகங்கள் தத்காலிக மித்துருக்கள், அல்லது தத்காலிக சத்துருக்கள் என்பதையும் நைஸர்க்கிக அல்லது சுபாவீக சத்துருக்கள் அல்லது மித்துருக்கள் என்பதையும் கொண்டு

இவைகள் அதிமித்துரு அதிசத்துரு என்பதையும் அறிதல் வேண்டும்.

**குறிப்பு.** ஒருவருக்கொருவர் 2, 3, 4, 10, 11, 12 இவ்விடங்களில் இருந்தால் தற்கால மித்திரர்களாம். ஒருவருக்கொருவர் 1-5-6-7-8-9 இவ்விடங்களில் இருந்தால் தற்கால சத்துருக்களாம். இதையும் நைஸர்க்கிகமான சத்துரு மித்துருக்களையும் அறிந்து சொல்லல் வேண்டும். மித்துருவும் மித்துருவுமானால் **அதிமித்துரு** வென்றும், சத்துருவும் சத்துருவுமானால் **அதிசத்துரு** வென்றும், சமமும் மித்துருவுமானால் **மித்துரு** வென்றும், சமமும் சத்துருவுமானால் **சத்துரு** வென்றும், மித்துருவும் சத்துருவுமானால் **சம** மென்றும் அறிந்திடுதல் வேண்டும்.

**சுலோ.** $2\frac{1}{2}$-$3\frac{1}{2}$ :—**மேஷாதி ராசிகளின் அதிபர்கள்.**

செவ்வாய் - சுக்கிரன் - புதன் - சந்திரன் - சூரியன் - புதன் - சுக்கிரன் - செவ்வாய் - குரு - சனி - சனி - குரு இவர்கள் மேஷாதி ராசிகளின் அதிபர்களாம். அதில் முதலாவது இராசியாம். ஒரு ராசியின் அரைப் பாகத்திற்கு ஓரையென்று பெயர். ஒரு ராசியின் மூன்றிலொரு பாகத்திற்குத் திரேக்காணம் என்பது பெயர். இராசிகளை மற்ற விதங்களிலும் பிரிக்கலாம். அஃதாவது ஒரு ராசியின் ஏழில் ஒரு பங்கிற்குச் சப்தமாம்சம் என்று பெயர். ஒரு ராசியின் ஒன்பதில் ஒரு பங்கிற்கு நவாம்சம் என்று பெயர். ஒரு ராசியின் பன்னிரண்டிலொரு பங்கிற்குத் துவாதசாம்சம் என்று பெயர். ஒரு ராசியின் முப்பதிலொரு பங்கிற்குத் திரிம்சாம்சம் என்று பெயர்.

**சுலோ** $3\frac{1}{2}$-5 :—**மூலத் திரிகோண விராசிகள்.**

சிம்மம் - விருஷபம் - மேடம் - கன்னி - தநுசு - துலாம் - கும்பம் இவ்விராசிகள் சூரியன் முதலான கிரகங்களுக்குக் கிரமமாய் மூலத்திரிகோண வீடுகளாம்.

**உச்சவிராசிகள்** :—மேடம் - இடபம் - மகரம் - கன்னி - கடகம் - மீனம் - துலாம் இவ்விராசிகள் சூரியன் முதலான கிரகங்களுக்குக் கிரமமாய் உச்ச வீடுகளாம்.

தனது **உச்ச வீட்டிலிருக்கும் கிரகம்** ஒரு ரூபம் உடையதாம். அம்ஸதாவது 60 கலை பலமுடையதாகும்.

தனது **மூலத்திரிகோண வீட்டிலிருக்கும் கிரகம்** முக்கால் ரூபம் உடையதாம். அம்ஸதாவது 45 கலை பலமுடையதாகும்.

தனது **ஆட்சி வீட்டிலிருக்கும் கிரகம்** அரை ரூபம் உடையதாம். அம்ஸதாவது 30 கலை பலமுடையதாகும்.

தனது **மித்துரு வீட்டிலிருக்கும் கிரகம்** கால் ரூபம் உடையதாம். அம்ஸதாவது 15 கலை பலமுடையதாகும்.

தனது **அதிமித்துரு வீட்டிலிருக்கும் கிரகம்** காலே அரைக்கால் ரூபம் உடையதாம். அம்ஸதாவது $22\frac{1}{2}$ கலை பலமுடையதாகும்.

தனது **சத்துரு வீட்டிலிருக்கும் கிரகம்** வீச ரூபம் உடையதாம். அம்ஸதாவது $3\frac{3}{4}$ கலை பலமுடையதாகும்.

தனது **அதிசத்துரு வீட்டிலிருக்கும் கிரகம்** அரை வீச ரூபம் உடையதாம். அம்ஸதாவது 1 கலை $52\frac{1}{2}$ விகலை பலமுடையதாகும்.

தனது **சமன் வீட்டிலிருக்கும் கிரகம்** அரைக்கால் ரூபம் உடையதாம். அம்ஸதாவது $7\frac{1}{2}$ கலை பலமுடையதாகும்.

**சுலோ. 6 :—வக்கிரத்திலிருக்கும் கிரகம்** உச்சத்திலிருக்கும் கிரகத்திற்குச் சமான முடையதாகும்.

ஒரு கிரகம், **வக்கிர கதியோடுள்ள கிரகத்துடன் சேர்ந்திருப்பின்**† ஆட்சியிலிருக்கும் கிரகத்திற்குச் சமான முடையதாகும். (ஆட்சி = அரை ரூபம். 30 கலை).

ஒரு கிரகம்-தன்னுடைய **உச்சவீட்டில் வக்கிரகதியோடிருப்பின்** அது நீச பலத்தைக் கொடுக்கும் கிரகத்திற்குச் சமான முடையதாகும். (அம்ஸதாவது பலஹீனமடைகின்றது).

ஒரு கிரகம்-நீசத்திலிருந்து கொண்டு **வக்கிரகதியை** அடைந்திருப்பின் அந்த **நீசக் கிரகம்** உச்ச பலனைக் கொடுக்கும் கிரகத்திற்குச் சமானமுடையதாகும்.

ஒரு கிரகம், உச்சமாயிருக்கும் மற்றொரு கிரகத்தோடு சேர்ந்திருப்பின் † **ஆட்சியிலிருக்கும்** கிரகத்திற்குச் சமான முடையதாகும். (அரை ரூபம். 30 கலை).

ஒரு கிரகம் **நீசக்கிரகத்தோடு** சேர்ந்திருப்பின் அது பலத்தைக் கொடுப்பதில்லை,

ஒரு கிரகம் பாபியாயும் தனக்கு மித்துருவாயும் உள்ள கிரகத்தோடு சேர்ந்திருப்பின் † ஆட்சியிலிருக்கும் கிரகத்திற்குச் சமானமுடையதாகும். (ஆட்சி = அரை ரூபம். 30 கலை.)

ஒரு கிரகம் சுபனுயும் தனக்குச் சத்துருவாயும் உள்ள கிரகத்தோடு சேர்ந்திருப்பின் † ஆட்சியிலிருக்கும் கிரகத்திற்குச் சமான முடையதாகும். (ஆட்சி = அரை ரூபம். 30 கலை).

## உச்சபாகைகள்.

**சுலோ.** $6\frac{1}{2}$ :—

**சூரியனுக்கு** மேடத்தில் 10-ஆவது பாகையும், **சந்திரனுக்கு** இடபத்தில் 3-ஆவது பாகையும், **செவ்வாய்க்கு** மகரத்தில் 28-ஆவது பாகையும், **புதனுக்குக்** கன்னியில் 15-ஆவது பாகையும், **குருவிற்குக்** கடகத்தில் 5-ஆவது பாகையும், **சுக்கிரனுக்கு** மீனத்தில் 27-ஆவது பாகையும், **சனிக்குத்** துலாத்தில் 20-ஆவது பாகையும் உச்சபாகைகளாம். மேற்சொன்ன இராசிகளின் 7-ஆவது ராசிகளும் பாகைகளும் நீசவிராசிகளும் பாகைகளுமாம். இவ்வாறு ஒரு இடத்திலிருக்கும் கிரகத்தின் பலம் அந்தக் கிரகம் இருக்கும் இராசிநாதனுக்குத்தான் சொல்ல வேண்டும்.

**சுலோ.** $6\frac{1}{2}$ - $7\frac{1}{2}$ :—ஒற்றித்த ராசிகளில் முற்பாகம் சூரிய ஓரையும், பிற்பாகம் சந்திர ஓரையும் ஆகும். இரட்டித்த ராசிகளில் முற்பாகம் சந்திர ஓரையும், பிற்பாகம் சூரிய ஓரையும் ஆகும்.

சரராசிகளுக்கு அவ்விராசிகளிலிருந்து 1-5-9-ஆம் இடத்ததிபர்கள் திரேக்காணதிபர்கள் ஆவார்கள். ஸ்திரராசிகளுக்கு அவ்விராசிகளிலிருந்து 9-1-5-ஆம் இடத்ததிபர்கள் திரேக்காணதிபர்கள் ஆவார்கள். உபயராசிகளுக்கு அவ்விராசிகளிலிருந்து 5-9-1-ஆம் இடத்ததிபர்கள் திரேக்காணதிபர்கள் ஆவார்கள். ஒற்றித்த இராசிகளுக்குச் சப்தமாம்சாதிபர்களை அவ்விராசிகளிலிருந்து எண்ணவேண்டும். இரட்டித்த இராசிகளுக்கு 7 ஆமிராசிகளிலிருந்து எண்ணவேண்டும்.

**சுலோ.** $7\frac{1}{2}$ - $8\frac{1}{2}$ :—மேடம் - சிம்மம் - தநுசு இவைகளின் நவாம்சங்கள் **மேட முதல்** ஒன்பது ராசிகளாகும். இடபம் - கன்னி - மகரம் இவைகளின் நவாம்சங்கள் **மகர முதல்** ஒன்பது ராசிகளாகும். மிதுனம் - துலாம் - கும்பம் இவைகளின் நவாம்சங்கள் **துலா முதல்** ஒன்பது ராசிகளாகும். கடகம் - விருச்சிகம் - மீனம் இவைகளின் நவாம்சங்கள் **கடக முதல்** ஒன்பது ராசிகளாகும். அஃதாவது மீனத்தின் கடைசிவரையில் முடிகின்றன. ஒரு ராசியின் துவாதசாம்சங்களின் அதிபர்களை அவ்விராசியிலிருந்து கணக்கிடவேண்டும்.

**ஒற்றை ராசிகளில்** : செவ்வாய் - சனி - குரு - புதன் - சுக்கிரன் இவர்களுக்கு முறையே அவ்விராசியின் திரிம்சாம்சங்களில் 5, 5 ,8, 7, 5 இந்தப் பாகைகளாம். அஃதாவது 5 பாகை வரையில் செவ்வாயும், இதன்மேல் 5 பாகை வரையில் சனியும், இதன்மேல் 8 பாகை வரையில் குருவும், இதன்மேல் 7 பாகை வரையில் புதனும், இதன்மேல் 5 பாகை வரையில் சுக்கிரனும் அதிபர்களாவார்கள்.

**இரட்டை ராசிகளில்** : சுக்கிரன் - புதன் - குரு - சனி - செவ்வாய் இவர்களுக்கு முறையே அவ்விராசியின் திரிம்சாம்சங்களில் 5, 7, 8, 5, 5 இந்தப் பாகைகளாம். அஃதாவது 5 பாகை வரையில் சுக்கிரனும், இதன்மேல் 5 பாகை வரையில் புதனும், இதன்மேல் 8 பாகை வரையில் குருவும், இதன்மேல் 7 பாகை வரையில் சனியும், இதன்மேல் 5 பாகை வரையில் செவ்வாயும் அதிபர்களாவார்கள். இவ்விதமாக இராசிகளை 7 விதமாகப் பிரிப்பதற்குச் சப்தவர்க்கஜ மென்று பெயர்.

**சுலோ.** $8\frac{1}{2}$ - $9\frac{1}{2}$ :—இராசிச் சக்கரத்தை எழுதி அதற்கு எதிரில் இராசிக்கு எத்தனை ரூபங்கள் பலமிருக்கின்றதோ அவைகளை எழுதிக் கொள்க. ஓரையிலிருந்து ஆரம்பித்து திரேக்காணம் சப்தமாமிசம் நவாமிசம் துவாதசாமிசம் திரிமிசாமிசம் முதலிய மற்ற ஆறு வர்க்கங்களுக்கும் வர்க்கத்தின் அதிபனை கிரகத்திற்கு இராசி வர்க்கத்தில் என்ன பல மிருக்கின்றதோ அதனைக் குறிப்பிட்டெழுதிக் கொள்க. இவ்விதமாக ஏழு வர்க்கங்களின் பலங்களைச் சேர்க்க கிரகங்களுக்குச் சப்த வர்க்கஜ பலம் ஏற்படும்.

**சுலோ.** $9\frac{1}{2}$ - $10\frac{1}{2}$ :—உச்சத்திலிருக்கும்படியான ஒரு கிரகத்தின் உச்சபலம் எத்தனை ரூபங்களென்பதை ஒரு பின்ன ரூபமாகக் குறிப்பிடலாம், அந்தப் பின்னத்தின் பகுதி எண்ணானது அந்தக் கிரகத்தின் நீசத்திற்கும் கிரகமிருக்கும் இருப்பிடத்திற்கும் உள்ள வித்தியாசமாம். இதைப் பாகைகளில் குறிப்பிடவேண்டும். அப்பின்னத்தின் தொகுதி எண் 180. பாகைகளாய் இருத்தல் வேண்டும். ஒரு கிரகம் அவரோகணமாய் இருந்தால் அஃதாவது தன்னுடைய உச்சத்தைவிட்டு நீசத்திற்குப் போவதாய் இருந்தால் அந்தக் கிரகத்தை 60 கலைகளில் கழித்து வந்த சேடமாகும்.

கேந்திரத்திலிருக்கும் கிரகத்தின் பலம் ஒரு ரூபமாகும்.
பணபரத்திலிருக்கும் கிரகத்தின் பலம் அரை ரூபமாகும்.
ஆபோக்லீபத்திலிருக்கும் கிரகத்தின் பலம் கால் ரூபமாகும்.

(குறிப்பு ஒரு ரூபம் 60 கலை. அரை ரூபம் 30 கலை. கால் ரூபம் 15 கலை.)

**சுலோ.** $10\frac{1}{2}$ - $11\frac{1}{2}$ :—சந்திரனும் சுக்கிரனும் இரட்டை ராசிகளில் இருப்பின் கால் ரூபம் உண்டாகும். இவர்கள் இரட்டை அம்சங்களில் இருப்பின் கால் ரூபம் உண்டாகும். மற்ற கிரகங்களான சூரியன் செவ்வாய் புதன் குரு சனி இவர்கள் ஒற்றை ராசிகளிலிருப்பின் கால் ரூபம் உண்டாகும். இவர்கள் ஒற்றை அம்சங்களில் இருப்பின் கால் ரூபம் பலம் பெற்றவர்களாவர். (கால் ரூபம் = 15 கலை) ஆண் - அலி - பெண் கிரகங்கள் ஒரு ராசியின் ஆதியில் மத்தியில் அந்தத்தில் இருப்பின் முறையே அவர்கள் கால் ரூபம் பலம் பெற்றவர்களாவர். (ஆண் கிரகங்கள்: சூரியன் - செவ்வாய் - குரு. அலிகிரகங்கள்: புதன் - சனி. பெண் கிரகங்கள்: சந்திரன் சுக்கிரன்.) இவ்வைந்து பலங்களின் மொத்தமானது ஸ்தானபலம் எனப்படும். † இந்த **ஸ்தான பலம்** ஷட்பலங்களில் முதலாவதாகும்.

---

† என்னால் வெளியிடப்பெற்ற ஸ்ரீபதிபத்ததியைப் பார்க்க

**ஸ்லோ.** $11\frac{1}{2}$ - $12\frac{1}{2}$ :—**திக்குபலம்.**

புதனும் குருவும் இலக்கினம் அல்லது கிழக்கில் பலம் பெற்றவராவர். சந்திரனும் சுக்கிரனும் நான்காமிடத்தில் அல்லது வடக்கில் பலம் பெற்றவராவர். சனி ஏழாமிடத்தில் அல்லது மேற்கில் பலம் பெற்றவராவர். சூரியனும் செவ்வாயும் பத்தாமிடத்தில் அல்லது தெற்கில் பலம் பெற்றவராவர். இந்தக் கிரகங்கள் மேற் சொல்லப்பெற்ற ஸ்தானங்களுக்கு ஏழாமிடத்திலிருப்பின் அவர்களின் பலம் சூனியமாகும். இவ்வாறே மற்ற இடங்களுக்கும் **திக்கு பலத்தைக்** கண்டுகொள்க.

**ஸ்லோ.** $12\frac{1}{2}$ - $14$ :—**பட்சபலம்.**

சுக்கில பட்சத்தில் சுபக்கிரகங்களின் பட்சபலம். அப்பட்சத்தில் எத்தனை திதிகள் சென்றிருக்கின்றனவோ அதற்குச் சமானமாகும். பாபிகளுக்கு எத்தனை திதிகள் செல்ல வேண்டிய திருக்கின்றனவோ அவைகளுக்குச் சமானமாகும். அமர பட்சத்தில் இதற்கு நேர் விரோதமாகும். சந்திரனுடைய பட்சபலம் இரண்டு மடங்காகும்.

**திரிபாக பலம்** :—பகலில் முதற்பாகத்தில் ஜனிக்கின் புதன் பலமுள்ளவர். பகலில் மத்திய பாகத்தில் ஜனிக்கின் சூரியன் பலமுள்ளவர். பகலின் கடைசி பாகத்தில் ஜனிக்கின் சனி பலமுள்ளவர். இரவில் முதற்பாகத்தில் ஜனிக்கின் சந்திரன் பலமுள்ளவர். இரவில் மத்திய பாகத்தில் ஜனிக்கின் சுக்கிரன் பலமுள்ளவர். இரவில் கடைசி பாகத்தில் ஜனிக்கில் செவ்வாய் பலமுள்ளவர். குருவிற்கு எப்போதும் பலமுண்டு. (பலம் என்பது ஒரு ரூபம். ஒரு ரூபத்திற்கு 60 கலை.)

இதனை அகோ ராத்ரஜம் அல்லது தினராத்திரி திரிபாக பல மென்பர்.

**நதம் - உந்நதம்** :—நதத்தைக் கடிகைகளாக்கி 2-ஆல் பெருக்கி 60-ஆல் வகுத்து வந்தது **நதபலமாம்.**

ஸ்லோ. $14\frac{1}{2}$ :—நதபலத்தை 60-இல் கழிக்க வருவது **உந்நத பலமாம்.** சந்திரன் செவ்வாய் சனி இவர்களுக்கு நதபலமும், சூரியன் புதன் குரு சுக்கிரன் இவர்களுக்கு உந்நத பலமும் உண்டாம்.

**சுலோ.** $14\frac{1}{2}$ - $15\frac{1}{2}$ :—மத்தியானத்திற்கும் சூரியன் இருக்கும் நிலைமைக்குமுள்ள வித்தியாசம் கடிகைகளில் நத மென்பது. மத்திய ராத்திரிக்கும் சூரியனுக்கும் உள்ள வித்தி யாசம் உந்நதமென்பது. இவ்விரண்டு காலங்களையும் 30-ஆல் வகுக்க நதோன்னத பலம் கிடைக்கும். கிரகங்களின் நதோன் னத பலத்தை ரூபங்களில் கண்டுகொள்ள வேண்டும். இவை **காலபலங்களில்** ஒரு பிரிவு.

**சுலோ.** $15\frac{1}{2}$ - $16\frac{1}{2}$ :—வருஷாதிபதி - மாசாதிபதி - தினாதி பதி - ஹோராதிபதி இவர்களுக்கு முறையே கால் - அரை - முக்கால் - ஒரு ரூபம் உண்டு. இந்த நான்கு வகைப் பலங் களும் காலபலத்தை விருத்தி செய்கின்றன. ஹோராதிபதி யைக் கண்டு பிடிக்கச் சூரிய உதயத்திலிருந்து ஜனன காலம் வரையில் சென்றிருக்கும் நாழிகைகளை 2ஆல் பெருக்கி 5ஆல் வகுக்க வேண்டும். இவ்வாறு வகுத்து வந்த ஈவு எத்தனை ஹோரைகள் சென்றிருக்கின்றனவென்பதைக் குறிப்பிடும். ஒரு தினத்தில் முதலாவது ஹோரையின் அதிபன் அத்தினாதி பதியேயாவன். 2, 3 போன்ற மற்ற ஹோராதிபதிகளைக் கீழ்க் கண்ட வரிசைப்படி எடுத்துக் கொள்ளவேண்டும். 1. சூரியன், 2. சுக்கிரன், 3. புதன், 4. சந்திரன், 5. சனி, 6. குரு. 7. செவ் வாய் ஆவார்கள்.

**சுலோ.** $16\frac{1}{2}$ - $17\frac{1}{2}$ :—**அயனபலம், சேஷ்டாபலம்**. சூரியனுக் கும் சந்திரனுக்கும் தெற்குப் பாகத்தில் பலம். புதனுக்கு எந்தப் பாகத்திலும் பலம். மற்றவர்களான செவ்வாய், குரு, சுக்கிரன், சனி இவர்களுக்கு வடக்குப் பாகத்தில் பலம். இவ்வித பலத் திற்கு **அயனபல**மென்று பெயர். செவ்வாயிலிருந்து முறையே கிரகங்கள் தங்களுடைய வக்கிரகதியில் பலம் பெற்றவர்களா வர். அவர்களுடைய சேஷ்டா பலத்தை அவர்களின் சீக்கிர கேந்திரங்களில் அவர்களிருக்கும் பாகைகளில் இருந்து கணக் கிடவேண்டும். இரண்டு கிரகங்கள் ஒரே வீட்டிலும் ஒரே அட்ச ரேகைகளிலும் இருந்து அவைகளிருக்கும் கலை விகலை களும் ஒன்றாயிருக்குமானால் அவர்கள் யுத்தத்தில் இருப்பார்கள் என்று சொல்லவேண்டும். இவ்விரு கிரகங்களில் வடபாகத்தி லிருக்கும் கிரகம் வெற்றியுள்ளதென்றும், தென்பாகத்திலிருக்

கும் கிரகம் தோல்வியடைந்ததென்றும் சொல்லுக். தோல்வி யடைந்த கிரகத்தின் பலத்தை ஜெயசீலமான கிரகம் அடைகின்றது.

**சுலோ. $17\frac{1}{2}$ - $18\frac{1}{2}$ :— திருஷ்டி பலம்.**

சனிக்கு 3, 10 ஆமிடங்கள் முழுப் பார்வை, மற்றக் கிரகங்களுக்கு இவ்விடங்கள் கால் பார்வை, குருவிற்கு 5, 9 ஆமிடங்கள் முழுப் பார்வை, மற்ற கிரகங்களுக்கு இவ்விடங்கள் அரைப் பார்வை, செவ்வாய்க்கு 4, 8, ஆமிடங்கள் முழுப் பார்வை, மற்ற கிரகங்களுக்கு இவ்விடங்கள் முக்கால் பார்வை, எல்லாக் கிரகங்களுக்கும் 7 ஆமிடம் முழுப் பார்வை, கிரகங்கள் அவர்களிருக்கும் ஸ்தானங்களிலிருந்து 2, 11, 12, 6 ஆமிடங்களைப் பார்ப்பதில்லை.

**சுலோ. $18\frac{1}{2}$ - $19\frac{1}{2}$ :**—ஒரு கிரகம் மற்றொரு கிரகத்தைப் பார்த்தால் அவ்வாறு பார்க்கும் கிரகத்தைப் பார்க்கப்படும் கிரகத்திலிருந்து கழிக்க வரும் ராசிகள் பாகைகள் திருஷ்டியின் அளவைக் குறிப்பிடும். பார்க்கப்படும் கிரகத்தின் திருக் பலத்தை இப்பாகைகளிலிருந்து அறிந்து கொள்ளலாம். அம்சாவது கிரகமிருக்கும் ராசிக்கும் அடுத்த ராசிக்கும் உள்ள பலத்தைக் கூட்டி அல்லது கழித்துத் தெரிந்து கொள்ளலாம். சுபக் கிரகங்களின் திருக் பலத்தைச் சுபமென்றும், அசுபக் கிரகங்களின் திருக் பலத்தை அசுபமென்றும் வெவ்வேறாக எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தத் திருக்பலங்களின் கூட்டுத் தொகை ஒவ்வொரு கிரகத்தின் சரியான திருக்பலத்தைக் குறிப்பிடுகின்றது.

**சுலோ. $19\frac{1}{2}$ - $20\frac{1}{2}$ :—நைஸர்க்கிக பலம்.**

சூரியன் - சந்திரன் - சுக்கிரன் - குரு - புதன் - செவ்வாய் - சனி இவர்கள் நைஸர்க்கிக பலத்தில் முறையே பலங் குறைந்தவராவர். சூரியனுடைய நைஸர்க்கிக ரூபமானது ஒரு ரூபம். இப்பலவித பலங்களின் அம்சாவது 1. ஸ்தானம், 2. திக்கு, 3. காலம், 4. நைஸர்க்கிகம், 5. சேஷ்டா அல்லது சலனம் இப்பலவித பலங்களின் கூட்டுத் தொகையைக் கண்டு பிடிக்கவேண்டும்.

**ஶ்லோ.** $20\frac{1}{2}$ - $21\frac{1}{2}$ :—இக்கூட்டுத் தொகையில் திருத்திய திருக்பலத்தைக் கூட்டவேண்டும். கிரகமானது யுத்தத்தில் ஜெயசீலமாயிருப்பின் அதற்கு ஒரு ரூபம் பலம் அதிகம். தோல்வி யடைந்திருப்பின் அதன் பலத்திலிருந்து ஒரு ரூபத்தைக் கழிக்கவேண்டும். இவ்வாறு திருத்திய பலவித பலங்களின் கூட்டுத் தொகையானது கிரகத்தின் ஷட்பலத்தை ரூபங்களில் குறிப்பிடுகின்றது. இப்பலமானது 5 ரூபங்களுக்குக் குறைந்தால் கிரகம் பலஹீனமாகும். கிரக பலம் 5 ரூபங்களுக்குமேல் 10 ரூபங்களுக்குள் இருப்பின் கிரகத்தின் பலமானது சாதாரணமாகும்.

**ஶ்லோ.** $21\frac{1}{2}$ - $22\frac{1}{2}$ :—சாதாரண பலத்தை யடைந்து தனது **உச்சத்திற்குச்** சென்று கொண்டிருக்கும் கிரக தசை சந்தோஷம் சௌக்கியம் இவைகளைத் தரும். **நீசத்திற்குப்** போய்க் கொண்டிருக்கும் கிரக தசை கஷ்டத்தைத் தரும். 5 ரூபங்களுக்குக் குறைந்த பலம் பெற்ற கிரக தசை மிகுந்த கஷ்டத்தையும் துக்கத்தையும் தரும்.

10 - ரூபங்களுக்கு அதிகமான பலத்தை யடைந்த கிரகம் பூரண பலத்தைக் கொடுக்கும். இந்தக் கிரகமானது தன்னுடைய நீசத்திலிருந்து கொண்டு உச்சத்திற்குப் போய்க் கொண்டிருந்தால் அது அதிக சுபத்தைக் கொடுக்கும். அந்தத் தசை அதிக சௌகரியத்தைத் தரும். ஜாதகனுக்குச் செல்வம் சுகம் சௌக்கியம் முதலியவைகளையும் தரும்.

கிரகபல மதனாலே கிளருங் கோளே
கேடுதரு சத்துருவுங் கேண்மை யானுந்
தரவல்ல மேடாதி தங்கி யுள்ளார்
தக்கதிரி கோணமேவச் சாரும் பாகை
யுரமருவு மறுவர்க்க வுடந்தை யாகு
முயர்வெல்லா மிவ்வுலக முணரத் தந்தான்
கரங்குவிக்க வரந்தருமெங் காளி தாச
கணிகனெனுஞ் சோதிடநற் கலைவல் லோனே

இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

## மூன்ருவது அத்திய

# ஆயுர்த்தாயம்.

**சுலோ.** *1* :—அசுவினியிலிருந்து கிரகம் எ
திரங்கள் சென்றிருக்கின்றதோ அதை 3-ஆல் வ
சேடத்தை 4-ஆல் பெருக்கவேண்டும். இப்பெருக்கு
யானது கிரகம் மேஷத்திலிருந்து சென்றிருக்கும் நவ
கஃளக் குறிப்பிடுகின்றது. இஃது அம்சகாயுர்த்தாயத்து
கிரகத்தினுல் கொடுக்கப்பட்ட வருடங்கஃளக் குறிப்பிடு
கின்றது. வருடங்களுக்கு மேற்பட்டுள்ள மாதங்கஃளயும் நாட்
கஃளயும் கிரகம் அடுத்த பாகத்தில் உள்ள நிஃலயிலிருந்து அறி
தல்வேண்டும். இந்தக் கடைசி நட்சத்திர பாதத்திற்கும் கிரகம்
அடுத்த நட்சத்திரத்தில் இருக்கும் நிஃலமைக்கும் உள்ள வித்தி
யாசத்தையும் கிரகமானது பூராவும் செல்வதற்கு எத்தஃன
நாட்கள் நாழிகைகள் ஆகுமென்று கணக்கிடவேண்டும். ஒவ்
வொரு கிரகத்தினுலும் இலக்கினத்தினுலும் இவ்வாறு கொடுக்
கப்பட்ட வருடங்கஃளயெல்லாம் ஒன்று சேர்க்கவேண்டும்.

**சுலோ.** *2* :—12 ஆமிடத்திலிருந்து அசுபக் கிரகங்கள் தஃல
கீழாக 6 பாவங்களில் இருந்தால் அவைகளின் ஆயுர்த்தாயத்
தில் $1 - \frac{1}{2} - \frac{1}{3} - \frac{1}{4} - \frac{1}{5} - \frac{1}{6}$ பாகங்கள் குறையும். இவ்விடங்களில்
சுபக்கிரகங்கள் இருந்தால் மேற்சொன்னவைகளில் **பாதி** ஆயுர்த்
தாயம் குறையும். இலக்கினத்தில் அசுபக் கிரகமிருந்தால்
இலக்கினத்தின் ஆயுர்த்தாயம் **சூனியம்**. நீசத்திலிருக்கும்
கிரகத்தின் ஆயுர்த்தாயம் **பாதி** குறையும். சத்துருவீட்டிலிருக்
கும் கிரகத்தின் ஆயுர்த்தாயம் **மூன்றில்** ஒரு பங்கு குறையும்.
கிரக யுத்தத்தில் தோல்வியடைந்த கிரகத்தின்ஆயுர்த்தாயம்
**பாதி** பங்கு குறையும்.

**சுலோ.** *3* :—ஜனன காலத்தில் இலக்கின ராசியில் சென்றி
ருக்கும் நாழிகைகஃள 9 ஆல் பெருக்கி அந்நாழிகைகளின்
சங்கியையால் வகுக்க வரும் ஈவு இலக்கினத்தால் கொடுக்கப்
பட்ட வருடங்கஃளக் குறிப்பிடும். சேடத்திலிருந்து மாதங்
கஃளயும் நாட்கஃளயும் கண்டுகொள்ளவேண்டும். இலக்கினத்

து அல்லது லக்கினம் சுபர்களின்
ந்தாலும் அல்லது லக்கிஞதிபதியின்
ருந்தாலும் அல்லது லக்கிஞதிபதி உச்சஞ
கினத்திஞல் கொடுக்கப்பட்ட வருடங்கள்
இலக்கினம் வரையில் இருக்கும் இராசிகளுக்
கும் என்பது சில ஜோதிடர்களின் அபிப்பிராயம்.

. 4:—இலக்கின திரேக்காணத்தில் இருபக்கங்களில் ரக்காணங்கள் இருக்கின்றன. இந்த மூன்று திரேக் ஞதிபதிகளின் சப்தவர்க்கஜ பலத்தை ரூபங்களில் கண்டு காண்டு அதில் நான்கில் ஒரு பங்கை எடுத்துக் கொள்க. இது ஜாதகனுடைய புண்ணியத் தன்மையை ரூபங்களில் குறிப்பிடும். இந்தப் **புண்ணியத்** தன்மையை நான்கு ரூபங் களில் கழிக்க வருவது ஜாதகனுடைய **பாபத்** தன்மையை ரூபங்களில் குறிப்பிடும். இவ்விரண்டு பாகங்களையும் ஒன்றி லொன்று கழிக்க புண்ணிய பாவம் 4 ரூபங்கள் வந்தால் ஜாத கன் மோட்சத்தை யடைவான்.

**சுலோ.** 5:—மேற்கூறிய மூன்று திரேக்காணுதிபதிகளின் சப்தவர்க்கஜ பலத்தில் சுபாசுப பாகங்களின் தொகைகளை அறியவேண்டும். இதில் அசுபபாகத்தை மட்டும் 120-ஆல் பெருக்கி 7-ஆல் வருக்கவேண்டும். இப்படி வகுத்துவந்த ஈவு வருஷங்களைக் குறிப்பிடும். ஈவு 120-க்கு அதிகமாயின் 120-ஐக் கழித்துவிடவேண்டும். இது ஜாதகனுடைய பூர்வ ஜென்ம - தாத்காலிக ஜென்ம - வர்த்தமான ஜென்ம (பூத - பவுஷ்ய - வர்த்தமான)ங்களின் ஆயுளைக் குறிப்பிடும். இஃது அம்சகாயுர்த் தாயத்தைவிட சுலபமானது. ஆகையிஞல் இஃது இங்கு கூறப்பட்டிருக்கின்றது.

**சுலோ.** 6:—(1) குரு - புதன் - சுக்கிரன் இவர்கள் கேந் திர திரிகோணங்களில் இருந்தால் ஜாதகனுக்குத் தீர்க்காயுசு. (100 வருடங்கள்)

(2) குரு - புதன் - சுக்கிரன் இவர்கள் 2, 3, 11-ஆமிடங் களில் இருந்தால் ஜாதகனுக்கு மத்தியமாயுசு. (66 வரு டங்கள்)

## மூன்ருவது அத்தியாயம்.

(3) குரு - புதன் - சுக்கிரன் இவர்கள் 6, 8, 12-ஆட களில் இருந்தால் ஜாதகனுக்கு அற்பாயுசு. (33 வருடங்கள்)

(4) மற்ற கிரகங்கள் (அசுபர்கள்) 8, 12, கேந்திரம் (1-4-7-10) கோணம் (1-5-9) இவைகளில் இருந்தால் ஜாத கனுக்குப் பெரும்பாலும் நல்ல பலனைச் கொடுக்கமாட்டார்கள்.

**சுலோ.** 7 :—இலக்கினதிபதி கேந்திர திரிகோணங்களில் இருக்கும் சுபர்களால் பார்க்கப்படாவிட்டாலும், இலக்கினதி பதி இருக்கும் இராசியாதிபதியும் இலக்கினமும் சுபர்களின் பார்வை பெருவிட்டாலும் ஜாதகன் அற்பாயுள் உடையவனு வான், அவனுக்கு மனைவியும் மக்களும் வித்தையும் இராது. இதற்குமாருக இருப்பின் ஜாதகனுக்கு வித்தையும் கியாதியும் தீர்க்காயுளும் உண்டாகும்.

**சுலோ.** 8 :—இலக்கினமானது சரியான பாகை கலை விகலை களில் குறிப்பிடப்பட்டு அல்லது சந்திரனிருக்கும் இராசியா னது 8-ஆம் வீட்டதிபனுல் பார்க்கப்படாமலும், இலக்கினத்தி லிருந்து அல்லது சந்திரனிலிருந்து 8-ஆம் வீடு சனி அல்லது செவ்வாயினுல் பார்க்கப்பட்டாலும், இலக்கினதிபன் அல்லது இலக்கினதிபதியிருக்கும் ராசியாதிபதி இவர்கள் சுபர்களின் பார்வை பெருவிட்டாலும் ஜாதகனுக்கு அற்பாயுசு.

விக்கிரம ஆதித்தன் விளங்கு மாறு
வேட்டவளை கணிகருள்ளே மேலாங் காளி
யுக்கிரக வழிநின்றே யுண்மை யாய்ந்தங்
குதவதிப ரவரவரு முறைவ தாலே
முக்கியமாய் நூருண்டென் முழுதா மாயுண்
முன்னுமறு பத்தாறில் முடிவ ரென்றும்
வக்கிரமாய் வருவரெனில் வந்த மூன்றும்
வரிசை பெறு முப்பானும் வாழ்வென் ருனே.

மூன்ருவது அத்தியாயம் முற்றிற்று.

# நான்காவது அத்தியாயம்.

## கிரக பாவ பலம்.

**சுலோ.** *1* :—கிரகங்கள் கீழ்க்கண்ட பிரகாரம் ஒன்ருே டொன்று சம்பந்தம் பெற்றிருப்பின் ஜாதகனுக்கு யோகத்தை யும் கீர்த்தியையும் தரும்.

**முதலாவது** :—தங்கள் உச்ச வீட்டிலிருக்குங் கிரகங்களும், சுயக்ஷேத்திரத்திலிருக்குங் கிரகங்களும், மித்துரு க்ஷேத்திரத்தி லிருக்குங் கிரகங்களும், அல்லது திரிகோண க்ஷேத்திரத்திலிருக் குங் கிரகங்களும்,

**இரண்டாவது** :—கேந்திர ஸ்தானங்களிலிருந்து வர்க்கோத்த மாம்சத்தை யடைந்த கிரகங்களும்,

**மூன்ருவது** :—சுபர்களால் பார்க்கப்பட்ட கிரகங்களும், சுபர்களோடு சேர்ந்த கிரகங்களும், அல்லது சுபர்களின் மத்தி யில் உள்ள கிரகங்களும்,

**நான்காவது** .—மூலத்திரிகோண ராசிகளில் உள்ள கிரகங் களும்,

**ஐந்தாவது** :—ஒரு பாவத்திற்கு நடுமையத்தை நோக்கிச் செல்லுங் கிரகங்களும்.

**ஆருவது** :—கேந்திராதிபத்தியமும் திரிகோணதிபத்திய மும் பெற்ற கிரகங்களும் ஜாதகனுக்கு யோகத்தையும் கீர்த்தி யையும் கொடுப்பார்கள்.

**சுலோ.** *2* :—கிரகங்கள் கீழ்க்கண்ட பிரகாரம் இருப்பின் அசுபத்தையே கொடுப்பார்கள்.

**முதலாவது** :—நீசவிராசியில் இருக்குங் கிரகங்களும்,

**இரண்டாவது** :—கிரகயுத்தத்தில் தோல்வி யடைந்த கிரகங் களும்,

வரு

**மூன்ருவது** :—சத்துரு க்ஷேத்திரத்தில் உள்ள கிரகங்

**நான்காவது** :—அசுபர்களால் பார்க்கப்பட்டு அல்லது அசுபர்களோடு சேர்ந்து அல்லது அசுபர்களின் மத்தியில் உள்ள கிரகங்களும்,

**ஐந்தாவது** :—வக்கிர கிரகங்களோடு சேர்ந்திருக்கும் கிரகங்களும், அஸ்தங்கதமடைந்த கிரகங்களும், அஸ்தங்கத மடைந்த கிரகத்தோடு சேர்ந்திருக்கும் கிரகங்களும், இராகுவோடு சேர்ந்திருக்கும் கிரகங்களும்,

**ஆருவது** :—பாவசந்தியில் உள்ள கிரகங்களும்,

**ஏழாவது** :—பலஹீனமான கிரகங்களும்,

**எட்டாவது** :—துர்ஸ்தானங்களான 6-8-12-க்கு அதிபதியான கிரகங்கள், கேந்திராதிபதியோடாவது, திரிகோணுதிபதியோடாவது சேர்ந்திருப்பின் ஜாதகனுக்கு அசுப பலனையே கொடுப்பார்கள்.

**சுலோ.** 3 :—கிரகங்கள் கீழ்க்கண்ட பிரகாரம் இருப்பின் அவர்கள் ஜாதகனுக்கு ராஜயோகத்தைத் தருவார்கள்.

**முதலாவது** :—9, 10-ஆமிடங்களில் அவ்வீட்டதிபர்கள் இருந்தாலும்,

**இரண்டாவது** :—9, 10-ஆம் வீட்டதிபர்கள் இருவரும் சேர்ந்து இவ்விரண்டு வீடுகளில் ஏதேனுமொரு வீட்டில் இருந்தாலும்,

**மூன்ருவது** :—9, 10-ஆம் வீட்டதிபர்கள் பரிவர்த்தனமாய் இருந்தாலும்,

**நான்காவது** :—9, 10-ஆம் வீட்டதிபர்கள் ஒருவருக்கொருவர் பார்வை பெற்ருலும், இவ்விரு கிரகங்களும் ஜாதகனுக்கு இராஜயோகத்தைத் தருவார்கள்,

**ஐந்தாவது** :—9, 10-ஆம் வீட்டதிபர்கள் ஒன்று சேர்ந்து 5, 7, 1, 4 இவ்வீட்டதிபர்களோடு கூடியிருந்தாலும்,

**ஆருவது** :—[illegible] 10-ஆம் வீட்டதிபர்கள் ஆகிய இவ்விரு கிர[illegible] சொன்ன 5, 7, 1, 4-ஆம் வீடுகளில் ஏதேனு[illegible]ப்பினும் ஜாதகனுக்கு அதிக ஐசுவரியத்தை [illegible]காடுப்பார்கள்.

**குறிப்பு** :—ஆனால் இந்த 9, 10-க்குடையவர்கள் 8 அல்லது 11-ஆம் வீட்டதிபர்களாய் வரக்கூடாது.

**சுலோ.** 4 :—கிரகங்கள் கீழ்க்கண்ட பிரகாரம் இருப்பின் ஜாதகனுக்கு உத்தமோத்தம ராஜயோகத்தைக் கொடுப்பார்கள்.

**முதலாவது** :—இலக்கினத்திலிருந்து 9, 10-க்குடைய கிரகங்களும்,

**இரண்டாவது** :—இலக்கினத்திற்கு 9-ஆமிடத்திலிருந்து 9-10-க்குடைய கிரகங்களும்,

**மூன்றாவது** :—இலக்கினத்திற்கு 10-ஆமிடத்திலிருந்து 9, 10-க்குடைய கிரகங்களும் முறையே ஜாதகனுக்கு உத்தமம் - மத்தியமம் - சாதாரணம் ஆகிய பலத்தைக் கொடுக்கின்றன. இம்மூன்று வகையாயுள்ள கிரகங்களில் ஏதேனும் இரண்டு ஒன்றோடொன்று கீழ்க்கண்ட முறைகளில் இருப்பின் விசேட பலனைத் தருவார்கள்.

**முதலாவது** :—இவர்கள் ஒரு ராசியில் சேர்ந்திருந்தாலும்,

**இரண்டாவது** :—இவர்கள் பரிவர்த்தனையாய் இருந்தாலும்,

**மூன்றாவது** :—இவர்கள் ஒருவரை யொருவர் பார்த்தாலும்,

**நான்காவது** :—ஒருவர்க்கொருவர் கேந்திரங்களில் இருந்தாலும், அல்லது இலக்கினாதிபதி யிருக்கும் வீட்டுக்குடையவனோடு சேர்ந்திருந்தாலும், ஜாதகனுக்கு உத்தமோத்தம ராஜயோகத்தைக் கொடுப்பார்கள்.

**சுலோ.** 5 :—கிரகங்கள் கீழ்க்கண்ட பிரகாரம் இருப்பின் விசேட பலனைத் தருவார்கள்.

**முதலாவது** :—இலக்கினாதிபதியும் இதர ஒரு கிரகமும், இருக்கும் இராசி அம்சங்களின் அதிபர்களும்,

**இரண்டாவது** :—10 - 9-ஆம் வீட்டுக்குடைய கிரகங்களும்,

**மூன்றாவது** :—5 - 3, 4 - 7-ஆம் வீட்[illegible]டைய கிரகங்களும், [illegible]கங்

**நான்காவது** :—2 - 11-ஆம் வீட்டுக்கு[illegible] வரு

ஆகிய இந்த நான்கு விதமாக கிரகங்கள்[illegible]

பெற்ற வீடுகளில் ஏதேனுமொன்றில் இருந்து ஒரே வீட்டில் சேர்ந்து இருந்தாலும், அல்லது பரிவர்த்தனையாய் இருந்தாலும், அல்லது ஒருவர் பார்வையை யொருவர் பெற்றாலும், மித்துருக்ஷேத்திரம் - சுய க்ஷேத்திரம் உச்ச க்ஷேத்திரம் இவைகளில் ஏதேனுமொரு வீட்டிலிருப்பின் ஜாதகனுக்கு நல்ல அதிர்ஷ்டத்தையும் யானை குதிரை முதலியவற்றையும் அதிக சந்தோஷத்தையும் குழந்தைகளையும் அதிக செல்வத்தையும் கொடுப்பார்கள்.

**சுலோ.** *6* :—ஒரு பாவாதிபதி அப்பாவத்திற்கு எட்டாமிடத்திலிருப்பினும், சூரியனோடு கூடி அஸ்தங்கதமாய் இருப்பினும், நீசனாய் இருப்பினும், சத்துரு க்ஷேத்திரத்தில் இருப்பினும், சுபர்களோடு கூடாமலும் அல்லது சுபர்களின் பார்வையைப் பெறாமலுமிருப்பின் பெரியோர்கள் அப்பாவம் பூரணமாக நாசமடையுமெனக் கூறுகின்றார்கள். பாவத்தில் சுபர்களிருந்தாலுங்கூட அப்பாவம் பயன்படுவதில்லை. இவ்விதமே இலக்கினத்தைப் பற்றியும் மற்ற பாவங்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளவேண்டும்.

**சுலோ.** 7 :—இலக்கினாதிபதி, முதல் - நடு - கடைசி திரேக் காணங்களில் இருந்தால் ஜாதகன் முறையே நீதிபதி - பல ஜனங்களுக்குத் தலைவன் - கிராமாதிகாரியாவான். இலக்கினாதிபதி, குரு - புதன் - சுக்கிரன் இவர்களோடு சேர்ந்திருந்தாலும், அல்லது அவர்களின் ... வையைப் பெற்றாலும், அல்லது சுபர்களின் வர்க்கத்தில் ... அல்லது உச்ச... னாய் இருந்தாலும், ஜாதகன் ...

**சுலோ.** *8* :—ஜன...
களோடு உச்சம் - சுய...
திரத்தில் இருந்து ...
திற்கு 9 - 4 - 10...
சந்திரன் - குரு...
குரு சுக்கிர...

செ...
பெற்...

ஆமிடங்களில் இருந்தால் ஜாதகன் எல்லாம் உணர்ந்தவனுயும் ஜனங்களால் போற்றப்படுபவனுயும் கியாதியுள்ளவனுயும் இருப்பான்.

**சுலோ.** *9*:—ஜனன கால இராசிச் சக்கரப் பிரகாரம் குரு விற்கு 3, 12-ஆம் வீடுகளின் ஆதிபத்தியம் வந்தாலும் ஜாதக னுக்குக் குரு நன்மையையே செய்வர். குரு 8 ஆமிடத்தில் இருந்தாலும் 8 ஆமிடத்திற்கு அதிபனுனுலும் ஜாதகனுக்குக் குரு நன்மையையே செய்வர்.

**சுக்கிரன்** 6-ஆம் வீட்டிலிருந்தால் ஜாதகனுக்கு நன்மை யையே செய்வர். **இராகு** 7-4-9-11-10 ஆமிடங்களில் இருப்பின் சுபனுவர். **கேது** 3 ஆமிடத்திலிருந்தால் நன்மை யைச் செய்வர்.

**சுலோ.** *10*:—ஒரு பாவத்தின் அதிபன் 6-8-12 என் னும் துர்ஸ்தானங்களில் இருந்தாலும், நீசனுயிருந்தாலும், அல்லது அஸ்தங்கதமாயிருந்தாலும், அல்லது சத்துரு க்ஷேத் திரத்திலிருந்தாலும், அல்லது சுபர்களோடு சேராமலும் சுபர் களின் பார்வையைப் பெருமலும் இருந்தாலும் அல்லது தன் னுடைய சத்துருக்களோடு சேர்ந்திருந்தாலும், அல்லது சத் துருக்களின் பார்வையைப் பெற்றுலும், அல்லது சத்துரு நவாம்சத்தை அடைந்தாலும், அல்லது நீச நவாம்சத்தை அடைந்தாலும், அல்லது பாப [illegible] கிரகங்களோடு சேர்ந்து யுத்தத்தில் தோல்வி [illegible]டந்து பலஹீனமானுலும் அந்தப் பாவம் பூரணமாய் [illegible] யடையுமென்று பெரியோர்கள் றுகின்றுர்கள் [illegible] மற்ற எல்லாப் பாவங்களை

[illegible] திரிகோணம் அல்லது
[illegible]த்துரு க்ஷேத்திரத்தி
[illegible]க்ஷத்திரத்திலாவது,
[illegible] பலம் பெற்ற
[illegible]லும், அல்லது
[illegible]லது அவ்
அல்லது
அதிக[illegible]

சீக்கிரத்தில் விசேடமாய் விருத்தி யடையும்படி செய்கின்றார் கள்.

**சுலோ.** *12* :—பாவம் - பாவாதீபதி - பாவகாரகன்† இவர்கள் பாபர்களினால் சூழப்பட்டு பாபர்களோடு சேர்ந்து பல ஹீனமாய்ச் சுபர்களின் பார்வை அல்லது சேர்க்கை இல்லாம லிருந்தாலும், மேற் சொல்லப்பட்ட - பாவம் - பாவாதிபதி - பாவகாரகன் இவர்களில் ஒவ்வொருவர்களிருக்குமிடத்திற்கு 9 - 4 - 8 - 5 - 12 ஆமிடங்களில் பாபக் கிரகங்கள் இருந் தாலும், இப்பாபக் கிரகங்கள் இருக்கும் நவாம் சாதிபதிகள் சத்துரு க்ஷேத்திரங்களில் இருந்தாலும், அஸ்தங்கத மடைந் தாலும் அல்லது அப்பாவத்தில் கிரக யுத்தத்தில் தோல்வி யடைந்தாலும் அப்பாவமானது பூரணமாய் நாசமடையுமெனக் கூறுகின்றார்கள்.

**சுலோ.** *13* :—சுபக் கிரகங்கள் தங்களுடைய சுய க்ஷேத் திரம் - உச்ச க்ஷேத்திரம் - மித்துரு க்ஷேத்திரம் - மூலத் திரி கோணம் - வர்க்கோத்தம நவாம்சம் இவைகளில் இருந்தால்

---

† பாவ காரக விஷயத்தைப் பற்றி பராசர முனிவர் பின்வருமாறு கூறியுள்ளார்.

1. ஸூர்யோ, 2. குரு, 3. குஜ:, 4. சோமோ, 5. குரூர், 6. பௌம, 7. ஸித, 8. சநி, 9. குருச், 10. சந்த்ரசுதோ, 11. ஜீவோ, 12. மந்தச்ச பாவகாரக:

(இதன் கருத்து) இலக்கின பாவத்திற்குச் சூரியனும், இரண் டாம் பாவத்திற்குக் குருவும், மூன்றும் பாவத்திற்குச் செவ்வாயும், நான் காம் பாவத்திற்குச் சந்திரனும், ஐந்தாம் பாவத்திற்குக் குருவும், ஆறும் பாவத்திற்குச் செவ்வாயும், ஏழாம் பாவத்திற்குச் சுக்கிரனும், எட்டாம் பாவத்திற்குச் சனியும், ஒன்பதாம் பாவத்திற்குக் குருவும், பத்தாம் பாவத்திற்குப் புதனும், பதினோராம் பாவத்திற்குக் குருவும், பன்னி ரண்டாம் பாவத்திற்குச் சனியும் பாவகாரகர்கள் ஆவர்.

ஆசிரியர் மந்த்ரேஸ்வர முனிவர் அவர்கள் கூறிப் போந்த சுலோக வசனத்தினால் சில பாவகங்களுக்கு இரண்டு மூன்று காரகர் களைக் கூறியிருத்தலின் இவர்களில் யாரைக்கொண்டு பலம் சொல்ல வேண்டுமெனில் இவர்களில் யார் †பலமுடையவரோ அவரே அந்தப் பாவகத்திற்குரிய காரகர்கள் எனக் கொள்ளல் வேண்டும்.

† பல விஷயம் என்னால் வெளியிடப்பெற்ற ஸ்ரீபதி ஜாதக கர்ம பத்ததி ஷட்பல கணிதத்தில் கண்டு கொள்க.

ஜாதகனுக்கு அதிக சுகத்தைக் கொடுக்கின்றார்கள். இந்த் கிரகங்கள் பாபர்களாயிருப்பினும் மிகுந்த சுபத்தையே கொடுப்பார்கள்.

பாவாதிபன் இருக்கும் ராசி நவாம்சங்களின் அதிபர்கள் பலம் பெற்றிருப்பின் அப்பாவாதிபன் அந்தப் பாவத்தை விருத்தி செய்வன். தன்னுடைய மித்துரு ராசி நவாம்சங்களிலிருந்தாலும் ஜாதகனுக்குச் செல்வம் முதலிய பேற்றைத் தருவார்கள்.

**சுலோ.** 14 :—12 - 8 - 6 இந்தத் துர்ஸ்தானங்களில் இருக்கும் கிரகங்கள் தனது ராசிக்குரிய அசுப பலன்களேயே கொடுக்கும். மேற்சொல்லப்பட்ட 6, 8, 12 ஆமிடத்ததிபர்கள் இருக்கும் அல்லது அவர்களால் பார்க்கப்பட்ட பாவங்கள் நாசமடைகின்றன.

சுக்கிரன் - புதன் - குரு இவர்கள் முறையே 12 - 8 - 6இல் இருந்தால் சுபத்தையே தருவார்கள். (சுக்கிரன் 12-லும் - புதன் 8-லும், குரு 6-லும்) 6 - 8 - 12 இவைகளில் இருக்கும் கிரகங்கள் தங்களுடைய மித்துரு க்ஷேத்திரங்களிலோ, அல்லது சுய க்ஷேத்திரங்களிலோ, அல்லது உச்ச க்ஷேத்திரங்களிலோ இருந்தாலும், அல்லது சுபர்களின் பார்வையைப் பெற்றாலும் ஜாதகனுக்கு மிகுந்த சுபத்தையே தருவார்கள்.

12-8-6 ஆமிடத்ததிபர்கள் தங்களுடைய சத்துரு க்ஷேத்திரத்திலோ, அல்லது நீச க்ஷேத்திரத்திலோ, அல்லது அஸ்தமனத்திலோ, அல்லது கிரகயுத்தத்தில் தோல்வியடைந்தோ இருந்தாலும் இவ்வீடுகளில் (அஃதாவது 6-8-12ல்) உள்ள கிரகங்கள் ஜாதகனுக்கு நல்ல பலனேயே தருவார்கள்.

**சுலோ.** 15 :—† இளம் பருவத்திலிருக்கும் கிரகங்களும், விருத்தாப்பிய பருவத்திலிருக்கும் கிரகங்களும், யுத்தத்தில்

---

† அஸ்தமனம் கழிந்த தினம் அதிபாலன் என்றும், பின்னல் ஏழு தினம் வரையில் பாலன் என்றும், அதன்மேல் குமரன் என்றும், கிரமகதி குறைந்து வக்கிரகதி தொடங்குகின்ற வரையில் அரசன் என்றும், வக்கிரகதியில் யுவன் என்றும், அஸ்தமனம் தொடங்குவதற்கு முன் ஏழு தினம் வரையில் விருந்தன் என்றும், அஸ்தமனமாயிருக்கும்போது மிருதன் (மரணம்) என்றும் பெயர் பெறுவர்.

தோல்வியடைந்த கிரகங்களும் பார்வையின் பலனைத் தருவதில்லை. சுப - அசுபக் கிரகங்கள் மாசத்தில் சுக்கில கிருஷ்ண பட்சங்களில் முறையே கிழக்கையும் மேற்கையும் நோக்குகின்றன. குருவிற்கு மேற்கில் திருஷ்டிபலம் அதிகம். சனிக்குத் தன்னுடைய நேர் சலனத்தில் பலம் அதிகம். சுக்கிரனுக்கும் சனிக்கும் அஸ்தங்கதத்தில் பலம் குறைவதில்லை. செவ்வாய் தனது சத்துரு வீட்டில் பலமுள்ளவனுவன்.

**சுலோ.** *16* :—சுபக்கிரகங்கள் *1-4-7-10-3-2-11-5-9-6*, இவ்வீடுகளில் இருந்தால் சுபபலனையே தருவார்கள். அசுபக் கிரகங்கள் *3, 6, 10, 11* இவ்வீடுகளில் இருந்தால் சுபபலனையே தருவார்கள். சூரியன் சனி இவர்கள் *9*-ஆமிடத்திலிருந்தால் நல்ல பலனைத் தருவார்கள். புதன் *8*-இல் இருந்தாலும் நல்ல பலனையே தருவன். சனி தனது உச்ச க்ஷேத்திரத்திலோ-அல்லது சுய க்ஷேத்திரத்திலோ அல்லது குரு வீட்டிலோ அல்லது இலக்கினத்திலோ இருப்பின் நன்மையையே செய்வன். சுக்கிரன் *12*-ஆமிடத்திலிருந்தாலும் சனியினுடைய ராசி... களில் இல்லாவிடின் மிகுந்த சுபத்தையே செய்வ...

**சுலோ.** *17* :—தேய்பிறைச் சந்திரன், ... கிரன்-, *4*-பூரண சந்திரன் குரு இவர்கள் ... அரை - முக்கால் - முழுப்பங்கு சுபர்களாவர். ... சுபர்கள் வீட்டிலிருந்து அவ்வீட்டுக்குடையவா... திருந்தால் முற்றிலும் சுபர்களாவர்.

*1* - தேய்பிறைச் சந்திரனும் புதனும் ...
2 ... சூரியனும், *3* - ராகுவும் - செவ்...
...யே கால் - அரை...

கஓ...
அ...
பா...
ரா...
ந...
மி...

**சுலோ.** *19*:—பூரணசந்திரன்-குரு-சனி இவர்கள் அவர்கள் இருக்குமிடத்திலிருந்து 2-12-ஆமிடங்களுக்குச் சாதகர்களாவார்கள். குரு துர்ஸ்தானாதிபதியாய் இருந்தாலும் 12-ஆமிடத்திற்குச் சாதகராவர். இதர கிரகங்கள் (செவ்வாய் புதன் சுக்கிரன் சூரியன்) அவர்கள் இருக்குமிடத்திலிருந்து 2-ஆமிடத்திற்குச் சாதகராவார்கள். பாவாதிபதிகளும் பாவகாரகர்களும் ஒருவரோடொருவர் சம்பந்தம் பெறின் (பார்வை சேர்க்கை பரிவர்த்தனை முதலியவற்றால்) ஜாதகனுக்குச் சுபபலனைத் தருவார்கள்.

**சுலோ.** *20*:—ஒரு பாவத்திற்கு 2-ஆமிடத்திலிருக்கும் கிரகம் அப்பாவத்திற்குச் சாதகமாகும். அப்பாவத்திலிருந்து 3-ஆமிடத்திலிருக்கும் கிரகம் வேதகனாகும். 4-ஆமிடத்திலிருக்கும் கிரகம் பந்தகனாகும். 8-ஆமிடத்திலிருக்கும் கிரகம் பிரதி பந்தகனாகும். இவ்வெட்டாமிடத்திலிருக்கும் கிரகத்தைக் கொண்டே பாவத்தின் விருத்தி அல்லது நாசத்தை அறிய
...ம். ஒரு பாவத்தின் 2-7-ஆமிடத்ததிபர்கள் அப்பாவத்
...ர்களாவார்கள்.

...—ஒரு கிரகத்திற்கு அதன் மித்துருக்களாய்
...க்கிரகங்களால் ஏற்படும் பார்வை **சுவாதீன**
...ம், அப்பாபக்கிரகங்கள் அக்கிரகத்திற்குச் சத்து
...ின் அதன் பார்வைக்குப் **பராதீன வேதை**, யென்
... சுபர்களின் பலன்கள் ஆதி முதல் ஒரே மாதிரி
...ர்களின் பலன்கள் அந்தியத்திலும் எதிர்பாராத
... பெறும். ஜாதகனின் அதிருஷ்டமும்
... பலாபலத்திற்குத் த...

**மூன்ருவது** :—12-ஆமதிபதி : 8-இலாவது- 6-இலாவது- இருந்தாலும்,

**நான்காவது** :—இந்த மூன்று அதிபர்கள் சம்பந்தம் பெற்ருலும் (அஃதாவது பரிவர்த்தனை பார்வை அல்லது சேர்க்கை) மற்றக் கிரகங்களின் சம்பந்தம் பார்வை பெருமல் இருந்தால் ஜாதகன் அரசனுவான் எனச் சோதிர் நூல் வல்லுநர் கூறுப.

**சுலோ.** 23 :—பாபிகள் நீசமடைந்தாலும், சுபர்கள் பலம் பெற்றவர்களாய்க் கேந்திர திரிகோணங்களில் இருப்பினும், 10-9-4ஆம் அதிபர்கள் ஒன்ருகச் சேர்ந்து 9 அல்லது 10-ஆமிடங்களில் இருப்பினும் ஜாதகன் மிகுந்த செல்வந்தனுயும் புகழ் பெற்றவனுயும் தீர்க்காயுளுடையவனுயும் எல்லாம் உணர்ந்தவனுயும் ராஜாக்களால் சன்மானிக்கப்பட்டவனுயும் இருப்பான்.

**சுலோ.** 24 :—1-4-7-10ஆம் வீடுகள் இலக்கினம் - கேந்திரம் - கண்டகம் - சதுஷ்டயம் எனப்படுகின்றன. கேந்திரங்களுக்கு அடுத்த வீடுகள் அஃதாவது 2-5-8-11-இவைகள் பணபரம் எனப்படும். பணபரத்திற்கு அடுத்த வீடுகள் 3-6-9-12 இவைகள் ஆபோக்கிலீபம் எனப்படும், 5-9-ஆம் வீடுகள் திரிகோணங்களெனப்படும். 3-6-10-11 ஆம் வீடுகள் உபஜெயமெனப்படும். சந்திரனிருக்கும் வீடு ஜென்மராசி எனப்படும். இலக்கினமானது ஆதி அல்லது முதலாவது வீடெனப்படும்.

**சுலோ.** 25 :—**சூரியன்** சிவபெருமானுடைய குணங்களையுடையவன். அவன் ஆத்மா பிதுரு இவைகளுக்குக் காரகனுவன். **சந்திரன்** சக்தி தேவியினுடைய அம்சம். எல்லாப் பிராணிகளுக்கும் தாய் போன்றவன். மற்ற ஐந்து கிரகங்களும் அஃதாவது செவ்வாய் - புதன் - குரு - சுக்கிரன் - சனி இவைகள் பஞ்ச பூதங்களான பிருதிவி - அப்பு - தேயு - வாயு - ஆகாசம் இவைகளிலிருந்து உற்பத்தியானவை. புதன் - குரு - சுக்கிரன் இவர்கள் சத்துவ குணத்திலிருந்தும், செவ்வாய் ரஜோ குணத்திலிருந்தும், சனி தமோ குணத்திலிருந்தும் உண்டானவர். சூரியனும் சந்திரனும் மாரகத்தைக் கொடுப்பவர்

கள் அல்லர். ஆனால் அவர்கள் 6 அல்லது 8-ஆம் வீட்டுக்குடையவர்களாயின் துன்ப பலனைக் கொடுப்பார்கள்.

**சுலோ.** *26* :—சந்திரனிருக்கும் வீட்டிலிருந்து 6-7-8-ஆமிடங்களில் சுபக்கிரகங்களிருந்து அவ்வீடுகளில் பாபக்கிரகங்களில்லாவிடின் ஜாதகன் அரசனாகவோ அரசனுக்குச் சமானமான எல்லாவிதமான ஐசுவரியங்களோடு கூடினவனாகவோ இருப்பான். அன்றியும் ஜாதகன் தீர்க்காயுளோடு கூடினவனையும், புகழ்பெற்றவனையும், மனைவி மக்கள் வீடுகள் வாகனங்கள் முதலிய எல்லாச் சௌகரியங்களுள்ளவனையும் இருப்பான். இதனை அதியோகமென்பர்.

**சுலோ.** *27* :—30-16-6-8-10-12-1-என்னும் இந்த எண்ணிக்கைகள் சூரியனிலிருந்து முறையே ஏழு கிரகங்களின் கலைகளைக் குறிப்பிடுகின்றன. இலக்கினம் சந்திரன் இவைகளிலிருந்து 9-ஆம் வீட்டுக்குடையவர்களின் கலைகளைக் கூட்டி 12-ஆல் வகுத்துவரும் சேடத்தைச் சந்திரனிருக்கும் ராசியிலிருந்து எண்ணிவந்த வீடானது சுபக்ஷேத்திரமாயிருந்து அதில் சுபகிரகங்களிருப்பின் ஜாதகன் பெரிய கோடீஸ்வர பிரபுவாயிருப்பன். அதில் பாபியிருந்து பாப க்ஷேத்திரமாயிருப்பின் சொற்ப பணமுள்ளவனையிருப்பன். அந்த வீட்டில் பாபக்கிரகம் உச்சம் பெற்றிருப்பின் ஜாதகன் பெரிய பிரபுவாய் இருப்பன்.

**சுலோ.** *28* :—2-5-11-9-ஆம் வீட்டின் அதிபர்கள் ஒருவரோ டொருவர் சம்பந்தம் பெற்று பலம் பெற்றவர்களாயிருப்பின் ஜாதகன் இலட்சாதிபதியாவன். இவ்வீட்டதிபர்கள் துர்ஸ்தானங்களுக்கு ஆதிபத்தியம் பெற்றால் ஜாதகனது தனம் நாசமாகும். பகைவர் மூலமாக தொந்தரவுண்டாகும். கடன் உபத்திரவமேற்படும். இத்தியபலன்களை யெல்லாம் மேற்கூறிய நான்கு வீட்டுக்குடையவர்கள் தங்கள் தசைகளில் தருவார்கள்.

**சுலோ.** *29* :—எல்லாக் கிரகங்களும் லக்கினத்திற்கு நான்கு கேந்திரங்களிலும் நான்கு பணபரங்களிலுமிருந்து ஆபோக்கிலீபத்தில் கிரகங்களே யில்லாவிடின் ஜாதகன் அரசனாவன். மேற்சொல்லிய ஜாதகத்தில் சுபக்கிரகங்களும் பூரணசந்திரனும்

பலம் பெற்றுப் பாபகிரகங்களது பார்வை சேர்க்கை யி
விடின் ஜாதகன் பெரிய பிரபுவாயும் பெரியவர்களால் ே
றப்பட்டவனுயும் இருப்பன். இதற்கு நேர் விரோதமாயி
பின் (மேற்படி கிரகங்கள் பலம் பெருமலிருப்பின்) மத்தியட
பலன்களே நடைபெறும்.

சுலோ. 30 :—ஜனன காலமானது மத்தியானம் அல்லது மத்திய ராத்திரிக்குப் பிறகு 2-நாழிகைகளுக்குள் இருப்பின் ஜாதகன் அரசனுவன். தன்னுடைய பகைவர்களைச் செயித்து புகழ் பெற்றவனுயும் தேவபக்தியுள்ளவனுயும் வித்தியாவந்தனுயும் ஆவன். மேற்கூறிய ஜாதகத்தில் 2-ஆம் வீட்டில் ஒரு உச்சக்கிரகமிருந்து மற்ருெரு உச்சக்கிரகத்தால் பார்க்கப்பட்டால் ஜாதகன் கோடீஸ்வரப்பிரபுவாவன். இவ்விரண்டிலிருக்கும் உச்சக்கிரகமானது மற்ருெரு ஆட்சியிலுள்ள கிரகத்தால் பார்க்கப்பட்டால் ஜாதகன் இலட்சாதிகாரியாயும் அதிக சந்தோஷமுள்ளவனுயும் இருப்பன்.

சுலோ. 31 :—சரராசியைவிட ஸ்திரராசி பலமுடையது. ஸ்திரராசியைவிட உபயராசி பலமுடையது. இம்மூன்று விடங்களில் மூன்று கிரகங்களிருந்தால் மூன்ருவது கிரகத்தின் மேல் விழும் 2-கிரகங்களின் பார்வையானது (அஃதாவது இவ்விரண்டு கிரகங்கள் (சாதக அல்லது வேதகனுயிருப்பின்) இக்கிரகங்கள் சரராசியிலிருப்பதைவிட ஸ்திரராசியிலிருந்தால் அதிகமாயும், ஸ்திரராசியிலிருப்பதைவிட உபயராசியிலிருந்தால் பார்வை அதிகரிக்கும். இம்மூன்று வீடுகளிலிருக்கும் கிரகங்களின் பலன்களையும் இவ்வாறே கூறவேண்டும். இம்மூன்று கிரகங்கள் சரராசியின் முதல் திரேக்காண[illegible]ம் ஸ்திரராசியின் மத்திய திரேக்காணத்திலும் உ[illegible] கடைசி திரேக்காணத்திலும் இருந்தால் பூர்[illegible] வார்கள். அவர்கள் சரராசியின் மத்திய திரே[illegible] அல்லது ஸ்திரராசியின் கடைசித் திரேக்காணத்[illegible] உபயராசியின் முதல் திரேக்காணத்திலும் இருந்[illegible] பலனைத் தருவார்கள். இக்கிரகங்கள் எல்லாம் கடைசித் திரேக்காணத்திலும் ஸ்திரராசியின் [illegible] காணத்திலும் உபயராசியின் மத்திய திரே[illegible] இ[illegible]தால் அதம பலனைத் தருவார்கள்.

**சுலோ.** *32* :—யோகத்தை (நல்லயோகம் கெட்ட யோகம்) கூடிய கிரகங்கள் ஒரு கிரகத்திற்கு மற்றொரு கிரகம் 12-பாகைக்குள்ளிருந்தும் இக்கிரகங்களில் அஃதாவது மந்தகதியுடையது முன்பக்கத்திலும் துரிதகதியுடையது பின்பக்கத்திலும் இருந்தால் ஜாதகனுக்கு இக்கிரகங்களின் யோகம் ஏற்படும். இக்கிரகங்களிருக்கும் பாகைகளின் வித்தியாசம் பூச்சியமானால் யோகத்தின் பூர்ணமான பலத்தையும் பாகைகளின் வித்தியாசம் 12-பாகைகளானால் பூச்சியபலத்தையும் ஜாதகன் அடைவானென்க. துரிதகதியுடைய கிரகம் மந்தகதியுடைய கிரகத்திற்குப்பின் 12-பாகைகளிலோ அல்லது அதிகமாகவோ இருந்தால் ஜாதகனுக்கு இந்தக் கிரகங்களின் யோகம் ஏற்படுவதில்லை. கிரகங்கள் எல்லாவற்றிலும் மந்தகதி யுடையது சனி. துரிதகதி யுடையது சந்திரன். இந்த முறையாகப் பார்த்துக் கொள்க.

**சுலோ.** *33* :—சந்திரன் பலம் பெற்று மேற்சொன்ன கிரகங்களில் ஏதேனும் இரண்டைப் பார்ப்பின் விசேஷ யோகத்தைத் தருவான். ஆனால் சந்திரன் துர்ஸ்தானங்களிலிருந்து பார்ப்பின் யோகத்தைத் தருவதில்லை. ஒரு பாவத்தைப் பார்க்கும் கிரகம் உச்சமாயிருந்தாலும் ஆட்சியாயிருந்தாலும் அப்பாவத்தை விருத்தி செய்யும். இக்கிரகம் மித்துரு க்ஷேத்திரத்திலிருந்தால் சாதாரண பலனைத் தரும். மற்ற வீடுகளிலிருந்தால் பலனைக் கொடுப்பதில்லை.

**சுலோ.** *34* :—ஒரு பாவத்தின் அதிபன் இருக்கும் ராசியை கண்டுபிடிக்க வேண்டும். அந்தப் பாவத்தின் பாதம் ... பாவத்திலிருந்து எவ்வளவு தூரம் சென்றிருக்கின் ... தூரம் (பாவாதிபதி இருக்குமிடத்திலிருந்து) ...ாதத்தைக் கொண்டும் இதிலுள்ள கிரகங்களைக் ...பர் - பாபர்) பாவத்தினுடைய விருத்தியையும் ...அறியவேண்டும். இவ்வாறே 1-2-4-5-7-9-10 ...ங்களின் 8 பாதங்களையும் கணக்கிடவேண்டும். ...திலிருந்து 12-ஆம் வீட்டின் பாதமானது அப்... **பபாத**மென்றும், 7-ஆம் வீட்டின்பாதம் **தரபாத**ம்... ...லப்படும்.

**உதாரணம்** :—கன்னியாலக்கின ஜாதகத்திற்கு லக்கினுதிபதியான 'புதன், மிதுனராசியி லிருக்கின்ருர். இலக்கினத்திலிருந்து மிதுனம் 10-ஆவது ராசியாய் இருப்பதினுல் மிதுனத்திலிருந்து 10-ஆவது ராசியான **மீனம்** இலக்கின பதமாகின்றது. கன்னியா லக்கின ஜாதகனுக்கு தனுதிபதியான சுக்கிரன் கடக ராசியி லிருக்கின்ருர். தனஸ்தானமான துலாத்திற்குக் கடகம் 10-ஆவது ராசியாய் இருப்பதினுல் கடகத்திலிருந்து 10-ஆவது ராசியான **மேடம்** தனபதமாகின்றது. இவ்விதமே மற்றவைகளையும் கண்டுகொள்க.

| | | | |
|---|---|---|---|
| | | குரு சந்தி | சூரி செவ் புதன் |
| சனி | பதலக்கினத்திற்கு உதாரணம். கன்னி | | சு. ராகு |
| கேது | | | |
| | | | ல |

**சுலோ.** 35 :—இலக்கின பாதமானது சுபமாயிருந்து அப்பாவத்தில் சுபர்கள் இருப்பார்களாயின் ஜாதகன் எல்லா வித சுகங்களையும் அனுபவிப்பன். இலக்கின பாதத்திற்குக் கேந்திர திரிகோணங்களில் சுபர்களிருப்பின் ஜாதகன் அரசனுக்கு சமானமானவனுயும் வித்வானுயும் இருப்பன். இலக்கின பாதத்திற்குக் கேந்திர திரிகோணங்களில் பாபர்களிருப்பின் ஜாதகனுக்கு அற்ப ஐசுவரியத்தையும் அற்ப வித்தையையும் கொடுப்பார்கள். இலக்கின பாதத்திற்கு 6-8-12-ஆமிடங்களில் பாபர்களிருப்பின் கொடிய பலன்களைத் தருவார்கள். இவ்வாறே மற்ற 8 பாவங்களுக்குப் பலன்களைக் கூற வேண்டும்.

**சுலோ.** 36 :—புத்திர பாவத்தைத் தெரிந்து கொள்ள வதற்கு 5-2-9-ஆவது பாதங்களையும் குரு லக்கினுதி உப பாதங்கள் சுபர்களின் பார்வை சேர்க்கை இவை கவனிக்கவேண்டும். பாபர்களின் பார்வை சேர்க்கை விடின் ஜாதகனுக்குச் சந்ததியுண்டு. கிரகங்க கிரகங்கள் பலம் பெற்றிருப்பின் புருஷக் குழந் கிரகங்கள் பலம் பெற்றிருப்பின் ஸ்திரீ குழ இருக்கும்.

5-ஆம் வீட்டுக் குடையவர் சனி. 5-ஆம் வீடான மகரத்திற்கு 2-ஆம் வீடான கும்பத்திலிருக்கின்றூர். அதிலிருந்து 2-ஆம் வீடு மீனமாகின்றது. இந்த **மீன**விராசியே 5-ஆவது புத்திரபதமாகின்றது.

2-ஆம் வீட்டுக்குடைய சுக்கிரன், 2-ஆம் வீடான துலாத்திலிருந்து 10-ஆம் வீடான கடகத்திலிருக்கின்றூர். இந்தக் கடகத்திலிருந்து 10-ஆம் வீடு மேஷமாகின்றது. இந்த **மேஷமே** 2-ஆவது தனபதமாகின்றது.

9-ஆம் வீட்டுக்குடைய சுக்கிரன், 9-ஆம் வீடான இடபத்திற்கு 3-ஆம் வீடான கடகத்தில் இருக்கின்றூர். இந்தக் கடகத்திலிருந்து 3-ஆம் வீடு கன்னியாகின்றது. இந்தக் **கன்னியே** 9-ஆவது பாக்கிய பதமாகின்றது.

**மற்றவைகளையும் இவ்விதமே கண்டு கொள்க.**

**உபபதம் காணும் விவரம்** :—மகரலக்கினம். புத்திர ஸ்தானம். 5-ஆம் வீட்டிற்குப் பன்னிரண்டாம் வீடு தநுசு. [5-ஆம் வீடு மகரம். இதற்குப் பன்னிரண்டாம் வீடு தநுசு] இதற்குடையவர் குரு. இவர் தநுசிலிருந்து 6-ஆவது ராசியான இடபத்திலிருக்கின்றூர். இந்த இடபத்திலிருந்து 6-ஆவது ராசியான **துலாம்**, புத்திர பாவத்திற்கு உபபதமாகின்றது.

**உதாரண ஜாதகத்தில்** :—2-ஆவது ராசி துலாம். இதற்குப் பன்னிரண்டாம் வீடு கன்னி. இந்தக் கன்னிக் குடையவர் புதன். கன்னியாராசியிலிருந்து 10-ஆவது ராசியான மிதுனத்திலிருக்கின்றூர். இந்த மிதுனத்திலிருந்து 10-ஆவது ராசியான **மீனம்**, தனபாவத்திற்கு உபபதமாகின்றது.

**உதாரண ஜாதகத்தில்** :—9-ஆவது ராசி இடபம். இதற்குப் ...னிரண்டாம் வீடு மேடம். இந்த மேடத்திற்குரிய செவ் ... மேடத்திற்கு மூன்றுமிடமான மிதுனவிராசியிலிருக்கின் ...ந்த மிதுனத்திலிருந்து 3-ஆவது ராசியான **சிம்மம்**. ...ாவத்திற்கு உபபதமாகின்றது.

—புதன் சனி செவ்வாய் இவர்கள் பின் சுலோ ...மூன்று உப பாதங்களின் அதிபர்களோடு அம்சைகளில் இருப்பார்களேயாயினும்

அல்லது சனியும குருவும் சேர்ந்து ஓரே வீட்டில் இருந்தாலும் சந்ததிகள் நாசமடையும். 10-ஆம் வீடு 10-ஆம் வீட்டிற்கதிபன் இவர்களோடு சனி சம்பந்தப்பட்டாலும் பார்த்தாலும் 10-ஆம் வீட்டில் சனியிருந்தாலும் ஜாதகனுக்குத் தத்த புத்திரர்கள் உண்டென்று அறிஞர்கள் கூறுகின்றனர்கள்.

**சுலோ.** *38* :—முதல் களத்திரத்தைப் பற்றி இலக்கினத்திற்கு 7-ஆம் வீட்டைக் கொண்டு அறியவேண்டும். இரண்டாவது களத்திரத்தைப் பற்றி அதிலிருந்து 8-ஆம் வீட்டை (அஃதாவது 7-ஆம் வீட்டிற்கு 8 ஆமிடம்)க் கொண்டு அறிய வேண்டும். இவ்விடங்களில் பாபிகள் இருந்தால் களத்திரங்களுக்கு மரணம் ஏற்படுமென்றும், சுபர்கள் இருந்தால் களத்திரங்களுக்குத் தீர்க்காயுளுண்டென்றுங் கூறவேண்டும். களத்திரங்களின் சங்கியை அவர்களுக்கு உண்டாகும் குழந்தைகள் அவைகளின் குணங்கள் இவைகளையெல்லாம் குரு சுபக் கிரகங்கள் இவர்களின் சேர்க்கைப் பார்வையிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டும்.

**சுலோ.** *39* :—ஏழாம் வீட்டின் உபபாதத்தில் சுபர்களிருந்தால் மனைவி அழகுள்ளவளாயும், நற்குணமுள்ளவளாயும், தீர்க்காயுளுள்ளவளாயும் இருப்பாள். இதில் (7-ஆம் வீட்டின் உபபாதத்தில்) பாபிகளிருந்து அவர்கள் நீசமடைந்திருப்பின் ஜாதகனின் 2 மனைவிகள் இறந்து போவார்கள். இப்பாபக் கிரகங்கள் உச்சத்தை அடைந்து சுபர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு அனேக மனைவிகள் ஜீவந்தர்களாய் இருப்பார்கள். சுபர்கள் பார்வை சேர்க்கையில்லாவிடின் ஜாதகனின் முதல் களத்திரம் இறந்த பின் 2-ஆவது களத்திரம் செய்து கொள்ள மாட்டான்.

**சுலோ.** *40* :—முதல் களத்திரத்திற்குரிய எல்லா விவரங்களையும் † **தரபாதத்**தையும் அதன் **உபபாத**த்தையும் கொண்டறிய வேண்டும். இவைகளிலிருந்து 8-ஆம் வீட்டைக் கொண்டு 2-ஆவது களத்திரத்தின் விவரங்களை அறிதல் வேண்டும். தர பாதத்திற்கு மேல் இருக்கும் பாதங்களிலுள்ள பாபத் தன்மையைக் கொண்டு நாசமடையும் மனைவிகளின் எண்ணிக்

---

† **இதே அத்தியாயம் 34-ம் சுலோகம் பார்க்க.**

கைகளை அறியலாமென்று ரிஷி சிரேஷ்டர்கள் கூறுகின்றார்கள். இப்பாதமானது சுபமானால் களத்திரம் தீர்க்காயுளுள்ளவளாயும், குடும்பத்தை விருத்தி செய்பவளாயும், கணவனுக்குச் சந்தோஷத்தைத் தருபவளாயும் இருப்பாளென்று கூற வேண்டும்.

**சுலோ.** *41* :—இலக்கினத்திலிருந்து பின் பக்கமாக எண்ணி வந்த 3-ஆம் வீட்டில் எத்தனை நவாம்சங்கள் சென்றிருக்கின்றனவோ அத்தனை சகோதரர்கள் ஜாதகனுக்கிருப்பார்கள். இலக்கினத்திலிருந்து 3-ஆம் வீட்டில் இன்னும் எத்தனை நவாம்சங்கள் செல்ல வேண்டியதாயிருக்கின்றதோ அத்தனை கனிஷ்ட சகோதரர்கள் உண்டு. இதில் எத்தனை ஆண் பெண் என்பதனையும் அவர்கள் ஜீவதிசையோ டிருப்பார்கள் என்பதனையும் சுபாசுப கிரகங்களின் பலத்தைக் கொண்டு சொல்ல வேண்டும்.

**சுலோ.** *42* :—சூரியாதி கிரகங்களில் எந்தக் கிரகம் தானிருக்கும் இராசியில் அதிகமான பாகை கலைகள் சென்றிருக்கின்றதோ அந்தக் கிரகத்திற்கு **அதிக கிரகம்** என்று பெயர். இவ்வதிக கிரகத்தோடு **சூரியன்** சேர்ந்திருப்பின் ஜாதகன் அரண்மனையில் மந்திரியாயிருப்பன். இவ்வதிக கிரகத்தோடு **பூரண சந்திரனும் குருவும்** சேர்ந்திருப்பின் ஜாதகன் ஸ்ரீமானாயும் வித்வானாயும் இருப்பன். இவ்வதிக கிரகத்தோடு **செவ்வாய்** சேர்ந்திருப்பின் ஜாதகன் உலோகங்களில் வேலை செய்பவனாயும், திருடனாயும், படைத் தலைவனாயும் இருப்பன்.

**குறிப்பு** :—இதில் விகலைகள் வேண்டியதில்லை. கலைகள் வரையில்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்விதமாகக் கலைகள் வரையில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஜைமினி சூத்திரத்தில் கூறப்பெற்றுள்ளது. உதாரணம். சூரியன்-செவ்வாய்-புதன்-இராகு இந்நால்வருள் **செவ்வாய்** ஆத்மகாரகன் அல்லது அதிகக்கிரகம் என்று சொல்லப்படுகின்றது. ஏனென்றால் இதில் சூரியஸ்புடம் இ. 6-18-52-45. செவ்வாய் ஸ்புடம் இ. 6-28-59-52. புதஸ்புடம் இ. 6-1-15-57. இராகு ஸ்புடம் இ. 6-28-6-20. இதில் செவ்வாயும் இராகுவும் ஒரே பாகையில் இருப்பினும் செவ்வாயானது அதிக கலைகளுடன்

இருப்பதினுல் அஃதாவது இராகு இருக்கும் கலையிலிருந்து 53 கலை செவ்வாய்க்கு அதிகமிருப்பதினுல் இந்தச் **செவ்வாயே** ஆத்ம காரகனுவன் என்பதனை யறிக.

**சுலோ.** 43 :—இவ்வதிக கிரகத்தோடு **புதன்** சேர்ந்திருப்பின் சிற்ப சாஸ்திரம் அறிந்தவனுயும், அல்லது மண் பாண்டங்கள் துணிமணிகள் இவைகளை விற்பனை செய்பவனுயும் இருப்பன், மேற்கூறிய அதிக கிரகத்தோடு **குரு** சேர்ந்திருப்பின் வேத பாராயணம் செய்யும் பிராமணனுயும், வேதங்களை நன்கு அறிந்தவனுயும் இருப்பன். இவ்வதிக கிரகத்தோடு **சுக்கிரன்** சேர்ந்திருப்பின் ஜாதகன் தீர்க்காயுளுடையவனுயும், இன்ப சுகத்தில் பிரியமுள்ளவனுயும் இருப்பன். இவ்வதிக கிரகத்தோடு **சனி** சேர்ந்திருப்பின் ஜாதகன் பல தொழில்களைச் செய்துகொண்டிருப்பான். இவ்வதிக கிரகத்தோடு **இராகு** அல்லது **கேது** சேர்ந்திருப்பின் ஜாதகன் உலோகங்கள் பாஷாணங்கள் இவைகளிலிருந்து மருந்துகளைத் தயார் செய்பவனுயும் இருப்பன்.

**சுலோ.** 44 :—அதிக கிரகமிருக்கும் வீட்டிற்கு 2-ஆமிடத்தில் சூரியன் சுக்கிரன் இவர்கள் இருந்தாலும் அல்லது அவ்வீட்டைப் பார்த்தாலும் ஜாதகன் அரண்மனையில் உத்தியோகமுள்ளவனு யிருப்பான். அதிக கிரகமிருக்கும் வீட்டிற்கு 3-ஆமிடத்தில் பாபிகள் இருப்பார்களாயின் ஜாதகன் தைரிய சாலியாய் இருப்பன். சுபர்கள் இருப்பின் ஜாதகன் அதிக சாதுத் தன்மையுடையவனுய் இருப்பன். அதிக கிரகமிருக்கும் வீட்டிற்கு 4-ஆம் வீட்டில் சந்திரனிருந்து சுக்கிரனுல் பார்க்கப்பட்டால் ஜாதகன் கப்பலோட்டும் மாலுமியாவன். மேற்கூறிய 4-ஆம் வீட்டில் சந்திரனும் சுக்கிரனும் இருந்தாலும் அல்லது அவ்வீட்டைப் பார்த்தாலும் ஜாதகன் மாட மாளிகைகள உள்ளவனுய் இருப்பன்.

**சுலோ.** 45 :—அதிக கிரகமிருக்கும் வீட்டிற்கு 4-ஆம் வீட்டில் சந்திரனும் சுக்கிரனும் இருந்தாலும் அல்லது அவ்வீட்டைப் பார்த்தாலும் ஜாதகனுக்கு அரண்மனைபோன்ற வீடுகள் அதிகமாய் இருக்கும். மேற்கூறிய நான்காமிடத்தில் உச்ச கிரகமிருந்தாலும் இப்பலன்களே நடைபெறும். ஆனுல் ஜாத.

கன் வெள்ளைக் குஷ்டம் கறுப்புக் குஷ்டம் முதலிய ரோகங்களினுல் கஷ்டப்படுபவனு யிருப்பான். இவ்வாறு எல்லா விஷயங்களும் அதிக கிரகமிருக்கும் ராசி-நவாமிசம்-துவாதசாமிசம் இவைகளைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம். அதிக கிரகத்திற்கு அடுத்தாற்போல் உள்ள கிரகத்திலிருந்து ஜாதகனுடைய ஜீவனத்தையும் தைரியத்தையும் அறிய வேண்டும்.

நல்லார்க ணல்லாரை நாடி னலமெல்லாம்
வில்லார்கண் மாதே விளையுமென—மல்லாரும்
விக்கிரமா தித்தன் விளங்கவரு நற்கணிதன்
பக்குவமாய்ச் சொன்னுன் பரிந்து.

பரிந்து கிரகத்துப் பாவ பலனே
விரிந்து விளங்கரசர் வேண்டு—முரியபொருள்
ஆக்குவிக்குங் காரகர்க ளத்தனையுங் கேந்திரத்தே
நோக்குவிக்கு மென்றே நுவல்.

நுவன்ற திரிகோண நுட்பஞ்செய் கோளே
பவநீக்கி யுத்தம பாதைத்—தவச்செல்வம்
பாரிக்கு நல்லபலன் பார்த்திபனுய் வாழ்வனெனப்
பூரித்துச் சொன்னுன் புயம்.

புயவலிமை யுள்ளான் புரந்தான் வடபாற்
செயமிகுந்த விக்கிரமச் செங்கோ—னயமிகுந்த
காளிதாச நற்கணியுங் காளி யருள்கொண்டே
மீளியுடன் சொன்னுன் மிளிர்ந்து.

மிளிர்ந்த பல சோதிடத்தின் மேன்மையெலாஞ் சொல்லிக்
களிகூர்ந்தான் காளி கணிகன்—நளிகடல்சூழ்
நானிலமுங் காக்கவந்த நல்விக்ர மாதித்தன்
வானிலவு மாக்கத்தை வாழ்த்து.

நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

## ஐந்தாவது அத்தியாயம்.

### காரகத்துவம்.

**சுலோ.** *1-1½* :—**முதல் பாவமானது கீழ்க்கண்டவைகளைக் குறிப்பிடுகின்றது.**

*1. தேகம், 2. கைகால்கள், 3. சுகதுக்கங்கள், 4. விருத்தாப்பியம். 5. அறிவு, 6, பிறந்தவிடம், 7. கீர்த்தி, 8. கனவு, 9. பலம், 10. மரியாதை* or *கௌரவம், 11. அரசியல் சம்பந்தமான விஷயங்கள், 12. தீர்க்காயுள், 13. நிம்மதியாய் இருத்தல், 14. வயது, 15. கூந்தல், 16. தோற்றம், 17. கர்வம், 18. ஜீவனம், 19. பிறருக்காகச் சூதாடுதல், 20. களங்கம், 21. பதவி, 22. சருமம், 23, தூக்கம், 24. திறமை, 25. பிறருடைய பணத்தை உபயோகித்தல், 26. பிறரை அவமானம் செய்தல், 27. ரோகமில்லாதிருத்தல், 28. அதிருப்தி, 29. சுபாவம், 30. பிறருக்காக வேலை செய்தல், 31. கால் நடைகளை வளர்ப்பதில் சிரத்தை, 32. மரியாதை குறைவாய் நடத்தல், 33. தன்னினத்தார்களின் குறைகூறுதல் முதலியன.*

**சுலோ.** *1½.-3* :—**இரண்டாம் பாவமானது கீழ்க்கண்டவைகளைக் குறிப்பிடுகின்றது.**

*1. வார்த்தை, 2. தனம், 3. புண்ணிய சம்பிரதாயங்களில் நம்பிக்கை, 4. பிறருக்கு உதவிபுரிதல், 5. நகங்கள், 6. சந்தோஷமா யிருத்தல், 7. பொய் மெய், 8. நாக்கு, 9. கண்கள், 10. ஆடைகள், 11. வைரம்,* (Diamond) *12. தாமிரம், 13. விலையுயர்ந்த கற்கள், 14. முத்து, 15. மனவுறுதி, 16. வாசனைத் திரவியங்கள், 17. குடும்பவுறவு, 18. வியாபாரம், 19. இனிமையாகப் பேசுதல், 20. தாராளம், 21. பணஞ் சேகரிப்பதில் ஊக்கம், 22, சிநேகம், 23. சிநேகிதர்கள், 24. சிறப்பு, 25. சீக்கிரமாகச் செலவழித்தல், 26. நன்றாகப் பேசுந்திறன், 27. படிப்பு* or *வித்தை, 28. பொன், 29. சிறந்த வெள்ளி, 30. தானியம், 31. விநயம், 32. மூக்கு, 33. திடபுத்தி, 34. அடிமை, 35. போகும் வரும் விதிகள், 36. வசிக்கும் சக்தி முதலியன.*

**சுலோ. 4-4½ :—மூன்ரும் பாவமானது கீழ்க்கண்டவைகளைக் குறிப்பிடுகின்றது.**

1. தைரியம், 2. தனக்குப் பிறகு பிறந்த சகோதரர்கள், 3. யுத்தம், 4. காதுகள், 5, கால்கள், 6. ரஸ்தாக்களுக்கு அருகிலுள்ளவிடம், 7. மனக்குழப்பம், 8. திறமை, 9. மோட்சம் அல்லது சொர்க்கம், 10. துக்கமுண்டாகுதல், 11, கனவு, 12. வீரன், 13. வீரத்தன்மை, 14. பந்துக்கள், 15. சிநேகிதர்கள், 16. அலைச்சல், 17. தொண்டை, 18. சுத்தவுணவையுட் கொள்ளுதல், 19. சொத்துக்களைப் பாகம் பிரித்தல், 20. ஆபரணங்கள், 21. நல்ல குணம், 22. வித்தை, 23. பொழுது போக்கு, 24. தேகபலம், 25. லாபம், 26. தேக வளர்ச்சி, 27. பெரிய குலத்தில் பிறத்தல், 28. வேலையாள், 29. கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் மத்தியிலுள்ள கைப் பாகம், 30. வேலைக்காரி, 31. சிறிய சிறந்த வண்டியில் பயணம் செலுத்தல், 32. பெரிய காரியத்தில் ஈடுபடுதல், 33. ஒருவனுடைய மதக் கடமை முதலியன.

**சுலோ. 4½-7 :—நான்காம் பாவமானது கீழ்க்கண்டவைகளைக் குறிப்பிடுகின்றது.**

1. வித்தை, 2. ராஜ்யம், 3. வீடு, 4. பயணம், 5. சிறிய கப்பல் போன்ற வண்டிகள், 6. அப்பியங்கனம், 7. தாயார், 8. உறவினர், 9. சிநேகிதர்கள், 10. ஜாதி, 11. ஆடை, 12. சிறிய கிணறு, 13, ஜலம், 14. பால், 15. வாசனைத் திரவியம், 16. சந்தோஷமாயிருத்தல், 17. நல்லபேர், 18. மிகவும் உயர்ந்த மருந்து, 19. நம்பிக்கை, 20. பொய்க் குற்றம் சாட்டுதல், 21. கூடாரம், 22. வெற்றி, 23. கஷ்டமான வேலை, 24. நிலம், 25. தோட்டம், 26. கிணறு அல்லது குளம் வெட்டுதல், 27. பொது ஜனங்களுக்காகக் கிணறு அல்லது குளங்களைக் கட்டுதல், 28. தாய் வழி, 29. சுத்தமான புத்தி, 30. தகப்பன், 31. பெண்சாதி, 32. தான் சம்பாதித்த பணத்திலிருந்து நிதியைச் சேர்த்து வைத்தல், 33. வீடு, 34. சாமர்த்தியம், 35. வீட்டிற்குள் போகும் வழி, 36. முடிவு, 37. சுபாவம், 38. வீடு நாசமாதல், 39. பிதிரார்ஜித பொருள், 40. சிறந்தவுணவு, 41. திருடின பொருள்கள் இருக்குமிடத்தைக்

கண்டு பிடித்தல், 42. எறும்புப் புற்று, 43. வேத சாஸ்திரங்களைப் படிப்பது, 44. எருமைகள், 45. மாடுகள், 46. குதிரைகள், 47. மதமுள்ள யானை, 48. நன்செய் நிலங்களிலிருந்து வரும் தானியங்கள் முதலியன.

**சுலோ.** $8\text{-}9\frac{1}{2}$ **:—ஐந்தாம் பாவமானது கீழ்க்கண்டவைகளைக் குறிப்பிடுகின்றது.**

1. சந்ததி, 2. தகப்பனால் செய்யப்பட்ட காரியங்கள், 3. அரசன், 4. மந்திரி, 5. நன்னடத்தை, 6. இயந்திர வேலைகளைத் தெரிந்து கொள்ளுதல், 7. புத்தி, 8. வித்தை, 9. கருப்பம், 10. விவேகம், 11. கொடை, 12. புண்ணிய கதைகள், 13. சுபமான கடிதங்கள், 14. ஆடைகள், 15. பலவழிகளால் பெரிய காரியத்தைச் செய்தல், 16. பிதிரார்ஜித சொத்து, 17. பகுத்தறிவு, 18. களத்திரத்தின் அதிருஷ்டத்தினால் ஏற்படும் சொத்து 19. தாசிகளின் சேர்க்கை, 20. ஆழ்ந்த சிந்தை. 21. உறுதி, 22. ரகசியம், 23. மரியாதை, 24. கடிதங்கள் வரைதல், 25. சௌக்கியம், 26. சிநேகம், 27. காவியங்களை இயற்றுவது, 28. வியாபாரத்தில் ஈடுபடுதல், 29. உதரம், 30. மந்திரங்களை ஜெபித்தல், 31. குபேரனைப் போன்ற செல்வம், 32. சமைத்த சாதம், 33. பாப புண்ணியங்களைக் கண்டு பிடித்தல், 34. வேதபாராயணம், 35. புத்தி அல்லது ஞானம், 36. ஆழ்ந்த யோசனை, 37. பணம் சம்பாதிக்கும் வழிகள், 38. விருந்து, 39. திருப்தியடைதல், 40. அதிகமான வித்தை, 41. பரம்பரையாக வந்த மந்திரிப் பதவி முதலியன.

**சுலோ.** $9\frac{1}{2}\text{-}11\frac{1}{2}$ **:—ஆறும் பாவமானது கீழ்க்கண்டவைகளைக் குறிப்பிடுகின்றது.**

1. ரோகம், 2. இடையூறுகள், 3. போர் புரிதல், 4. அம்மான், 5. கபம், 6. தேகத்தில் வீக்கம், 7. குரூர செயல்கள், 8. வைத்தியம், 9. பிளவைகள், 10. விரோதம். 11. சிக்கனம், 12. ரோகத்தால் பீடிக்கப்படுதல், 13. ஸ்திரீ சங்கமத்தால் உண்டாகும் வியாதிகள் காய முதலியன, 14. சமைத்த சாதம், 15. களைப்படைதல், 16. ருணம், 17. குற்றம் சாட்டுதல், 18. சத்திரிகளின் [illegible]ம், 19. க்ஷயரோகம், 20. உஷ்ணம், 21. காயம் [illegible]ப்பம், 23. மிகுந்த துயரம், 24. பல

பேர் விரோதம், 25. கடினமான நேத்திர ரோகம், 26. பிச்சை யெடுப்பது, 27 அகால போஜனம், 28. தோணியிலிருந்து கீழே விழுதல், 29, பங்காளிகளின தொந்தரவு, 30. லாபம், 31. சிரமம், 32. விஷம், 33. சூலை நோய், 34. கைகால் களில் விலங்கு பூணல், 35. நாணயத்தைக் காப்பாற்றல், 36. மூத்திர வியாதி, 37. உஷ்ண பேதி, 38. அறுசுவைகள், 39. கடினமான அவமானம், 40. ஊழியம், 41. களவு, 42. கஷ்டம், 43. சிறைச்சாலை, 44. சகோதரர்களின் மனஸ்தாபம் முதலியன.

**சுலோ. $11\frac{1}{2}$-$13\frac{1}{2}$ :—ஏழாம் பாவமானது கீழ்க்கண்டவைகளைக் குறிப்பிடுகின்றது.**

1. கலியாணம், 2. கற்பில்லாதிருத்தல், 3. காதலி அல்லது காதலனை அடைதல், 4. தாசிகளின் விரோதம். 5. நல்வழி தவறுதல், 6. வாசனை திரவியம், 7. சங்கீதம், 8. புஷ்பங்கள், 9. சிறந்த உணவையும் பானத்தையும் சாப்பிடுதல், 10. வெற்றிலை பாக்கு போடுதல், 11. பயணம் நிறுத்தப்படுதல், 12. தயிர், 13. ஞாபகமில்லாதிருத்தல், 14. வஸ்திர லாபம், 15. வீரியம், 16. கணவன் சுத்தமாயிருத்தல், 17. இரு மனைவிகள், 18. இந்திரியாதிகள், 19. மூத்திரம், 20. ஆசனம், 21. வியாபாரம், 22. இனிமையான பானங்கள், 23. அமிர்தம் பாயசம் இவைகளைப் புசித்தல், 24. வெகுமதி. 25. பல (**Bha**) நாசம், 26. விரோதிகளின் தோல்வி, 27. வேறிடத்தில் இருக்கும் திரவியம், 28. சச்சரவு, 29. இன்ப சுகம், 30. தத்த புத்திரன், 31. நெய்யில் செய்த பண்டங்களை ருசி பார்த்தல், 32. அன்னிய நாடுகள், 33. மனைவி, 34. இன்ப சுகத்தினால் ஏற்படும் சந்தோஷம், 35. களவு முதலியன.

**சுலோ. $13\frac{1}{2}$-$15\frac{1}{2}$ :—எட்டாம் பாவமானது கீழ்க்கண்டவைகளைக் குறிப்பிடுகின்றது.**

1. தீர்க்காயுள், 2. சௌக்கியம், 3. தோல்வி, 4. நிதி சேர்த்தலில் கிடைக்கும் திரவியம், 5. துன்பம் நிறைந்த முகம், 6. மூத்திர வியாதி, 7. கலக காரணமான [illegible]ணம். 8. மேக நோய். 9. ஜாட்டியம், 10. துக்க [illegible] 1. சகோதர

னின் சத்துரு, 12. மனைவியை இம்சித்தல், 13. குடுமி, 14. விரோதியின் கோட்டை. 15. துக்கம், 16. வீண் காலட்சேபம், 17. ராஜதண்டனை, 18. பயம், 19. திரவிய நாசம், 20. கடன் கொடுத்தல், 21. பிறர் தனம் சேர்தல், 22. நீடித்து நிற்கும் சொத்து, 23. துஷ்ட மனிதனின் தோற்றம், 24. பாபம் செய்தல், 25. உயிரோடிருக்கும் ஜந்துக்களைக் கொல்லுதல், 26. கைகால்கள் முறிதல், 27. சிரச்சேதம், 28. பெருந்துயரம், 29. மனதிற்குக் கவலையுண்டாகும் செய்தி, 30. பலவித துன்பங்கள். 31. குரூரச் செயல்களைச் செய்தல், 32. போர் அல்லது சண்டை செய்தல், 33. அதிக மனக் கஷ்டம் முதலியன.

**சுலோ.** $15\frac{1}{2}$-17 :—**ஒன்பதாம் பாவமானது கீழ்க்கண்டவைகளைக் குறிப்பிடுகின்றது.**

1. தானம், 2. நற்குணம், 3. புண்ணிய நதிகளில் ஸ்நானம், 4. தவம், 5. பெரியோர்களிடத்தில் மரியாதை, 6. மருந்து சாமான்கள், 7. நடத்தை, 8. மனச்சுத்தம், 9. தேவதார்ச்சனை, 10. கல்வி கற்பதற்குப் பிரயாசைப்படுதல், 11. சிறப்பு, 12. வண்டி, 13. செல்வம், 14. சாதுரியம், 15. கௌரவம், 16. நீதிக்கதை, 17. பயணம், 18. புண்ணிய ஸ்நானம், 19. உணவு, 20. நல்லோர்கள் சேர்க்கை, 21. சந்தோஷம், 22. பிதிரார்ஜித சொத்து, 23. புத்திரன், 24. புத்திரி, 25. பலவித செல்வம், 26. குதிரைகள், 27. யானைகள், 28. எருமைகள், 29. மகுடாபிஷேக மண்டபம், 30. பிராமண மதத்தைத் தழுவுதல், 31. வேதயக்ஞம், 32. பணத்தின் நடமாட்டம் முதலியன.

**சுலோ.** $18$-$18\frac{1}{2}$ :—**பத்தாம் பாவமானது கீழ்க்கண்டவைகளைக் குறிப்பிடுகின்றது.**

1. வியாபாரம், 2. ராஜ சன்மானம், 3. குதிரையேற்றம், 4. விளையாட்டுகள், 5. அரசாங்க வேலை, 6. ஊழியம். 7. பயிர்த்தொழில், 8. வைத்தியம், 9. கியாதி, 10. புதையல், 11. தியாகம் செ[illegible] 12 [illegible]னேற்றமடைதல், 13. மூத்தவர்கள், 14. ர[illegible] ஜெபம் செய்தல், 16. தாய், 17. நன்ன[illegible]டத் [illegible] 19. தொடை, 20. தேவதைகள்,

21. மாந்திரீக வித்தை, 22. செல்வம், 23. தத்த புத்திரன், 24. பிரபுத்துவம், 25. வழி, 26. உயர்ந்த பதவி, 27. கௌரவமாய் ஜீவித்தல், 28. செல்வந்தனுயிருத்தல், 29. க்யாதி, 30. போதித்தல், 31. முத்திரை, 32. அதிசிரேஷ்டத்துவம், 33. அடிமைத்தனம், 34. அதிகாரத்துவம் முதலியன.

**சுலோ. 18½-20¼ :—பதினேராம் பாவமானது கீழ்க்கண்டவைகளைக் குறிப்பிடுகின்றது.**

1. பல வழிகளில் லாபம், 2. நல்ல அல்லது கெட்ட விஷயங்களில் ஆசை, 3. எல்லாவிதமான பண வரவு, 4. அடிமைத்தனம், 5. மூத்த சகோதரன், 6. தகப்பனுரின் சகோதரன், 7. தேவதைகளைப் பூஜித்தல், 8. சன்மார்க்கர்களைப் போற்றுதல், 9. வித்தை, 10. பொன் பணம் இவைகளைச் சம்பாதித்தல், 11. அதிசூட்சுமமான புத்தி, 12. பிதிரார்ஜித சொத்து, 13. முழங்கால், 14. அதிசிரேஷ்டமான இடம், 15. முத்து ஆபரணங்களின் ஆசை. 16. எஜமானனது செல்வம், 17. வட்டி நஷ்டம், 18. காதலிக்காகப் பொன்னுபரணங்களைச் செய்தல், 19. விவேகம், 20. மந்திரிப் பதவி, 21. மச்சினன், 22. லாபம், 23. அதிருஷ்டம், 24. காரியசித்தி, 25, எளிதில் லாபம் கிடைப்பது, 26. சமையல். 27. விருப்பம். 28. தாய், 29. தீர்க்காயுள், 30. காது, 31. காலின் பேரெலும்பு, 32. சித்திர வேலை, 33. கலைகளில் திறமை முதலியன.

**சுலோ. 20½-22½ :—பன்னிரண்டாம் பாவமானது கீழ்க்கண்டவைகளைக் குறிப்பிடுகின்றது.**

1-விழித்தல், 2-மனக் கஷ்டம், 3-இரு கால்கள், 4-சத்துருக்களின் பயம், 5. சிறைவாசம், 6. நோயிலிருந்து விடுதலையடைதல், 7. கடன் தீர்த்தல், 8. யானைகள், 9. குதிரைகள், 10. பிதிரார்ஜித சொத்துக்கள், 11. சத்துருக்கள், 12. மோட்சம், 13. இடது கண், 14. ஜன விரோதம், 15. அங்கஹீனம், 16. ஸ்திரீகளுக்கு உதவி புரிதல், 17, கலியாணச் செலவு, 18. படுக்கையைத் துறத்தல், 19. உ[illegible]யோக நீக்கம், 20. விரோதிகளின் சிறைவாசம், [illegible]ப்பம். 22. கஷ்டம், 23, ஹானி, 24. பெற்[illegible] [illegible]ரர்களுக்

கும் கஷ்டம், 25. சண்டை, 26. கோபம், 27. தேகத்தில் அடி படல், 28. மரணம், 29. வேறிடம் போதல், 30. பலவிதங் களில் செலவு, 31. களத்திர நஷ்டம் முதலியன.

**சுலோ. $22\frac{1}{2}$-$25\frac{1}{2}$ :—சூரியன் கீழ்க்கண்டவைகளுக்குக் காரக னாகின்றான்.**

1. ஆத்மா, 2. தர்ப்பம், 3. கடுமை, 4. கோட்டை, 5. விசேஷபலம், 6. உஷ்ணம், 7. சிறப்பு, 8. அக்கினி, 9. சிவ பூஜை, 10. தைரியம், 11. முட்செடிகள், 12. ராஜசன்மானம், 13. கசப்பு, 14. விருத்தாப்பியம், 15. கால் நடைகள், 16. கொடுமை, 17. பூமி, 18. தகப்பன், 19. சுவை, 20. தன்னைத் தானறிதல், 21. ஆகாயத்தை நோக்குதல், 22. சாதுவான தாய், 23. மானிடவுலகம், 24. சதுரம், 25. எலும்பு, 26. வீரத் தன்மை, 27. புல், 28, வயிறு, 29. விடா முயற்சி, 30. காடு, 31. அயனம், 32. கண், 33. மலைகளின்மேல் திரிதல், 34. நாற் கால் பிராணிகள், 35. அரசன், 36. பயணம் செய்தல், 37. வியாபாரம், 38. பித்தம், 39. சுடுதல். 40. உருண்டை வடிவம், 41. கண்வியாதி, 42. உடம்பு, 43. மரம், 44. சுத்த மனது, 45. ஏகாதிபத்தியம், 46. ரோகமின்மை, 47. சௌராஷ்டிர தேசத்தின் அரசாட்சி, 48. ஆபரணம், 49. தலையில் வியாதி, 50. முத்துக்கள், 51. ஆகாயத்தின் பிரபுத்துவம், 52. குள்ளனா யிருத்தல், 53. கிழக்குத் திக்கிற்கதிபதி, 54. தாமிரம், 55. இரத் தம், 56. இராச்சியம், 57. சிவப்பு ஆடை, 58. கல், 59. பொது ஜன ஊழியம், 60. ஆற்றங்கரை, 61. பவழம், 62. மத்தியா னத்தில் பலம், 63. கிழக்கு, 64. வாய், 65. பெருங்கோபம், 66. சத்துருக்களைச் சிறைப்படுத்தல், 67. உண்மை, 68. குங்கு மப்பூ, 69. விரோதம், 70. பலமான கயிறு இவை முதலியன.

**சுலோ. $25\frac{1}{2}$-29 :—சந்திரன் கீழ்க்கண்டவைகளுக்குக் காரக னாகின்றான்.**

1. சாதுரியம், 2. புஷ்பம், 3. வாசனாதிரவியம், 4. கோட் டைக்குப் போகுதல், 5. வியாதி, 6. பிராமணன், 7. வீண் பொழுது போக்குதல், 8. கபம், 9. காக்கை வலி, 10. ஈரல் நோய், (மண்ணீரல் வியாதி) 11. மன நிலைமை, 12. இருதயம், 13. ஸ்திரீகள், 14. நல்லது அல்லது கெட்டது, 15. புளிப்பு,

16. தூக்கம், 17. சந்தோஷம், 18. ஜலபதார்த்தங்கள், 19. வெள்ளி, 20. கரும்பு, 21. பித்தவாத ஜுரம், 22. பயணம், 23. கிணறு, 24. குளம், 25. தாய், 26. பட்சபாதமில்லாதிருத்தல், 27. மத்தியான காலம், 28. முத்துக்கள், 29. க்ஷய ரோகம், 30. வெண்மை நிறம், 31. இடுப்பில் கட்டும் துண்டு, 32. வெண்கலம், 33. உப்பு, 34. குள்ளன், 35. புத்தி. 36. திறமை, 37. குட்டை, 38. வைரம், (Diamond) 39. சரத்ருது, 40. 2-நாழிகை, (48 நிமிஷங்கள் அடங்கியுள்ள ஓய்வு நேரம்) 41. முகக்காந்தி, 42. வெள்ளை நிறம், 43. வயிறு, 44. சத்தியைத்தொழுதல், 45. தேன் அல்லது மது, 46. உபகாரம், 47. பரிகாசம், 48. உணவு, 49. கோதுமை, 50. சந்தோஷம், 51. சிறப்பு, 52. முகம், 53. புத்தி சூட்சுமம், 54. தயிரில் பிரியம். 55. பிச்சைக்காரன், 56. கியாதி, 57. அழகு, 58. இரவில் பயம், 59. மேற்குத் திக்கில் முகம், 60. வித்வான், 61. உப்பு சம்பந்தமானது, 62. உத்தியோகம் கிடைத்தல், 63. மேற்கு திக்கை நேசித்தல், 64. மத்திய உலகம், 65. நவரத்தினங்கள், 66. மத்தியம வயது, 67. வாழ்நாள், 68. உண்ணல், 69. பரதேசம் போதல், 70. சுபகாரியங்கள், 71. தோள்வியாதி, 72. கொடை முதலிய ராஜசின்னங்கள், 73. நல்ல பழவர்க்கங்கள், 74. நல்ல இரத்தமும் பலமும், 75. மீன் முதலிய நீரில் வாழும் பிராணிகள், 76. சரீசிருப விஷஜந்துக்கள், (விருச்சிகம் முதலியன.) 77. பட்டு ஆடைகள், 78. நல்ல மொட்டுக்கள், 79. பிரகாசித்தல், 80. தெளிவான பளிங்கு, 81 மெலிந்த துளிகள் முதலியன.

**சுலோ. 30-33½:—செவ்வாய் கீழ்க்கண்டவைகளுக்குக் காரகனுகின்ருன்.**

1. வீரத்தன்மை, 2. பூமி, 3. பலம், 4. போர் புரிவதற்காக ஆயுதங்களை யணிந்து கொள்ளுதல், 5. அரசனுதல், 6. வீரிய நஷ்டம், 7. திருடன், 8. போர், 9. துவேஷம், 10. சத்துரு, 11. தாராளமான குணம், 12. சிவந்த வஸ்துக்களின்மேல் ஆசை, 13. தோட்டம் துறவுகளுக்கு எஜமானன், 14. பேரி நாதம், 15. அன்பு, 16. நாற்கால் பிராணி, 17. அரசன், 18. மடையன், 19. கோபம், 20. அன்னிய நாடுகளுக்குப் போகுதல், 21. உறுதி, 22. உதவி புரிபவன், 23. நெருப்பு,

24. சச்சரவு, 25. பித்தம், 26. உஷ்ணம், 27. காயம், ராஜாக்களின் கீழ் உத்தியோகம், 29. பகல், 30. வானம், 31. பார்ப்பது, 32. குள்ளமாயிருத்தல், 33. வியாதி, 34. கீர்த்தி, 35. தகரம், 36. பட்டாக்கத்தி, 37. ஈட்டி, 38. மந்திரி, 39. அங்கஹீனமாதல், 40. ஆபரணம், 41. முருகக் கடவுளைத் தொழுதல், 42. பால்யம், 43. உறைப்பு, 44. ராஜசபை, 45. மண்ணுலானது, 46. இடையூறு, 47. மாமிசம் புசித்தல், 48. பிறரைத் தூஷித்தல், 49. சத்துருக்களை ஜெயிப்பது, 50. கசப்பு, 51. இரவில் கடைசியில் பலம், 52. பொன், 53. கிரிஷ்மருது, 54. தைரியம், 55. சத்துருக்களின் பலம், 56. திடமான நடத்தை, 57. பலம், 58. மனிதன், 59. ஆசை, 60. பிரமா, 61. கோடாலி, 62. காட்டிலிருப்பவன், 63. கிராமாதிகாரி, 64. ராஜாக்களின் பார்வை, 65. மூத்திர விசர்ஜ்ஜன காலத்தில் வலி, 66. சதுரம், 67. தட்டான், 68. திருடன், 69. எரிந்துபோன இடம், 70. நல்லவுணவு, 71. மெலிந்த தேகம், 72. வில்வித்தையில் சாமர்த்தியம், 73. இரத்தம், 74. தாமிரம், 75. அழகான ஆடைகள், 76. தெற்கை நோக்குதல், 77. தெற்கே போகுதல், 78. விருப்பம், 79. கோபம், 80. தூஷணை, 81. வீடு, 82. சேனாதிபதி, 83. சதக்கினி என்னும் ஆயுதம், 84. மரம், 85. சாமவேதம், 86. சகோதரன், 87. கைக்கோடாரி, 88. காட்டுமிருகங்களைப் பழக்குதல், 89. சுதந்தரம், 90. விடாமுயற்சி, 91. நிலம், 92. நீதிபதி, 93. சர்ப்பம், 94, உலகம், 95. வாக்கு, 96. மனவுறுதியில்லாதிருத்தல், 97. வாகனம் ஏறல், 98. இரத்தத்தைப்போல் தோற்றம் 99. இரத்தம் உறைதல் முதலியன.

**சுலோ.** *33½-37* :—**புதன் கீழ்க்கண்டவைகளுக்குக் காரகனுகின்ருன்.**

1. வித்தை, 2. குதிரைகள், 3. பொக்கிஷம், 4 கணக்கு, 5. புத்தி, 6. வாக்கு, 7. பிராமணன், 8. காலாட்படை, 9. எழுத்துவேலை, 10. புது ஆடைகள், 11. மாடமாளிகைகள், 12. பசுமை நிறம், 13. சிற்ப சாஸ்திரம், 14. ஜோதிடம், 15. புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை போதல், 16. சிறந்த சொற்பொழிவுகள், 17. கோயில், 18. வியாபாரம், 19. சிறந்த

பரணம், 20. இனிமையான வார்த்தை, 21. வேதாந்தம். 22. தாயைப் பெற்ற பாட்டன், 23. கெட்ட கனவுகள், 24. அலி, 25. வடக்குத் திக்கில் முகம், 26. சருமம், 27. ஈரம், 28. வெண்கல முதலியன, 29. எல்லாவற்றையுந் துறத்தல், 30. ருதுகாலம், 31. அழகிய வீடு, 32. வைத்தியன், 33. கழுத்து, 34. மாந்திரீகம், 35. குழந்தை, 36. கோணல் தோற்றம், 37. சுவர்க்க லோகம், 38. அடக்கம், 39. பிதுருவர்க்க உறவினர், 40. பயம், 41. நாட்டியம், 42. தவம், 43. சரசம் செய்தல், 44. காலையில் பலம், 45. ஹேமந்தருது, 46. சொறிதல், 47. அமைதி, 48. கடற்படை, 49. குடும்ப விருத்தி, 50. ஒன்றோடொன்று சேருதல், 51. தெலுங்கு பாஷையில் தேர்ச்சி, 52. விஷ்ணு பக்தன், 53. சூத்திரன், 54. பறவை, 55. பின்பிறந்த சகோதரர்கள், 56. காவியங்களில் ஆசை, 57. திக்குகள், 58. அதர்வணவேதம், 59. மதசம்பந்த காரியம், 60. கோபுரம், 61. தூசு, 62. தோட்டம், 63. உபஸ்தம், 64. சமமானது, 65. சுபமானது, 66. கிராமங்களில் செல்லுதல், 67. பட்சபாதமில்லாதிருத்தல், 68. வடமேற்குத் திக்கில் ஆசையாயிருத்தல், 69. புராண புண்ணிய கதைகளை நன்கு அறிதல், 70. இலக்கண வித்துவான், 71. நவரத்தினங்களைப் பரீட்சிப்பதில் தேர்ச்சி, 72. வித்துவான், 73. மாதுலன், 74. தேவதாராதனம், 75. தாயித்து, 76. மந்திரசக்தி முதலியன.

**சுலோ. 38-41:—குரு கீழ்க் கண்டவைகளுக்குக் காரகனுகின்றுன்.**

1. பிராமணன், 2. ஒருவனுடைய ஆசிரியன், 3. கடமை, 4. ரதம், 5. பசு, 6. காலாள், 7. மிச்சப்படுத்தல், 8. மீமாம்சம், 9. நிதி, 10. குதிரை, 11. தயிர், 12. பெருத்த தேகம், 13. தைரியம், 14. கீர்த்தி, 15. தர்க்க சாஸ்திரம், 16. ஜோதிடம், 17. புத்திரன், 18. பௌத்திரன், 19. பெரு வயிறு, 20. யானைகள், 21. வேதாந்தம், 22. பாட்டனைப் போன்றவர்கள், 23. மாடமாளிகை, 24. நவரத்தினங்கள், 25. மூத்த சகோதரன், 26. பாட்டனுர், 27. இந்திர தேவதை, 28. குளிர்காலம், 29. கோபம், 30. ஆபரணம், 31. வியாபாரி, 32. தேக ஆரோக்கியம், 33. திவ்வியமான வீடு, 34. ராஜ சன்மானம், 35.

தொடை, 36. தேவதைகள், 37. தவம், 38. தானம், 39. குலாசாரம் தவறுதிருத்தல், 40. பிறர்க்கு உதவி புரிதல், 41. பட்சபாதமில்லாதிருத்தல், 42. வடக்கேநோக்குதல், 43. உருண்டைவடிவம், 44. மஞ்சள் நிறம், 45. கிராமங்களில் வசித்தல், 46. வடக்குத் திக்கு, 47. அன்புள்ள சிநேகிதன், 48. ஊஞ்சலாடுதல், 49. பேசும் வன்மை, 50. கொழுப்புப் பதார்த்தம், 51. பழைய துணிகள், 52. புதிய வீடு, 53. சந்தோஷம், 54. பழையது, 55. மந்திரம், 56. இரு முறை பிறந்தவர்கள், 57. புண்ணிய நதிகள், 58. முழங்கால், 59. சொர்க்கத்திற்குப் போகுதல். 60. பூர்ண சௌக்கியத்தைக் கொடுக்கும் வீடு, 61. புத்தி, 62. வித்தை, 63. இலக்கியம், 64. கோபுரம், 65. கேட்பவர்களுக்குச் சந்தோஷமாகப் பேசுதல், 66. சிம்மாசனம், 67. பிரமதேவனின் உற்பத்தி, 68. எல்லாக் காலங்களிலும் பலமாயிருத்தல், 69. மாசம், 70. பாத்திரங்கள், 71. வைடூரியம், 72. அக்கினி ஹோமத்திலிருந்து உண்டாகும் பலன்கள் 73. இனிமையான ரசம், 74. நல்லவனுயிருத்தல், 75. சந்தோஷம், 76. துக்கம், 77. நீளம், 78. சாதுவாயிருத்தல், 79. பிறருடைய எண்ணங்களை ஊகித்தல். 80. பொன், 81. ஆபரணங்கள், 82. உபாயம், 83. வாயு, 84. கபம், 85. புஷ்பராகம், 86. வேத சாஸ்திரம், 87. பிரகாசம், 88. மிருதுவாயிருத்தல், 89. கல், 90. சிவபெருமானைத் தொழுதல், 91. மத சம்பந்தமான கடமைகளை நிறைவேற்றுதல், 92. எல்லாப் பக்கங்களிலும் விளிம்புகள் உள்ள வண்டிகளில் பிரயாணம் செய்தல் முதலியன.

**சுலோ. $42\text{-}45\frac{1}{2}$ :—சுக்கிரன் கீழ்க் கண்டவைகளுக்குக் காரகனுகின்றுன்.**

1. வெண்கொடை, 2. சங்கம், 3. ஆடை, 4. கலியாணம், 5. வருமானம், 6. மனிதன், 7. ஸ்திரீ, 8. பிராமணன், 9. சுபம், 10. வெண்மை நிறம், 11. மனைவி, 12. இன்ப சந்தோஷம், 13. குள்ளனுயிருத்தல், 14. புளிப்பு, 15. புஷ்பம், 16. அதிகாரம் செய்தல், 17. கீர்த்தி, 18. பாலிய வீரியம், 19. வாகனம், 20. வெள்ளி, 21. தென்கிழக்கு மூலை, 22. உப்புச் சம்பந்தமானது, 23. கடைக்கண் பார்வை, 24. நமைச்சல், 25. பட்சம்

(15 நாள்) 26. சித்த விகாரம், 27. பலம், 28. முத்து, 29. யஜுர் வேதம், 30. வைசியன், 31. அழகு, 32. விற்றல் வாங்கல், 33. நேசித்தல், 34. ஜலம் நிறைந்த விடம், 35. யானை, 36. குதிரை, 37. பல வர்ணங்கள், 38. காவியம், 39. நாட்டியம், 40. மத்திய வயது, 41. சங்கீதம், 42. சந்தோஷம், 43. களத்திர சுகம், 44. நவரத்தினங்கள், 45. சரச சல்லாபம், 46. ஜலத்தில் நீந்துவது, 47. வேலைக்காரன், 48. அதிர்ஷ்டம், 49. பிரகாசம், 50. அழகிய யெள்வனம், 51. ராஜ்யம், 52. வாசனைத் திரவியங்கள், 53. புஷ்ப ஹாரங்கள், 54. வீணை, 55. புல்லாங்குழல், 56. சந்தோஷமான பொழுது போக்கு, 57. அழகிய நடை, 58. அஷ்டைஸ்வரியம், 59. அழகிய கை கால்கள், 60. சொற்ப வுணவு, 61. வசந்த காலம், 62. ஆபரணம், 63. பரஸ்திரீகளை ரட்சிப்பது, 64. கண், 65. மெய் பேசுதல், 66. கலைகளில் திறமை யுடைமை, 67. சுக்கிலம், 68. ஜலக்கிரீடையில் பிரீதி, 69. நன்னடத்தை, 70. சிரேஷ்ட பதவி, 71. கூர்மையான புத்தி, 72. சங்கீத வாத்தியங்கள், 73. நாடக மேடைகளைச் சிங்காரித்தல், 74. காம லீலைகள், 75. பலஹீனமான தேகம், 76. காதலை முக்கியமாய்க் கொண்டவன், 77. உயர்ந்த பதவி, 78. வெண்மை நிற ஆடைகளில் பிரியம், 79. பரத நாட்டியம், 80. அரசாங்க முத்திரை, 81. பிரபுத்துவம், 82. பார்வதி இலட்சுமி முதலியவர்களைத் தொழுதல், 83. இன்பசுகம், 84. சாதுவான சுபாவம், 85. மெலிந்த தேகம், 86. பகலில் தாய், 87. செய்யுள்களை இயற்றல், 88. கருங்கூந்தல், 89. மங்களகரமானது, 90. பரம ரகசியம், 91. மூத்திரம், 92. நாகலோகத்தில் செல்லுதல், 93. மத்தியானத்திற்குப் பிறகுள்ள காலம், 94. உபயத்தின் விஷயங்களைப் பற்றி அறிதல் முதலியன.

**சுலோ. 45½-50 :—சனி கீழ்க்கண்டவைகளுக்குக் காரகனுகின்ருன்.**

1. வியாதிகளைப்போன்ற தொந்தரவு, 2. குதிரை, 3. யானை, 4. தோல், 5. லாபம், 6. பரிமாணம், 7. துக்கம், 8. ரோகம். 9. மனஸ்தாபம், 10. துயரம், 11. மரணம், 12. ஸ்திரீயால் உண்டாகும் சுகம், 13. வேலைக்காரி, 14. கழுதைகளும் கோவேறு கழுதைகளும், 15. ஜாதிப் பிரஷ்டன், 16.

அங்கவிகாரம், 17. காடுகளில் இருத்தல், 18. பொறுமைப் படுதல், 19. வெகுமதி, 20. பிரபு, 21. வாழ்க்கையில் ஒரு பாகம், 22. அலி, 23. தாழ்ந்த குலத்தில் பிறந்தவன், 24. பறவைகள், 25. மூன்று புனிதமான அக்கினிகள், (ஆகவனீயம் - காருகபத்தியம் - தக்கிணாக்கினியம்) 26. அடிமை உத்தியோகம், 27. துர்நடத்தை, 28. வீரியமில்லாதிருத்தல், 29. பொய் பேசுதல், 30. வெகுநாளிருத்தல், 31. வாயு, 32. விருத்தாப்பியம், 33. தசைகளும் தசை நார்களும், 34. பகல் பாகத்தின் முடிவில் பலம், 35. சிசிரருது, 36. மிகுந்த கோபம், 37. பிரயாசைப்படுதல், 38. தாழ்ந்த குலத்தில் பிறந்ததாய், 39. குந்தா (குண்டன்), 40. கோளகா (கோளன்), 41. அழுக்குத் துணிகள் அழுக்கு நிறைந்த வீடு, 42. இவைகளைக் கவனித்தல், 43. தீயர்களின் சிநேகம், 44. கறுப்பு நிறம், 45. துன்பம், 46. கொடூரத்தனம், 47. சாம்பல், 48. கறுப்புத் தானியம், 49. மணிக்கட்டு, 50. இரும்பு, 51. பிரபுத்துவம், 52. வருஷம், 53. சூத்திரன், 54. வைசியன், 55. பிதுருகாரகன், 56. அந்நிய பாஷைகளைப் படித்தல், 57. நொண்டி அல்லது முடவன், 58. கடினம், 59. மேல்போர்வை, 60. மேற்கு நோக்கின முகம், 61. மறுபடி இளம்பிராயமாக்கும் மருந்துகள் (மறுபடி உயிர்ப்பிக்கும் மருந்துகள்), 62. கீழ் நோக்குதல், 63. விவசாயத்தால் ஜீவனம், 64. ஆயுதங்கள் வைத்திருக்கும் அறை, 65. பங்காளிகள், 66. வெளியில் இருக்கும் ஸ்தானம், 67. வடகிழக்கில் பிரியம், 68. நாகலோகம், 69. விநாசம், 70. யுத்தம், 71. அலைச்சல், 72. ஈட்டி, 73. ஈயம், 74. சரியான முறையில் செலுத்தாத பலம், 75. முகம்மதியன், 76. அஜீர்ணம், 77. எண்ணெய், 78. மரம், 79. பிராமணன், 80. தமோகுணம், 81. காடு மலைகளில் அலைதல், 82. கடின மனம், 83. பயம், 84. நீடித்த துக்கம், 85. அழகில்லாத மயிர், 86. ஏகாதிபத்தியம், 87. திகில், 88. ஆடுகள் முதலியன, 89. எருமைகள், 90. இன்ப சுகத்தில் அதிக பிரியம், 91. இன்ப சுகத்திற்காக ஆடையாபரணங்களை அணிதல், 92. யமனைப் பூசை செய்பவன், 93. நாய், 94. களவு, 95. கொடூரமான செயல்களைச் செய்தல் முதலியன.

**சுலோ. 51-52½ :—இராகு கீழ்க்கண்டவைகளுக்குக் காரகனு கின்றுன்.**

1. கொடை, 2. சங்கு, 3. ராஜ்ஜியம், 4. கூட்டம், 5. வாக்குவாதம், 6. பிறர் மனதிற்குக் கஷ்டமுண்டாகும்படி பேசுதல், 7. மிகவும் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவன், 8. கெட்ட ஸ்திரீ, 9. எல்லாப் பக்கங்களிலும் விளிம்புகளுள்ள வண்டி, 10. நாஸ்திகன். 11. சூதாடுதல், 12. சந்தியா காலத்தில் பலம், 13. கெட்ட நடத்தையுள்ள ஸ்திரீயின் சேர்க்கை, 14. அந்நிய நாடுகளுக்குப் பிரயாணம், 15. அசுத்தம், 16. எலும்பு, 17, மண்ணீரல் வியாதி, 18. பொய், 19. கீழ்நோக்குதல், 20. மனக் குழப்பம், 21. மரகதம், 22. தெற்கே நோக்குதல், 23. தாழ்ந்த குலத்தில் பிறந்த ஜனங்களை ஆதரித்தல், 24. தேகத்தில் பெரிய வீக்கம், 25. பெரிய காடு, 26. நேர் விரோதமாகச் செல்லுதல், 27. மலை, 28. வலி, 29. வெளியே யிருத்தல், 30. தென்மேற்கே நோக்குதல், 31. வாயு, 32. கபம், 33. துக்கம், 34. சர்ப்பம், 35. இரவில் வாயு, 36. கடினம், 37. நீளம், 38. பாம்பு பல்லி முதலியன, 39. களவுகளைத் தெரிந்து கொள்ளுதல், 40. பயணம், 41. முகூர்த்தம், 42. விருத்தாப்பியம், 43. வாகனம், 44. நாகலோகம், 45. தாய், 46. தகப்பன் அல்லது பாட்டன், 47. காற்று, 48. அதிகமான வலி, 49. ஜலதோஷம், 50. சுவாசித்தல், 51. மிகுந்த தைரியம், 52. காடு, 53. கோட்டை, 54. பூஜை செய்பவன், 55. அக்கிரமம், 56. நாற்கால் பிராணிகளோடு சம்பந்தம், 57. உருது பாஷை எழுதுதல், 58. கடினமான வார்த்தை முதலியன.

**சுலோ. 53-54½ :—கேது கீழ்க்கண்டவைகளுக்குக் காரகனு கின்றுன்.**

1. சண்டி காளி சிவபெருமான் விநாயகர் முதலியவர்களைத் தொழுதல், 2. வைத்தியன், 3. நாய், 4. சேவல், 5. பருந்து, 6. மோட்சம், 7. பலவித செல்வம், 8. க்ஷய ரோகம், 9. வலி, 10. ஜுரம், 11. கங்காஸ்நாநம், 12. பெருந்தவம், 13. வாயு, 14. ஜாதிப்பிரஷ்டன், 15. சிநேகம், 16. சௌக்கியம், 17. கல், 18. காயம், 19. மாந்திரீக வித்தை, 20. ஒரே நிலையில்லாதிருத்தல். 21. பிரமக்ஞானம் 22. வயிறு,

23. கண்வலி, 24. அசட்டுத்தனம், 25. முள், 26. மான் 27. வித்தை, 28. மௌனவிரதம், 29. வேதாந்தம், 30. சுக போகம், 31. அதிருஷ்டம், 32. விரோதிகளுக்கு உபத்திரவம் செய்தல், 33. கொஞ்சவுணவு, 34. உலகத்தில் விருப்ப மின்மை, 35. பிதாமகன், 36. பசி, 37. அதிக துக்கம், 38. கட்டி அல்லது பிளவை, 39. ரோகமில்லாதிருத்தல், 40. கொம்புள்ள பிராணிகள், 41. அத்திமரம் அல்லது வெற்றிலைக் கொடி, 42. கைது செய்யும் உத்தரவை ரத்து செய்தல், 43. சூத்திரர்களின் சிநேகம் முதலியன.

காரகத்தின் பண்பதனைக் கட்டுரைத்தான் விக்கிரமன்
சீரகத்தின் சோதிடர்கள் செவ்விதெனப்—பாரகத்தின்
மாந்தர் பலாபலத்தின் வன்மையறி காளிதாசன்
வேந்தருங் காண விழைந்து.

காளியருள் பெற்றவரே காசினியோர் நன்மைமிகக்
கோளியல்பைக் கொண்டு குணமுறுவர்—மீளிமகிழ்
சொற்கணித சுந்தரன்றன் சொற்றவழி நிற்போர்கள்
வெற்றிவேல் கொள்வார் விரைந்து.

கொற்றக் குடையுடையான் கோவேந்தர் கொண்டாடு
வெற்றி முரசுடையான் வேலுடையான்—கற்ற
கணிகர் பலருள்ளும் காளிதாசன் தக்க
குணமுடையான் சொல்லும் குறிக்கோண்—மணமாலை
கொள்விக்ர மாதித்த கோமான்றன் கேட்டபடி
விள்ளரிய கோளாதி விக்கினங்கள்—தள்ளரிய
பன்னிரண்டு பாவங்கள் பாக்கியஞ்செய் கோளோடு
தன்னூற்றன் மிக்கத் தகுதியாய்ப்—பன்னூலுங்
காரகத்தின் நல்வரிசை கண்டான் சுருதிநூ
லார்வமுடை னையந்தா னறிந்து.

காரகம் கோளதனின் காரகமாம் காரகமே
காரகம் மாந்தரின் காரகம்—காரகத்தின்
காரகம் காரகம் காரகம் காரகமாம்
காரகம் காரகம் கா.

ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

## ஆருவது அத்தியாயம்.

### தசாபலம்.

**சுலோ.** *1* :—**ஒரு கிரகத்தின் அவஸ்தைகள் அல்லது நிலைமைகள் ஒன்பது வகைப்படும்.**

*1.* **தீப்தா:**—*அஃதாவது உச்சத்திலிருப்பது. 2.* **ஸ்தீம்தா:**—*அஃதாவது ஆட்சி வீட்டிலிருப்பது, 3.* **முதிதா** :—*அஃதாவது தன்னுடைய அதிமித்திரன் வீட்டிலிருப்பது, 4.* **சாந்தா** :—*அஃதாவது தன்னுடைய மித்திரன் வீட்டிலிருப்பது, 5.* **ஹீனு** :—*அஃதாவது தனக்குச் சமமானவனுடைய வீட்டிலிருப்பது, 6.* **துக்கா** :—*அஃதாவது தன்னுடைய சத்துரு வீட்டிலிருப்பது, 7.* **விகலா** :—*அஃதாவது பாபக்கிரகங்களோடு சேர்ந்திருப்பது, 8.* **கலா:**—*அஃதாவது கிரகயுத்தத்தில் தோல்வியடைந்திருப்பது, 9.* **கோபா** :—*அஃதாவது அஸ்தமனமடைந்திருப்பது.*

**சுலோ** *2* :—*நாம் பூர்வ ஜென்மத்தில் செய்த பாப புண்ணியங்களின் பலன்களை இச்சென்மத்தில் கிரகங்களின் தசைகளிலும் புத்திகளிலும் அநுபவிப்பதால் கிரகங்களின் தசைகளையும் புத்திகளையும் அறிந்து அவைகளினுல் உண்டாகும் கெட்ட பலன்களைச்* **சாந்தி** *செய்து தடுக்க அல்லது குறைக்க முயல வேண்டும்.*

**சுலோ.** *3* :—*சூரியன் - சந்திரன் - செவ்வாய் - இராகு - குரு - சனி - புதன் - கேது - சுக்கிரன் இவர்களின் தசை வருஷங்கள் முறையே 6-10-7-18-16-19-17-7-20 ஆகின்றன. ஒரு ஜாதகனுக்கு ஜனன காலத்தில் நடக்கும் தசையைக் கண்டு பிடிக்க கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து ஜன்ம நட்சத்திரம் வரையில் எண்ணி அதை 9-ஆல் வகுத்துவந்த சேடம் சூரியனிலிருந்து முறையே தசாநாதர்களைக் குறிப்பிடும்.*

**சுலோ.** *4* :—*ஜனன காலத்தில் ஜன்ம நட்சத்திரத்தில் சென்ற நாழிகைகளையும் செல்லவேண்டிய நாழிகைகளையும்*

கண்டுபிடிக்கவேண்டும். பின்பு அந்த நட்சத்திரத்திற்குள்ள மொத்த நாழிகைகளையும் கண்டுகொள்ளவேண்டும். இந்தப் பின்னத்தைத் தசா வருஷங்களால் பெருக்கி நட்சத்திரத்திற் குள்ள மொத்த நாழிகைகளால் வகுக்க வந்த ஈவு வருஷங்களைக் குறிப்பிடும். சேடத்தை 12-30-60ஆல் பெருக்கி வகுக்க மாதங்களும் நாள்களும் நாழிகைகளும் ஏற்படும்.

**சுலோ.** *5-5½* :—ஒரு கிரகத்தின் தசையில் மற்றொரு கிர கத்தின் புத்தியை அறியவேண்டுமாயின் தசையின் வருடங் களையும் புத்தியின் வருடங்களையும் ஒன்றுக்கொன்று பெருக்கி வந்த தொகையில் முதல் இரண்டு இலக்கங்கள் புத்தியின் மாதங்களைக் குறிப்பிடும். கடைசி இலக்கத்தை 3-ஆல் பெருக்க நாட்களைக் குறிப்பிடும். இவ்வாறே ஒவ்வொரு தசையின் பல புத்திகளையும் கண்டுகொள்க. புத்தியை நாட்களாக்கி கிரக தசா வருஷங்களின் எண்ணிக்கையால் பெருக்கி 120 ஆல் வகுத்துவந்தவை கிரகத்தின் அந்தரத்தை நாட்களில் குறிப் பிடும். இதை 30-ஆல் வகுத்து மாதங்களை யறிந்து கொள்க. இவ்விதமே சூட்சுமத்தையும் அறிந்து கொள்க.

**சுலோ.** *5½-6½* :—**சூரியன் சுபனாயிருப்பின்** அவன் தசை யில் :—ஜாதகனுக்குப் புத்திரர்கள் புத்தி வித்தை பதவி ஞானம் செல்வம் கீர்த்தி தைரியம் சந்தோஷம் தெய்வானு கூலம் இவைகளைத் தருவான்.

**சூரியன் அசுபனாயிருப்பின்** அவன் தசையில் :—பலவித கஷ் டங்களையும் காரிய பங்கத்தையும் பண விரயத்தையும் வியாதி களையும் சத்துருக்களின் உபத்திரவத்தையும் ராஜாக்களின் கோபத்தையும் தகப்பனுருக்கு வியாதியையும் தருவான்.

**சுலோ.** *6½-7½* :— **சந்திரன் சுபனாயிருப்பின்** அவன் தசை யில் :—மாதாவுக்குச் சுகத்தையும் ஜாதகனுக்குப் பூமி தோட் டம் துரவுகள் வீடுகள் பெரியோர்களின் ஆசீர்வாதம் செல்வம் சந்தோஷம் பிரயாணம் முதலியவைகளைத் தருவான். அன்றி யும் ஜாதகன் குளம் முதலியவைகளைக் கட்டுவான்.

**சந்திரன் அசுபனாயிருப்பின் அவன் தசையில்** :—ஜாதகனுக்கு உணவில்லாத கஷ்டம் செல்வமும் சுகமும் இல்லாதிருத்தல்

வியாதிகள் புத்திவிகாரம் பொல்லாப்பு கோபம் தாய்க்கு மரணம் முதலியவைகளையும் பித்தவாத ஜ்வர முதலிய வியாதிகளையும் கொடுப்பான்.

**சுலோ.** $7\frac{1}{2}$-$8\frac{1}{2}$ :—**செவ்வாய் சுபனுயிருப்பின் அவன் தசையில்** :—ஜாதகனுக்கு நிலங்கள் காரியசித்தி வித்தை கூர்மையான புத்தி வீரத்தன்மை செல்வம் சத்துருநாசம் சகோதர விருத்தி இவைகளைக் கொடுப்பான்.

**செவ்வாய் அசுபனுயிருப்பின் அவன் தசையில்** :—ஜாதகனின் சகோதரர்களுக்குக் கஷ்டம் மனஸ்தாபம் நிலங்களினுல் சச்சரவு சண்டை நெருப்புக் காயம் இவைகளினுல் அபாயம் கண் பார்வை குறைதல் அரசாங்கத்தாரால் கஷ்டம் நல்ல ஜனங்களின் மனஸ்தாபம் வெட்டுக் காயங்கள் வியாதிகள் முதலியவற்றைக் கொடுப்பான்.

**சுலோ.** $8\frac{1}{2}$-$9\frac{1}{2}$:—**புதன் சுபனுயிருப்பின் அவன் தசையில் :**—ஆடைகள் மிகுந்த செல்வம் தானியம் உயர்ந்தபதவி சௌக்கியம் சந்தோஷம் வீடு பந்துக்கள் நினைத்த காரியங்கள் சித்தியாகுதல் முதலியவைகளைத் தருவான்.

**புதன் அசுபனுயிருப்பின் அவன் தசையில்** :—ஜாதகன் பரதேசம் போவான், ஜாதகனுக்குக் கோபம் பந்து நஷ்டம் புத்திக் குறைவு வியாபாரிகளால் தொந்தரவு மனஸ்தாபம் பூமி நஷ்டம் திரவிய நஷ்டம் முதலியவைகளைத் தருவான்.

**சுலோ.** $9\frac{1}{2}$-$10\frac{1}{2}$ :—**குரு சுபனுயிருப்பின் அவன் தசையில்** :—கிராமாதிபத்தியம் சந்ததி செல்வம் சௌக்கியம் இவைகளைத் தருவான். ஜாதகன் நற்குணமுள்ளவனுயும் வேலையாட்கள் குதிரைகள் வாகனுதிகள் முதலிய சௌகரியங்களையும் அநுபவித்து வாழ்வான்.

**குரு அசுபனுயிருப்பின் அவன் தசையில்** :—ராஜாக்களின் கோபத்தையும் மனக்கிலேசத்தையும் வியாதிகளையும் பயத்தையும் தனதானிய நஷ்டத்தையும் பிராம்மண கோபத்தையும் பிதாவின் துக்கத்தையும் அகால போஜனத்தையும் க்ஷய ரோகத்தையும் தருவான்.

**சுலோ.** $10\frac{1}{2}$-$11\frac{1}{2}$ :—**சுக்கிரன் சுபனுயிருப்பின் அவன் தசையில்** :—சந்தோஷம் உயர்ந்தபதவி சந்தோஷப் பிரயாணம் அஷ்டைஸ்வரியம் நற்குணம் பொன் தோட்டம் குதிரைகள் சங்கீதம் ஊர்வலங்கள் முதலியவைகளைத் தருவான்.

**சுக்கிரன் அசுபனுயிருப்பின் அவன் தசையில்**:—கெட்டகுணம் மனைவிக்குத் தொந்தரவு திரவிய நாசம் வீட்டில் களவு பெரிய குற்றங்கள் ஸ்திரீ வியாதிகள் இவைகளைத் தருவான்.

**சுலோ.** $11\frac{1}{2}$-$12\frac{1}{2}$ :—**சனி சுபனுயிருப்பின் அவன் தசையில்**:—ஜாதகன் விருத்தியடைவான். ஜாதகனுக்கு நல்ல புத்தியையும் நிலங்களையும் கிராமாதிபத்தியத்தையும் தருவான். ஜாதகன் யாகங்களைச் செய்வான். ஜாதகன் பெரிய வியாபாரியாயும் அதிக ஊக்கமுள்ளவனுயும் இருப்பான்.

**சனி அசுபனுயிருப்பின் அவன் தசையில்** :—விஷத்தால் கண்டம் தன விரயம் தேக சிரமம் ராஜாக்களின் கோபம் காரிய பங்கம் மனக்கவலை கடின ரோகங்கள் முதலியவைகளைத் தருவான்.

**சுலோ.** $12\frac{1}{2}$-$13\frac{1}{2}$ :—**இராகு சுபனுயிருப்பின் அவன் தசையில்** :—மிகவும் உயர்ந்த பதவி சகல விதமான நற்குணங்கள் பலவித செல்வம் புண்ணிய க்ஷேத்திர யாத்திரை புநித கிரந்தங்களை வாசித்தல் முதலியவைகளைத் தருவான்.

**இராகு அசுபனுயிருப்பின் அவன் தசையில்** :—சர்ப்பம் முதலியவைகளால் கண்டம் விஷத்தால் கண்டம் வியாதி நெருப்பு பாணங்கள் விரோதிகள் இவர்களால் ஆபத்து மரத்திலிருந்து கீழே விழுதல் சத்துருக்களின் தொந்தரவு இவைகளைத் தருவான்.

**சுலோ.** $13\frac{1}{2}$-$14\frac{1}{2}$ :—**கேது சுபனுயிருப்பின் அவன் தசையில்** :—காரியசித்தி கொடிய செயல்களால் பணம் சம்பாதித்தல் அந்நிய நாட்டு ராஜாவினுல் செல்வம் காவிய மியற்றுதல் சத்துரு நாசம் இவைகளைத் தருவான்.

**கேது அசுபனுயிருப்பின் அவன் தசையில்** :—பலவித கஷ்டங்கள் காரிய நஷ்டம் லாபகரமில்லாத காரியங்களைச் செய்தல்

பதவிக்கு ஹானி கீல்நோய் க்ஷய ரோகம் தேக முழுவதும் நடுங்குதல் பெரியோர்களின் மனஸ்தாபம் கொடிய செயல்கள் இவைகளைத் தருவான்.

**சுலோ.** *14½-15½* :—இராகு அல்லது கேது இவர்கள் திரிகோணங்களிலிருந்து (5-9)2 அல்லது 7ஆம் வீட்டுக் கதிபர் களோடு சேர்ந்தாலும் பார்க்கப்பட்டாலும் தங்கள் தங்கள் தசையில் மாரகத்தைச் செய்வார்கள்.

இராகு கேதுக்கள் 7 அல்லது 2ஆம் வீட்டிலிருந்து 5-9ஆம் வீட்டுக்குடையவர்களோடு சேர்ந்தோ அல்லது பார்க்கப் பட்டோ இருப்பின் ஜாதகனுக்குச் செல்வத்தையும் தீர்க்காயு ளையும் கொடுக்கின்றார்கள்.

மேற்கூறியவாறு அஃதாவது இராகு 2 அல்லது 7-இல் இருந்து பாபக்கிரகங்கள் 2 அல்லது 7ஆம் வீட்டுக்கதிபர் களோடு சேர்ந்திருந்தால் தனது தசையில் மாரகத்தை ஜாதக னுக்குத் தருவார்கள்.

**சுலோ.** *15½-16½* :—இராகு கேதுக்களில் ஒருவர் உபய ராசியிலிருந்து 1-4-5-7-9-10க்குடையவர்களில் ஒருவரோடு சேர்ந்திருந்தாலும், அல்லது இராகு கேதுக்கள் †கேந்திராதி பத்தியத்தையோ திரிகோணுதி பத்தியத்தையோ பெற்றிருந் தாலும் இராகு கேதுக்கள் தங்கள் தசைகளில் செல்வத்தையும் சுகத்தையும் தருவார்கள்.

மேற்கூறிய இராகு கேதுக்கள் 6-8-12 ஆகிய துர்ஸ்தானங் களில் இருந்து அவ்வவ் வதிபர்களோடு சேர்ந்திருந்தாலும் அல்லது அவர்களின் பார்வையைப் பெற்றாலும் ஜாதகனுக்கு அதிக பலனைத் தரமாட்டார்கள். ஆனால் மேற்படி தசையில் ஜாதகனின் தாய்க்கோ அல்லது தாயின் நெருங்கிய பந்துக் களுக்கோ மரணத்தைக் கொடுப்பார்கள்.

**சுலோ.** *16½-17½* :—இவ்விரண்டு கிரகங்கள் (இராகு- கேது) ஸ்திரம் அல்லது சரராசிகளிலிருந்து கேந்திர திரி கோணுதிபதிகளோடு கூடியிருந்தால் சுபவீட்டிலிருக்கும் இவ்

† இதே அத்தியாயம் 19½ – 20½ சுலோகம் பார்க்க.

**வி**ரண்டு கிரகங்களில் ஒரு கிரகத்தின் தசையில் சுபத்தைத் தருகின்றன.

இவர்கள் பாபிகள் வீட்டிலிருந்தால் நல்ல பலனைத் தர மாட்டார்கள் என்பது சிலர் அபிப்பிராயம். நல்ல பலன்களை யும் சந்தோஷத்தையும் தருவார்கள் என்பது சிலர் அபிப் பிராயம். இவ்விரண்டு கிரகங்கள் பாபிகள் விட்டிலிருந்து சுபர்களோடு சேர்ந்தால் ஜாதகனுக்கு மாரகத்தைத் தருகின் ருர்கள்.

**சுலோ.** 17½-18½ :—இராகு கேதுக்கள் 6-8-12ஆம் வீடு களில் இருந்து அவ்வீட்டுக் கதிபர்களோடு சேர்ந்தாலும் பார்க் கப் பட்டாலும் தங்கள் தங்கள் தசைகளில் ஜாதகனுக்குத் தீய பலன்களைத் தருகின்ருர்கள்.

இவர்கள் மாரகக் கிரகங்களோடு அல்லது துர்ஸ்தாஞதி பதிகளோடு கூடிஞல் ஜாதகனுக்கு மரணத்தைக் கொடுப் பார்கள். இவர்கள் கேந்திராதிபதிகளோடும் திரிகோணுதிபதி களோடும் சேர்ந்து துர்ஸ்தானங்களில் இருந்தால் தங்கள் தசையில் கொஞ்சம் சுகத்தைக் கொடுத்துப் பிறகு வியாதிகள் காயங்கள் மனக்கஷ்டம் வெட்டுக்காயங்கள் ஜலத்தில் விழுந்து மரணமடைதல் தற்கொலை இவைகளால் மரணத்தைக் கொடுக் கின்றனர்.

**சுலோ.** 18½-19½ :—இவ்விரண்டு கிரகங்களும் பலம் பெற்ற யோககாரகர்களோடு சேர்ந்து 1-3-4-7-9-10ஆம் வீடு களிலிருப்பின் ஜாதகனுக்குச் செல்வம் சுகம் சந்ததி உயர்ந்த பதவி சிறந்த வாகனம் இவைகளைத் தருகின்ருர்கள்.

இக்கிரகங்கள் 7-2 ஆம் வீட்டுக்கதிபர்களோடு சேர்ந்தா லும் அல்லது அவர்களால் பார்க்கப்பட்டாலும் ஜாதகனுக்குத் தனவிரயத்தையும் மாரகத்தையும் கொடுப்பார்கள்.

**சுலோ.** 19½-20½:—**இராகு கேதுக்கள்** இவர்களுக்கு **உச்ச வீடுகள்** :—விருஷபமும் விருச்சிகமுமாகும். கும்பம் விருச்சிகம் இவைகள் **ஆட்சி வீடுகள்.** மிதுனம் கன்னி இவைகள் **மூலத்திரி கோண வீடுகள்.** சிங்கம் கடகம் இவைகள் **சத்துரு வீடுகள்.** துலாம் மகரம் இவைகள் **மித்துரு வீடுகள்.** மேஷம் தநுசு

மீனம் இவைகள் **சம வீடுகள்.** இவ்விரண்டு கிரகங்களும் உச்சத்திலிருந்தால் அதிக பலம் பெற்றவர்களாவர். மற்ற விடங்களிலிருப்பின் அந்த வீட்டிற்குத் தக்கபடியே பலனுமிருக்கும்.

**சுலோ.** $20\frac{1}{2}$-$21\frac{1}{2}$ :—இவ்விரண்டு கிரகங்களும் பலம் பெற்று ஏதாவதொரு பாவத்திலிருப்பினும் அல்லது அப்பாவாதிபதியுடன் ஏதேனு †மூன்றில் ஒருவித சம்பந்தம் பெறினும் தங்களுடைய தசைகளில் தனியாக நல்ல அல்லது தீய பலன்களைக் கொடுப்பார்கள். அவர்கள் எவ்வீட்டிலிருந்தாலும் அவ்வீட்டுக்கதிபனுடைய பலத்தையே பெறுவார்கள். அவர் கொடுக்கும் பலன்கள் அவ்வீட்டுக்கதிபதியின் பலத்தைப் பொருந்தியவைகளே யாகும்.

**மூன்றுவித சம்பந்தமாவன** :—

1. ஒருவர் இராசியில் மற்றவர் பரிவர்த்தனமாய் இருத்தல்.

2. ஒருவரை யொருவர் பரஸ்பரம் பார்த்தல்.

3. ஒருவருடைய கேந்திரத்திலோ அல்லது திரிகோணத்திலோ மற்றவர் இருத்தல்.

**சுலோ.** $21\frac{1}{2}$-$22\frac{1}{2}$ :—எந்தக் கிரகத்தின் தசை நடந்து கொண்டிருக்கின்றதோ அந்தக் கிரகமிருக்கும் வீட்டை லக்கினமாக வைத்துக்கொண்டு அங்கிருந்து புத்திநாதன் இருக்கும் பாவத்தைப் பார்க்கவேண்டும். தசாநாதனுக்கும் புத்திநாதனுக்கும் மற்றக் கிரகங்களின் பார்வை சேர்க்கை இவர்களாலுண்டாகும் பலத்தைக் கவனிக்க வேண்டும். இக்கிரகங்கள் பரஸ்பர சஷ்டாஷ்டகமாய் இருப்பின் நல்ல பலன் ஏற்படும். இப்படி யில்லாவிட்டால் கிரகங்களின் பலத்திற்குத் தக்கவாறு தீய பலன்கள் உண்டாகும்.

**சுலோ.** $22\frac{1}{2}$-$23\frac{1}{2}$ :—கேந்திர கோணாதிபதிகளின் தசாபுத்திகள் எப்பொழுதும் சுபத்தையே தரும். 2-3-11 இவ்

† மூன்றுவித சம்பந்தமாவன: 1. ஒருவர் இராசியில் மற்றவர் பரிவர்த்தனமாக இருத்தல். 2. ஒருவரை யொருவர் பரஸ்பரம் பார்த்தல். 3. ஒருவருடைய கேந்திரத்திலோ அல்லது திரிகோணத்திலோ மற்றவர் இருத்தல்.

வீட்டுக்கதிபர்களின் தசைகளிலும் புத்திகளிலும் மத்தியம பலன்கள் உண்டாகும். துர்ஸ்தாநாதிபதிகளின் அஃதாவது 6-8-12ஆம் வீட்டிற்கதிபன் தசைகளிலும் புத்திகளிலும் தீய பலன்களே பெரும்பாலும் நடைபெறும். ஆனுல் இப்பலன்களை தசாநாதன் அவனிருக்கும் வீடு இவைகளைக் கவனித்துச்சொல்ல வேண்டும்.

**சுலோ.** 23½-24½ :—தசாநாதன் இருக்கும் வீட்டிலிருந்து 6-8-12ஆம் வீடுகளில் இருக்கும் புத்திநாதன் தசா நாதனுக்குச் சத்துருவாகின்றுன். தசாநாதன் இருக்கும் வீட்டிற்கு 11-2-3-4-5-9-10ஆம் வீடுகளில் இருக்கும் கிரகங்கள் ஜாதகனுக்குச் சுப பலன்களையே கொடுக்கின்றுர்கள். தசாநாதன் இருக்கும் வீட்டிற்கு 7ஆம் வீட்டிலிருக்கும் கிரகமும் தசாநாதனுடன் சேர்ந்திருக்கும் கிரகமும் ஜாதகனுக்கு நன்மையையே தருகின்றுர்கள்.

**சுலோ.** 24½-25½ :—தசாநாதன் பாபியாகவும் புத்திநாதன் சுபனுகவும் இருந்து தசாநாதனேடு சேராமல் இருந்தால் தீய லன்கள் உண்டாகும். புத்திநாதன் சுபனுயிருந்து தசாநாத டு சேர்ந்திருந்தால் மிசிர பலன் உண்டாகும். புத்திநாதன் ககாரகனுய் இருந்தாலும் தசாநாதனேடு சேராமலிருப்பின் பலன்களையே கொடுப்பான். தசாநாதன் யோக காரகனு மாரகத்தைக் கொடுப்பவனுயும் இருப்பின் தன்னுடைய த்தியில் யோகபலன்களைத் தருவான்.

லோ. 25½-26½ :—யோககாரகனுடைய தசை முழுவ சுபமாயிருந்து அத்தசையில் பாபக்கிரகங்களின் புத்தி ம் சுபமாயிருப்பின் மேற்சொன்ன யோககாரகன் ஜாதக கு மாரகத்தைக் கொடுக்காமல் நீக்கிவை[illegible]ன்றுன். இத் கய தசாநாதன் மிசிர பலன்களைத் தருவதில்[illegible] அவ்வாறு ாசுப பலன்களைக் கலந்துகொடுப்பின் அத் போகுமென்பது பெரியோர்களின் அபிட்

சுலோ. 26½-27½ :—குருவும் சுக்கிரனு ாதகனுக்கு உயர்ந்த ப வைகளையும் மனைவி மக்க

யும் கொடுக்கின்றூர்கள். இவ்விரண்டு கிரகங்களும் பலம் பெற்று நல்ல பாவங்களிலிருந்து சுபர்களோடு சேர்ந்து அல்லது சுபர்களால் பார்க்கப்பட்டால் இவர்கள் தசாபுத்திகளில் யாகங்கள் புத்திரவிருத்தி கலியாணங்கள் சுபகாரியங்கள் முதலியன நடைபெறும்.

**சுலோ.** $27\frac{1}{2}$-$28\frac{1}{2}$ :—இவ்விரண்டு கிரகங்களும் ஒருவருக்கொருவர் சஷ்டாஷ்டகமாயிருப்பினும் அல்லது 2-12ஆம் வீடுகளிலிருப்பினும் அல்லது இவ்வீட்டிற்கு அதிபர்களோடு சேர்ந்தாலும் அல்லது மேற்படி கிரகங்களால் பார்க்கப்பட்டாலும் அல்லது தாமே அவ்விரண்டு வீட்டின் அதிபர்களாயிருந்து பாபக்கிரகங்களால் பார்க்கப்பட்டோ அல்லது சேர்ந்தோ இருந்து * திக்கு பலத்தில் பலங் குறைந்தாலும் தங்கள் தங்கள் தசைகளில் மனைவி மக்களின் பிரிவு பிராமணர் கோபம் ஸ்திரீகளால் தொந்தரவு ராஜாக்களின் கோபம் காக்கைவலிப்பு பயம் இவைகளைக் கொடுப்பார்கள்.

**சுலோ.** $28\frac{1}{2}$-$29\frac{1}{2}$ :—சுக்கிரனும் சனியும் உச்சத்திலோ ஸ்வக்ஷேத்திரத்திலோ அல்லது வர்க்கோத்தமாம்சத்திலோ இருந்து யோக பலனைத் தரும் பலமுள்ளவர்களாய் இருந்தா[illegible] அவரவர்கள் தசையில் தசாபுத்திகளில் குபேரனைப் [illegible] செல்வமுடைய ஜாதகர்களையும் தரித்திரத்தினுல் கஷ்டம[illegible] யும்படி செய்வார்கள். இவ்விரு கிரகங்களில் ஒரு கிரகம் ப[illegible] பெற்றும் மற்றொரு கிரகம் † பலஹீனமாயும் இருப்பின் ப[illegible] பெற்ற கிரகமே யோகத்தைக் கொடுக்கும்.

**சுலோ.** $29\frac{1}{2}$-$30\frac{1}{2}$ :—இவ்விரு கிரகங்களும் பலமாயி[illegible] ஒருவருக்கொருவர் 12-8-6இல் இருந்தாலும் அல்லது மே[illegible] கூறிய 12-8-6க்[illegible]டையவர்களா யிருந்தாலும் அல்லது 12-8-6[illegible] குடையவர்களோடு சேர்ந்தாலும் ஜாதகனுக்குச் செல்வத்[illegible] [illegible] கொடுப்பார்கள். இவர்களில் ஒரு கிரகம் சு[illegible] [illegible]றொரு கிரகம் அசுப வீட்டிற்கும் அதிபர்கள[illegible] [illegible] பலனையே கொடுப்பார்கள். இவ்விரு கி[illegible] [illegible]யின் ஜாதகனுக்கு உத்த[illegible]க்கம் பலனை[illegible]

---

[illegible]று. † ஷட்பலத்தில் ப[illegible]

**சுலோ.** $30\frac{1}{2}$-$31\frac{1}{2}$ :—சூரியனும் சனியும் ஸ்வக்ஷேத்திரங்களிலோ அல்லது உச்சத்திலோ அல்லது பரஸ்பர நவாம்சங்களிலோ இருந்தாலும், அல்லது கேந்திர திரிகோணங்களிலிருந்தாலும், அல்லது கேந்திர திரிகோணுதிபதிகளானுலும், சனி தசையில் சூரிய புத்தியில் ராஜ சன்மானம் தனம் இவைகளையும், சூரிய தசையில் சனி புத்தியில் சௌக்கியம் செல்வம் ஜெயம் இவைகளையும் தருவார்கள்.

**சுலோ.** $31\frac{1}{2}$-$32\frac{1}{2}$ :—மேற்சொன்ன பிரகாரம் செவ்வாயும் குருவும் பலம் பெற்றுச் சுபஸ்தானங்களிலிருந்து சுபக்கிரகங்களின் பார்வை சேர்க்கை இவைகளை யடைந்தால் ஜாதகனுக்கு ராஜயோகத்தையும் எல்லாவிதமான சுக சந்தோஷங்களையும் தீர்க்காயுளுள்ள புத்திரர்களையும் கலியாணம் முதலிய சுபசடங்குகள் செய்யும் பலனையும் கொடுப்பார்கள்.

**சுலோ.** $32\frac{1}{2}$-$33\frac{1}{2}$ :—மேற்சொன்ன பிரகாரம் புதனும் குருவும் பலம் பெற்றிருப்பின் ஜாதகன் தரும சீலனும் வித்துவானும் வியாபாரத்தில் கெட்டிக்காரனும் நல்ல மனைவிமக்களோடு கூடினவனும் இருப்பான். சுக்கிரன் புதன்-குரு சந்திரன்-சந்திரன் சுக்கிரன்-குரு சூரியன், சூரியன் செவ்வாய், சூரியன் புதன், முறையே கூடிய இந்த இரண்டு கிரகங்களுக்கும் குருவுக்கும் புதனுக்கும் கூறிய சுபபலன்களையே தருவார்கள்.

**சுலோ.** $33\frac{1}{2}$-$34\frac{1}{2}$ :—ஜனன காலத்தில் சூரியனுடைய நிலையைக் கண்டு பிடித்துக் கொள்க. நாம் எந்த வருஷத்தின் பலனை யறிய வேண்டுமோ அந்த வருஷம் எத்தனையாவது நாள் நாழிகை நேரத்தில் சூரியன் சரியாக ஜனன காலத்தில் இருந்த நிலைக்கு வருகிருரென்று கவனிக்க வேண்டும். இது ஜாதகனுக்கு ஒரு சூரிய வருஷமாகும். அப்பொழுது இலக்கினத்தையும் கிரகங்கள் இருக்குமிடங்களையும் தெரிந்து கொண்டு அந்தச் சமயம் கிரகங்களின் சப்தவர்க்கஜ பலத்தைக் கணித்து அறிந்து கொள்ளவேண்டும். இவைகளைக் கொண்டு ஜாதகனுக்கு அந்த வருஷத்தில் ஏற்படும் பலன்களை யறியலாம். அந்தக் காலத்தில் ஜன்ம நட்சத்திரத்திலிருந்து சந்திரனிருக்கும் நட்சத்திரம் வரையில் எண்ணி வந்த தொகையை

9-ஆல் வகுத்து வரும் ஈவு சூரியனிலிருந்து முறையே நடக்கும் தசையைக் குறிப்பிடும்.

**சுலோ** $34\frac{1}{2}$-$36\frac{1}{2}$ :—அப்பொழுது சந்திரனிருக்குமிடத்தைக் கண்டு பிடித்துச் சந்திரனிருக்கும் நட்சத்திரத்தில் இன்னும் எத்தனை நாழிகைகள் செல்ல வேண்டியதா யிருக்கின்றதென்று அறிந்து கொள்ளவேண்டும். இந்த நாழிகைகளைக் கீழே சொல்லப்பட்ட கிரகங்களின் தசா நாட்களினுல் பெருக்கிச் சந்திரன் நட்சத்திரத்தின் மொத்த நாழிகை (பரம நாழிகை) களால் வகுத்தால் ஆரம்ப தசையின் நாட்கள் நாழிகைகள் வரும். 365 நாட்கள் உள்ள வருஷத்தில் சூரியன்-சந்திரன்-செவ்வாய்-புதன்-குரு-சுக்கிரன்-சனி-இராகு-லக்கினம் இவைகளின் தசை முறையே 110-60-32-40-48-56-4-5-10 நாட்களாகும். இவ்வாறே அவ்வருஷத்தில் நடக்கும் 2-ஆவது 3-ஆவது முதலிய எல்லாத் தசைகளையும் கணக்கிட வேண்டும். தசைகளின் சுபா சுப பலன்களைக் கிரகங்களின் **திக்கு பலம்** முதலியவற்றைக் கொண்டும் வருஷாரம்பத்தின் இலக்கினத்தைக் கொண்டும் கிரகமிருக்கும் பாவத்தைக் கொண்டும் அந்தக் கிரகத்தின்மேல் உள்ள பார்வைகளைக் கொண்டும் பலாபலன்களை நன்கறிந்து சொல்ல வேண்டும்.

**சுலோ.** $36\frac{1}{2}$-$37\frac{1}{2}$ :—இவ்வாறு பலன்களைச் சொல்லும்பொழுது கிரகங்கள் தங்கள் கோசாரத்தில் ஜென்ம ராசியிலிருந்து பல வீடுகளில் சஞ்சரிக்கும்பொழுது கொடுக்கும் பலன்களையும் கவனிக்கவேண்டும்.

**சுலோ.** $37\frac{1}{2}$-$38\frac{1}{2}$ :—**ஒரு வருஷத்தில் ஏற்படும் பல தசைகளின் பலன்கள்.**

**சூரியன் பலமுடையவனுயிருப்பின்** :—அவன் தசையில் தன லாபம் புதிய ஆடைகள் ஆபரணங்கள் இவைகளைத் தருவான்.

**சூரியன் பலஹீனனுயிருப்பின்** :—அவன் தசையில் பாப காரியங்களைச் செய்தல் சத்துருக்களால் கஷ்டம் தன நஷ்டம் பல வித துன்பம் இவையுண்டாம்.

**சந்திரன் பலமுடையவனுயிருப்பின்** :—அவன் தசையில் ராஜ சன்மானம் ஏராளமான தன லாபம் உயர்ந்த பதவி இவைகளைத் தருவான்.

**சந்திரன் பலஹீனனுயிருப்பின் :**—அவன் தசையில் வியாதி ஸ்தானப் பிரஷ்டம் துக்கம் பல ஜனங்களின் மனஸ்தாபம் சத்துருக்களால் தொந்தரவு இவையுண்டாம்.

சுலோ. $38\frac{1}{2}$-$39\frac{1}{2}$ :—**செவ்வாய் பலமுடையவனுயிருப்பின் :** அவன் தசையில் ராஜ சன்மானம் குடும்ப சௌக்கியம் காரிய சித்தி இவைகளுண்டாம்.

**செவ்வாய் பலஹீனனுயிருப்பின் :**—அவன் தசையில் ராஜாக் களின் கோபம் மனைவி மக்களோடு மனஸ்தாபம் தன நாசம் இவையுண்டாம்.

**புதன் பலமுடையவனுயிருப்பின் :**—அவன் தசையில் ஜாதகன் ஊக்கமுள்ளவனுய்ப் பலவித சந்தோஷங்களையும் லாபத்தையும் அடைவான்.

**புதன் பலஹீனனுயிருப்பின் :**—அவன் தசையில் சகோதரர்களின் மனஸ்தாபம் துர்நடத்தை பிராமணரை இம்சித்தல் முதலியன உண்டாம்.

சுலோ. $39\frac{1}{2}$-$40\frac{1}{2}$ :—**குரு பலமுடையவனுயிருப்பின் :**— அவன் தசையில் ஜாதகனுக்குத் திரண்ட திரவியம் கூர்மையான புத்தி நல்ல வாகனங்கள் மாட மாளிகைகள் உண்டாம்.

**குரு பலஹீனனுயிருப்பின் :**—அவன் தசையில் ஸ்தானப் பிரஷ்டமும் தனநாசமும் ஏற்படும். ஜாதகனும் துர்ச்சனனுய் இருப்பான்.

**சுக்கிரன் பலமுடையவனுயிருப்பின் :**—அவன் தசையில் தனுகமம் கீர்த்தி வெண்மை நிறமுள்ள ஆடைகள் ஸ்திரீகளின் சேர்க்கை முதலியன உண்டாம்.

**சுக்கிரன் பலஹீனனுயிருப்பின் :**—அவன் தசையில் தன நஷ்டம் சத்துருக்களால் தொந்தரவு பொல்லாப்பு ஸ்திரீ சம்பந்தத்தினுலுண்டான வியாதிகள் முதலியன உண்டாம்.

சுலோ. $40\frac{1}{2}$-$41\frac{1}{2}$ :—**சனி பலமுடையவனுயிருப்பின் :**— அவன் தசையில் ஜாதகனுக்குச் சிறந்த வீடு சுகம் கிராமாதிபத்தியம் இவையுண்டாம்.

**சனி பலஹீனனாயிருப்பின் :**—அவன் தசையில் தனநாசம் வியாதி மெலிந்த தேகம் பொல்லாப்பு கெட்ட பெயர் இவை யுண்டாம்.

**இராகு பலமுடையவனாயிருப்பின் :**—அவன் தசையில் சத் காரியங்களைச் செய்தல் தனலாபம் உயர்ந்த பதவி இவை யுண்டாம்.

**இராகு பலஹீனனாயிருப்பின் :**—அவன் தசையில் தகப்ப னுக்கு அரிஷ்டம் நீச ஜனங்களின் சேர்க்கை சத்துருக்களோடு கூடுதல் இவையுண்டாம்.

**சுலோ.** $41\frac{1}{2}$-$42\frac{1}{2}$ **இலக்கின தசையில் :**—இலக்கினாதிபன் இருக்கும் திரேக்காணத்திற்குத் தக்கவாறும் அவனோடு சம்பந் தம் பெற்ற கிரகங்களுக்குத் தக்கவாறும் இலக்கினாதிபன் தசையில் பலன்கள் உத்தம-மத்திம-அதமமாயிருக்கும். ஒரு வருஷத்தில் நடக்கும் தசாபலன்களை முக்கியமாகக் கிரகங்கள் சுபக்கிரகங்களோடு சேர்ந்து அடையும் பலத்தைக் கவனித்துக் கூறவேண்டுமென்பது பெரியோர்களின் அபிப்பிராயம்.

நாலினை மார்பிற் கொள்ளும் நுட்பம துடைய கோள்கள்
கோலிய விடங்கள் தம்மிற் குணமதுங் குணம தில்லா
வாலிய பலன்கள் தந்தும் வரிசையில் நிறுத்து மென்று
வாலிய வமுதச் சொல்லா லறைந்தன னறிஞ ரேறே.

விக்ரமா தித்த மன்னன் விரும்பிய வவையின் மிக்கோன்
சக்ரமாற் பணியும் வள்ளல் சற்சனர் நேச முள்ளோன்
துக்கம தில்லா னென்றுந் தூய்மையாம் நெஞ்ச முள்ளோன்
பக்குவ மாகச் செய்தான் பாரினோர் களிக்க மன்னோ.

சூரியன் சோம னரல் சொல்புதன் வியாழன் வெள்ளி
காரியன் ராகு கேது கண்டிடு திசைக டம்மில்
பாரியாம் பலன்கள் மிஞ்சிப் பாக்கியஞ் சேருமென்றும்
தாரினேன் காளி தாசன் தந்தன னிந்த நூலே.

ஆறாவது அத்தியாயம் முற்றிற்று.

# ஏழாவது அத்தியாயம்.

## பிரசினம்.

**சுலோ.** 1:—கிரகங்களிருக்கும் பல ராசிகளைக் கொண்டும் இலக்கினத்தைக் கொண்டும் ஜாதக பலன்களைக் கூறவேண்டும். ஜாதகமில்லாவிடில் பலன்களைப் பிரசின காலத்தின் லக்கினத்திலிருந்து அறியவேண்டும். ஜாதக பலன்களுக்கும் பிரசின லக்கின பலன்களுக்கும் வித்தியாசமே இராது. ஆரூடம் கேட்கும் சமயம் மந்தாரமாயிருந்து சூரிய உதயத்திலிருந்து சென்றிருக்கும் நாழிகைகளைச் சரியாகக் கணக்கிட முடியாவிட்டால் 13-ஆவது சுலோகத்தில் சொல்லும் முறையில் இராசிகளையும் நவாம்சங்களையும் அறியவேண்டும்.

**சுலோ.** 2 :—ஆரூடம் கேட்போன் ஜோதிஷருக்குப் பழம் தட்சிணை தாம்பூலம் முதலியவைகளைக் கொடுத்து 108-க்குள் ஒரு எண்ணிக்கையைச் சொல்லவேண்டும். இதைக்கொண்டு ஜாதகனுடைய பூத பவுஷ்ய வர்த்தமானங்களைக் கூறலாம்.

**சுலோ.** 3 :—இந்தச் சங்கியைகளை யெடுத்துக்கொண்டு அதை 9-ஆல் வகுத்து வந்த ஈவு ஆரூட காலத்தில் மேஷத்திலிருந்து சென்றிருக்கும் ராசிகளையும் சேடம் லக்கினத்தில் பாக்கியிருக்கும் நவாம்சங்களையும் குறிப்பிடும். பிறகு கிரகங்கள் அவைகளிருக்கும் பாவங்கள் காரகர்கள் காரகர்களில் பலம் பெற்றவர்கள் இவைகளைக் கொண்டு சுபாசுப பலன்களைக் கூற வேண்டும்.

**சுலோ.** 4 :—ஜோதிஷம் கூறுபவர்கள் ஆரூடம் கேட்பவனால் தனக்குக் கொடுக்கப்பட்ட புஷ்பங்களையும் நாணயங்களையும் எண்ணி அதை வினவுவோன் சொன்ன எண்ணிக்கையால் பெருக்கி 12ஆல் வகுத்து வந்த சேடம் ஆரூடம் கேட்பவனுடைய ஜனன காலத்தில் மேஷத்திலிருந்து குருவிருக்கும் ராசியைக் குறிப்பிடுகின்றது. ஆரூட காலத்தில் குருவிருக்கும் இடத்தைக் கொண்டும் வினவுவோனைப் பார்த்தும் அவனுடைய வயதைக் கண்டு பிடிக்கலாம். இவ்வயதின் மாதம்

**நாட்கள்** முதலியன ஆரூடகாலத்தில் குரு தானிருக்கு மிராசி யில் எத்தனை பாகங்கள் சென்றிருக்கின்றனவோ அவைகளால் மாசங்களையும் நாட்களையும் கண்டு கொள்ளலாம். இவ்வாறு வந்த மொத்த தொகையைச் சூரியனுடைய ஆரூடகாலத்தின் நிலையிலிருந்து கழித்தால் வினவுவோன் பிறந்த வருடம் மாதம் இவைகளை அறியலாம்.

**சுலோ.** 5 :—மாதம் வாரம் அன்றைக்குச் சென்ற நாழிகை கள் இவைகளெல்லாம் சூரியனைப் பொருத்தவை. (சௌர மானம்) இதிலிருந்து சந்திரனுடைய நிலை சாந்திரமான வருஷங் கள் மாதம் திதி முதலியவைகளையும் பூரண ஜாதகத்தையும் அறியலாம். இவ்வாறு நஷ்ட ஜாதகங்களைக் கணித்துக் கொள்ளலாம்.

**சுலோ.** 6 :—வினவுவோன் கூறிய எண்ணிக்கையை 2ஆல் பெருக்கி 3ஆல் வகுத்துவந்த சேடமானது 1 **ஆயின்** ஆரூடம் உயிருள்ள வஸ்துவைப் பற்றியும், சேடம் 2 **ஆயின்** ஆரூடம் உலோகம் தாதுப்பொருள்களைப் பற்றியும் **சேடம்** 0 ஆயின் ஆரூடம் செடிகளைப்பற்றியும் கூறவேண்டும்.

ஆரூட லக்கினம் **மேஷமானால்** மனிதன் முதலியனவும் கோழி பறவை முதலியனவும், **விருஷபமானால்** நாற்கால் பிராணி களையும், **மிதுனமானால்** கர்ப்பிணி ஸ்திரீயையும், **கடகமானால்** கோர்ட்டு விவகாரங்களையும், **சிம்மமானால்** அரசாங்க விஷயத் தையும் குறிப்பிடுகின்றன.

**சுலோ.** 7 :—ஆரூட லக்கினம் **கன்னியானால்** பரஸ்திரீ சங்க மத்தையும், **துலாமானால்** வியாபாரத்தையும், **விருச்சிகமானால்** கெட்ட ஜனங்களின் பயத்தையும், **தநுசானால்** நஷ்டமான திரவியத்தையும், **மகரமானால்** பாவச் செயல்களையும், **கும்ப மானால்** மதச்சடங்குகளையும், **மீனமானால்** பதவி இருப்பிடம் இவைகளையும் குறிப்பிடுகின்றன. இராசி நவாம்சங்கள் இவை களில் எது பலம் பெற்றிருக்கின்றதோ அதைத்தான் கவனிக்க வேண்டுமென்பது பெரியோர்களின் அபிப்பிராயம்.

**சுலோ.** 8 :—ஆரூட காலத்தில் **சூரியன் தன்னுடைய சுய ராசி அம்சைகளில் இருந்தால்** ஆரூடம் அரசன் இராச்சியம் இவை

களையும், **சந்திரனிருந்தால்** குளம் முதலியவைகளையும், **செவ்வாயிருந்தால்** நெருப்பு ராஜாக்கள் விரோதிகள் இவர்களால் அபாயத்தையும், **புதனிருந்தால்** வியாபாரத்தையும் பயிர்த் தொழிலையும், **குருவிருந்தால்** அரசன் சிநேகிதன் இவர்களையும், **சுக்கிரனிருந்தால்** சந்தோஷத்தையும், **சனியிருந்தால்** ஒரு மனிதனையோ அல்லது தாவர சொத்துக்களையோ குறிப்பிடுகின்றது.

**சுலோ.** *9* :—கிரகம் **உச்ச** மாயிருப்பின் விசேட பலனைத் தரும். **நீச** மாயிருப்பின் பலன்களைக் கொடுப்பதேயில்லை. கிரகம் **மித்துரு** க்ஷேத்திரத்திலிருந்தால் அரைப்பங்கு பலத்தையும், **சம** க்ஷேத்திரத்திலிருந்தால் அற்பபலனையும் கொடுக்கும். 2-கிரகங்கள் உச்சமாகவோ அல்லது உச்சக்ஷேத்திரங்களிலோ இருந்தால் இவ்விரு கிரகங்களில் எது பலம் பெற்றது அதன் காரகத்துவமென்ன அக்கிரகங்களிலிருக்கும் பாவங்களெவை என்னும் விஷயங்களை யறிந்து ஆரூடம் சொல்லவேண்டும்.

**சுலோ.** *10* :—ஆரூடகாலத்தில் கிரகம் **உச்சமாயிருந்தால்** சொற்ப நாழிகைகளிலும், கிரகம் **ஸ்வக்ஷேத்திரத்தி**லிருந்தால் சில நாட்களிலும், கிரகம் **மித்துரு** க்ஷேத்திரத்திலிருந்தால் சில மாதங்களிலும், இவ்வாறில்லாவிடில் சில வருஷங்களிலும் நினைத்த காரியம் கைகூடும். கிரகம் மற்றவிடங்களிலிருந்து பாபக்கிரகங்களின் சேர்க்கை பார்வை இவைகளை யடைந்தால் காரியம் சித்தியாகாது என்று சொல்க. இலக்கினத்தில் சனியிருப்பினும் அல்லது இலக்கினாதிபதியும் ஆரூட விஷயம் எந்தப் பாவத்தைக் குறிப்பிடுகின்றதோ அந்தப் பாவமும் சுபர்களின் சேர்க்கை பார்வை இவைகளை யடைந்தால் உடனே காரிய சித்தி யுண்டாகுமென்று ஸ்பஷ்டமாய்ச் சொல்லலாம்.

**சுலோ.** *11* :—அடி வானத்தில் 360 பாகைகள் இருக்கின்றன. 30 பாகைகளுக்கு ஒரு ராசி வீதம் ஆகின்றன. 108 நவாம்சங்களும் இப்பன்னிரண்டு ராசிகளி லிருக்கின்றன. மேஷம் முதலான சர ஸ்திர ராசிகள் முறையே கிழக்கையும், தெற்கையும், மேற்கையும், வடக்கையும் குறிப்பிடுகின்றன. மிதுனம் கன்னி தநுசு மீனமாகிய இந்நான்கு உபயராசிகளும் முறையே தென்கிழக்கு தென்மேற்கு வடமேற்கு வடகிழக்கு இவைகளைக் குறிப்பிடுகின்றன. கிரகங்கள் இருக்கும் சுதந்

ஸ்புடங்களைத் தெரிந்து கொண்டு அவைகள் இருக்கும் ராசி நவாம்சங்களைக் குறிப்பிடவேண்டும்.

**சுலோ.** *12* :—ஒருவன் பழங்களையும் புஷ்பங்களையும் கையில் வைத்துக்கொண்டு அது தெரியும்படியாய்க் கேட்பவன் இருக்கும் திக்கைக் கவனித்து அது ஜோதிஷனுக்கு எந்தத் திக்காகின்றதோ அது **ஆரூட** லக்கினமாகும். இவ்வாரூட லக்கினத்திற்கு அதிபதியான கிரகத்தையும் ஆரூட விஷயம் எந்த வீட்டிற்குரியதோ அந்த வீட்டையும் ஆரூட லக்கினாதிபன் ஆரூட விஷயத்தைக் குறிப்பிடும் வீடு இவைகளைப் பார்க்கும் அல்லது இவர்களோடு சேர்ந்திருக்கும் கிரகங்களைக் கொண்டும் ஆரூட பலன்களைப் பார்க்கவேண்டும்.

**சுலோ.** *13* :—ஆரூட காலத்தில் சூரிய உதயத்திலிருந்து சென்ற நாழிகைகளை 9ஆல் பெருக்கி 20ஆல் வகுத்துவந்த ஈவு நாழிகை விநாடிகளில் ஆரூடகாலத்தில் சந்திரனுடைய இருப்பிடத்தைக் குறிப்பிடும். இந்தச் சந்திரனுடைய இருப்பிடமும் பஞ்சாங்க ரீதியாய்ச் சந்திரன் இருக்கும் இருப்பிடமும் ஆகிய இவைகள் ஸ்தூல சூட்சுமம் எனப்படும். இவைகளின் நவாம்சங்களைக் கண்டு பிடிக்கவேண்டும்.

**சுலோ.** *14-15* :—ஸ்தூல சந்திரன் சூட்சும சந்திரன், புதன் குரு இவர்களால் பார்க்கப்பட்டால் கேட்கும் விஷயம் ஒரு பிராணியைப் பற்றியதாகும். செவ்வாய் சனி இராகு இவர்களால் பார்க்கப்பட்டால் தாது அல்லது கனிஜப் பொருள்களைக் குறிப்பிடும். சுக்கிரன் சூரியன் பார்த்தால் ஸ்தாவர வர்க்கங்களைக் குறிப்பிடும். குரு சுக்கிரன் இராகு இம் மூவரும் பார்த்தால் மூன்று விஷயங்களும் கலந்திருக்கும். ஸ்தூல சந்திரன், துலாம் கன்னி மிதுனம் ஆகிய நவாம்சங்களிலிருந்தால் மனிதன் அல்லது இருகாற் பிராணியைக் குறிப்பிடும். கடகம் விருச்சிகம் மீனம் ஆகிய நவாம்சங்களிலிருந்தால் பல கால் பிராணியைக் குறிப்பிடும். ஸ்தூல சந்திரன் தநுசு அல்லது கும்பம் ஆகிய நவாம்சங்களிலிருந்தால் காலில்லாத பிராணிகளையும், மேஷம் சிம்மம் மகரம் விருஷபம் ஆகிய நவாம்சங்களிலிருந்தால் நாற்கால் மிருகங்களையும் குறிப்பிடும். ஆரூட காலத்தில் கிரகங்கள் ராசிகளில் இருக்கும் திரேக்காணங்களி

லிருந்து அஃதாவது 1-2-3 ஆவது திரேக்காணங்களிலிருந்து அவைகளின் 3 விதமான அவஸ்தைகளைப் †பாலாவஸ்தை யௌவனவஸ்தை விருத்தாவஸ்தை என்பதைத் தெரிந்து கொள்ளலாம் என்பது பெரியோர்களின் அபிப்பிராயம்.

பாலாவஸ்தை-யௌவனவஸ்தை-விருத்தாவஸ்தை முதலியன:—கிரகங்கள் முதல் திரேகாணத்திலிருப்பின் பாலாவஸ்தையென்றும், இரண்டாந் திரேகாணத்திலிருப்பின் யௌவனவஸ்தையென்றும், மூன்றாந் திரேகாணத்திலிருப்பின் விருத்தாவஸ்தையென்றும் பெரியோர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

**சுலோ.** 16:—மேஷாதி ராசிகள் முறையே சரம் ஸ்திரம் உபயம் எனப்படும். சரராசிகளுக்குக் **கர்ப்ப** ராசிகளென்றும், ஸ்திர ராசிகளுக்குத் **துவார** ராசிகளென்றும், உபய ராசிகளுக்குப் **பாகிய** ராசிகளென்றும் பெயருண்டு. கர்ப்ப துவார ராசிகள் வலது கையில் உள்ள பொருள்களையும் பாகிய ராசிகள் இடது கையில் உள்ள பொருள்களையும் குறிப்பிடும். கைகளில் மறைத்து வைத்துள்ள பொருள்களை இவ்வாறறிந்து கொள்ளலாம்.

**சுலோ.** 17:—இம்மாதிரி கையிலிருக்கும் பொருள்களைப் பற்றி எல்லா விஷயத்தையும் தெரிந்து கொள்ளலாம். ராசிகளின் பரிமாணத்தைக் கொண்டு இப்பொருள்களின் நீளத்தையும் நவாம்சங்களைக் கொண்டு பொருள்களின் வடிவம் நிறம் இவைகளையும் அறிந்து கொள்ளலாம். பொருள்களின் குணம் நல்லது கெட்டது என்பதை ராசியிலிருக்கும் சுபாசுபக் கிரகங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். பொருள் எங்கு இருக்கின்றதென்பதையும் (அஃதாவது மலைகள் ஜலம் ஆகாயம் பூமி) அது கொடூரமானது கரட்டுத்தனமுள்ளது (முரட்டுத்தனம்) சாந்தமானது வீட்டிலேயே பழகினது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

---

† எந்தத் திரேக்காணங்களி லிருக்கின்றனவோ அவைகளுக்கேற்ப முதற்றிரேக்காணத்திலிருப்பின் பாலாவஸ்தை யென்றும், இரண்டாந் திரேக்காணத்திலிருப்பின் யௌவனவஸ்தை யென்றும், மூன்றாந் திரேக்காணத்திலிருப்பின் விருத்தாவஸ்தை யென்றும் பெரியோர்கள் கூறுவார்கள்.

**சுலோ.** *18* :—மேற் சொன்ன பிரகாரம் வினவுவோன் கூறிய எண்ணிக்கையை 5-ஆல் வகுத்து வந்த சேடம் முறையே 1-2-3-4-5 ஆனால் ஆரூட விஷயம் அத்தனை நாழிகைகளில் அஃதாவது வருஷம் மாசம் நாள் நாழிகை விநாடி இவைகளில் கை கூடுமென்பது திண்ணம். இவ்வாறு வகுத்து வந்த ஈவை வினவுவோன் கூறிய எண்ணிக்கையோடு சேர்த்து வந்த தொகையை முறையே 60-30-7-12-60 இவைகளால் தனித் தனியே வகுத்து வந்த சேடங்கள் அத்தனை நாழிகை நாட்களில் காரியம் கைகூடு மென்பதைக் குறிப்பிடுகின்றன. எல்லாவித மான கேள்விகளுக்கும் இவ்வாறே பதிலளிக்க வேண்டும்.

**சுலோ.** *19* :—இலக்கினம் ஆரூட விஷயத்திற்குரிய பாவம் இவைகளின் அதிபர்கள் சுபர்களாயிருந்து சுபர்களின் வீட்டி லிருந்து ஒருவரோடொருவர் 12 பாகைக்குள் இருப்பின் இக் கிரகங்களின் பலத்தைக் கொண்டும், இவர்களின் பார்வையைக் கொண்டும் (அஃதாவது பார்வை உத்தமம் மத்திமம் அதமம் என்பதைக் கொண்டும்) காரிய சித்தியைக் கூறவேண்டும். காரக கிரகங்களின் பலத்தையும் கவனிக்கவேண்டும். இதுவு மல்லாமல் மேற்கூறிய இலக்கின பாவாதிபதிகளின் இடையில் 12 பாகைகளுக்குள் ஏதேனும் கிரகமிருந்தால் பலன் கூறும் பொழுது அக்கிரகத்தின் சுபாவம் காரகம் இவைகளைக் கவ னிக்க வேண்டும். இவ்விதமே காரிய சித்தி காலத்தையும் கூற வேண்டும்.

ஆரூடங் கேட்போர் அங்நிலை கண்டு
கோரிய பலன்கள் குலவிடு மாறு
இலக்கினங் கொண்டே ஏற்ற பலனெலா
இலகிடச் சொல்வோன் இலக்கண மறிந்த
காளி தாசன் கான்மல ரநுதின
நாண்மலர் கொண்டு நன்கருச் சித்தே
பேர்பெறு வாராய்ப் பெட்போ
டார்கலி யுலகி லமருவ ரினிதே.

ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

## எட்டாவது அத்தியாயம்.

## பிரகிரண பலம் (விவிதம்.)

**சுலோ.** 1 :—**கர்ப்பாதானம். சந்திரன்,** ரோகணி மிருகசிரம் பூரம் பூராடம் பூரட்டாதி திருவாதிரை புனர்பூசம் பூசம் அஸ்தம் சித்திரை சுவாதி விசாகம் அநுஷம் திருவோணம் அவிட்டம் சதயம் உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி இந்த நட்சத்திரங்களில் இருக்கும்போது துதியை பஞ்சமி சப்தமி துவாதசி தசமி திருதியை திரயோதசி முதலிய திதிகளிலும் வியாழன் புதன் வெள்ளி திங்கட்கிழமைகளிலும் ஒரு கிரகமும் இல்லாத சுபலக்கினத்திலும் கர்ப்பாதானம் செய்வது உத்தமம். அஷ்டமி பௌர்ணமி அமாவாசை இவைகளில் கர்ப்பாதானம் செய்யக் கூடாது.

**சுலோ.** 2 :—நிஷேக முகூர்த்தம் ருதுகாலந் தொடங்கி முதல் தடவை நிஷேகஞ் செய்வதற்குக் கர்ப்பாதான மெனப்படும். **சந்திரன்,** அஸ்தம் சுவாதி மூலம் அநுஷம் சதயம் திருவோணம் ரோகணி உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி ரேவதி இந்த நட்சத்திரங்களில் இருந்து லக்கினம் சுபமாயிருந்து லக்கினத்தில் கிரகங்கள் இல்லாமலிருக்கும் பொழுது நிஷேகம் செய்தல் உத்தமம்.

**சுலோ.** 3 :—ஒரு பெண் 16 வயதாகியும் தேகமும் குசங்களும் நன்ருய் வளர்ந்தும் ருதுவாகாவிட்டால் அந்தப் பெண்ணை ஒரு சுப தினத்தில் வெண்மை நிறமுள்ள ஆடைகளாலும் பொன்னுபரணங்களாலும் அலங்காரஞ் செய்து ஒரு மனோகரமான இடத்தில் உட்கார வைக்க வேண்டும். அவளுடைய மர்மஸ்தானத்தில் அத்தர் வாசனைத் திரவியங்கள் கலந்த குங்குமத்தைப் பூசவேண்டும்.

**சுலோ.** 4 :—மூன்று நாள் வரையில் அந்தப் பெண்ணை ஓரிடத்தில் இருக்கச் செய்து நான்காவது நாளில் ஸ்நானம் செய்து வைக்கவேண்டும். பிறகு அப்பெண்ணின் கணவன் முன் கூறியவாறு சுப லக்கினத்தில் இலக்கினத்திற்கு 5-ஆம்,

வீட்டில் கிரகங்கள் ஒன்றுமில்லாதிருக்கும்பொழுது அவளை அணுகவேண்டும். இவ்வாறு செய்தால் பெண் கொஞ்ச காலத்தில் ருதுவாய்ச் சந்தான பாக்கியத்தை அடைவாள். அவள் கணவனோடு இன்ப சுகத்தை அநுபவிப்பதற்கும் தேவதா பிதுரு கிரியைகளைச் செய்வதற்கும் உரிமையுள்ள வளாவாள்.

**சுலோ.** 5 :—ஜனன காலத்தில் **சந்திரன்**, ஆயில்லியம் மகம் இவைகளிலிருந்தால் கீழ்க்கண்ட பலன்கள் நடக்கும். ஜாதகன் ஆயில்லியம் முதற் பாதத்தில் ஜனிக்கின் தனநாசமும், 2-ஆவது பாதத்தில் ஜனிக்கின் சகோதரர்களுக்கு நஷ்டமும், 3-ஆவது பாதத்தில் ஜனிக்கின் தாய்க்கு நஷ்டமும், 4-ஆவது பாதத்தில் ஜனிக்கின் தகப்பனுக்கு மரணமும் உண்டாகும். ஆயில்லியத்தின் கடைசி பாதத்தில் ஜனிக்கின் ஜாதகனுக்கு மரணம் உண்டாகும். இத்தோஷத்தை நிவர்த்தி செய்வதற்குச் சிவபெருமான்—காலஅந்தகன்—மிருத்தியு இந்தத் தேவதைகளுக்குச் சாந்தி செய்யவேண்டும். மக நட்சத்திரத்தில் ஜனித்த ஜாதகனுக்கு அஃதாவது 1-2-3-4 பாதங்களில் ஜனித்தால் மேற் சொல்லிய பலன்களுக்கு நேர் விரோதமாய் நடக்கும்.

**சுலோ.** 6 :—ஜனன காலத்தில் **சந்திரன்**, கேட்டை மூலம் ரேவதி அசுவினி இவைகளிலிருந்தால் முன் கூறிய பலன்களே நடக்கும். இதில் ஆயில்லியம் கேட்டை ரேவதி இவைகளின் கடைசிப் பாகையும், அசுவினி மகம் மூலம் இவைகளின் முதற் பாகையும், கண்டாந்தராளம் எனப்படும். இதில் ஜனித்தவர்கள் அற்பாயுளை அடைவார்கள். இதற்குத் தப்பிப் பிழைத்திருப்பின் பலம் பொருந்திய சக்கரவர்த்தியாகவோ அல்லது அரசனாகவோ விளங்கி வாழ்வார்கள்.

**சுலோ.** 7 :—இத்தகையனவாகிய மேற்கூறிய நட்சத்திரங்களில் ஒரு பெண் ருதுவானால் அவள் சீக்கிரத்தில் விதவையாவாள். அவளுக்குச் சந்ததிகளும் செல்வங்களும் சௌக்கியங்களும் ஆடைகளும் இருக்கா. அன்றியும் அவள் கொடூர மன முடையவளாயும் தன் தகப்பனின் குடும்பத்திற்குத் தீமையை விளைவிப்பவளாயும் இருப்பாள். தேவதைகளுக்கும் பிராமணர்களுக்கும் ஹோமம் அர்ச்சனை இவைகளைச் செய்தால்

அப்பெண் அத்துன்பத்தினின்று விடுபட்டுச் சமஸ்த பாக்கியங்களையும் சந்ததிகளையும் அடைந்து சுகமாய் இருப்பாள்.

**சுலோ.** 8 :—நான்கு நாழிகை அடங்கிய தியாச்சிய காலத்தில் ஜனித்த அல்லது ருதுவான பெண் முதலாவது நாழிகையில் தகப்பனுக்கு மரணத்தையும், 2-ஆவது நாழிகையில் தாய்க்கு மரணத்தையும், 3-ஆவது நாழிகையில் தன நஷ்டத்தையும், 4-ஆவது நாழிகையில் தனக்கு மரணத்தையும் உண்டு பண்ணும், இக்கொடிய பலன்களை நீக்குவதற்கு முதலாவது சிவபெருமானையும், 2-ஆவது யமனையும், 3-ஆவது அக்கினியையும், 4-ஆவது மிருத்தியு தேவதையையும் பூஜிக்க வேண்டும்.

சூரியன் அல்லது சந்திரகிரகண காலத்தில் ஜனித்த அல்லது ருதுவானபெண் முறையே 1-ஆவது தகப்பனுக்கும் ; 2-ஆவது தாய்க்கும் மரணத்தைக் கொடுப்பவளாவாள்.

**சுலோ.** 9 :—**சந்திரன்,** ஒரு நட்சத்திரத்தின் † அமிர்த கடிகையில் இருக்கும்பொழுது மருந்தைத் தயார் செய்து சாப்பிட்டால் அஃது அமிர்தத்தைப்போல் வேலை செய்து வியாதிகளைப் போக்கும். ஜாதகனுக்குத் தேக ஆரோக்கியத்தையும் புஷ்டியையும் தீர்க்காயுளையும் தரும். சமுத்திரத்தில் ஜனித்த தன்வந்திரி ரிஷியானவர் வியாதிகளுக்கு இன்னின்ன மருந்துகள் செய்ய வேண்டுமென்பதைக் கூறியுள்ளார்.

**சுலோ.** 10 :—ஒரு மனிதனுக்கு 60 வயதாகியும் சந்ததியில்லாமலிருந்தாலும் அல்லது ஜாதக ரீதியாக சந்ததியில்லா

† அமிர்த கடிகையின் விவரம். விதான மாலையின்படி.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அசுவனி | -21 | மகம் | -20 | மூலம் | -14 |
| பரணி | -30 | பூரம் | -30 | பூராடம் | -10 |
| கார்த்திகை | -50 | உத்திரம் | -33 | உத்திராடம் | -14 |
| ரோகணி | -14 | அஸ்தம் | -7 | திருவோணம் | -20 |
| மிருகசிரம் | -30 | சித்திரை | -16 | அவிட்டம் | -14 |
| திருவாதிரை | -40 | சுவாதி | -22 | சதயம் | -20 |
| புனர்பூசம் | -14 | விசாகம் | -20 | பூரட்டாதி | -10 |
| பூசம் | -11 | அநுடம் | -14 | உத்திரட்டாதி | 18 |
| ஆயில்யம் | -40 | கேட்டை | -31 | ரேவதி | -12 |

**இந்நாழிகைகளுக்குமேல் நான்கு நாழிகை அமிர்த கடிகைகளாம்.**

தவனையும் அல்லது அற்பாயுளுள்ள குழந்தைகளையுடையவனு யிருந்தாலும் அவன் ஒரு புத்திரனை சுவீகாரம் எடுத்துக்கொள் ளுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இவ்வாறு தேர்ந் தெடுக்கப்பட்ட சிறுவன் தீர்க்காயுளுள்ளவனையும் கீர்த்திமா னையும் புத்திர பாக்கியமுள்ளவனையும் புத்திசாலியாயும் இருக்க வேண்டும். சுவீகாரம் உத்தராயணத்தில் ஒரு சுபநாளிலும் மத்தியானத்திற்கு முன்னும் செய்துகொள்ள வேண்டும்.

**சுலோ.** *11* :—இவ்வாறு சுவீகாரம் செய்யப்பட்ட சிறுவன் சுவீகார தகப்பனுருடைய சுய கோத்திரத்தில் பிறந்தவனாய் இருத்தல் வேண்டும். சுவீகாரபுத்திரனின் தகப்பனார் இவர் களின் கூடங்களில் 20 கூடங்களாவது பொருந்தியிருக்க வேண்டும்.

சுவீகார காலத்தில் **சந்திரன்**, கீழ்க்கண்ட நட்சத்திரங்களில் இருக்க வேண்டும். 1. சுவாதி, 2, புனர்பூசம், 3. பூசம், 4. ரோகிணி, 5. அநுஷம், 6. அஸ்தம், 7. ரேவதி, 8. அசு வினி, 9. திருவோணம், 10. அவிட்டம், 11. சதயம், 12. உத்திரம், 13. உத்திராடம், 14. உத்திரட்டாதி இந்த நட்சத் திரங்களில் இருக்க இலக்கினத்திலும் 5-ஆம் வீட்டிலும் பாபக் கிரகங்கள் இருக்கக்கூடாது. சந்திரன் தாராபலத்தோடு கூடின வனையும், பலம் பெற்றவனையும் இலக்கினம் சுபர்களின் பார்வை அல்லது சேர்க்கை இவைகளை யடைந்திருப்பது நலம்.

**சுலோ.** *12* :—விவாகத்திற்குப் பூர்வான்னமான காரியங் களைச் சுமங்கலிகள் : **சந்திரன்**, 1. புனர்பூசம், 2. பூசம், 3. அசுவினி, 4. அநுஷம், 5. அஸ்தம், 6. சித்திரை, 7. சுவாதி, 8. திருவோணம், 9. அவிட்டம், 10. சதயம் இந்த நட்சத் திரங்களில் இருக்கும்பொழுது செவ்வாய் வெள்ளி இவ் விரண்டு கிழமைகள் தவிர (மற்றக் கிழமைகளில்) அஃதாவது ஞாயிறு, திங்கள், புதன், வியாழன், சனி இந்தக் கிழமைகளில் ஆரம்பிக்க வேண்டும். அப்பொழுது லக்கினம் சுபமாகவும் இலக்கினத்திலிருந்து 5-9-ஆம் வீடுகளில் கிரகங்கள் இல்லா மலும் இருத்தல் வேண்டும், இக்காரியங்களை ஆரம்பிப்பதற்கு முன் கிரக சாந்தி செய்ய வேண்டும். இக் காரியம் செய்யும் போது சங்கீதம் கீர்த்தனம் இவைகள் இருக்கவேண்டும்.

### இலக்கினப் பத்திரிகை எழுதுதல்.

**சுலோ.** *13*:—**முகூர்த்தப் பத்திரிகை சக்கரம்.** விவாக சுப முகூர்த்தப் பத்திரிகைகளைப் பூர்ண சந்திரன் இருக்கும் நாளிலும் அல்லது சந்திரன் பாபர்கள் சேர்க்கை அல்லது பார்வையில்லாமலிருக்கும் புதன்கிழமையிலும் அல்லது வியாழன் வெள்ளிக்கிழமைகளிலும் அல்லது †பத்திரம்-பூரணம்-ஜயை திதிகளிலும் அல்லது சந்திரன், சுவாதி, புனர்பூசம், திருவோணம், அவிட்டம், சதயம், அசுவினி, அஸ்தம், பூசம் இவைகளில் இருக்கும் பொழுதும் புதன் குரு சுக்கிரன் இவர்களின் பார்வை சேர்க்கையுள்ள லக்கினத்திலும் இலக்கினத்திற்கு 5-ஆம் வீட்டில் கிரகங்கள் இல்லாமலிருக்கும்பொழுதும் லக்கின பத்திரிகைகளை எழுத வேண்டும்.

### கூர்மச் சக்கரம்.

**சுலோ.** *14*:—**முகூர்த்தக்கால் சக்கரம்.** கலியாணப் பந்தலுக்கு முகூர்த்தக்கால் நடுங் காலத்து அன்றைய திதிகளின் எண்ணிக்கையை 5-ஆல் பெருக்கின தொகையோடு கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து அன்றைய நட்சத்திரத்தின் தொகை வரையில் எண்ணிச் சேர்த்து இதனுடன் துருவம் 12-ஐச் சேர்த்து 9-ஆல் வகுத்து வந்த சேடம் 1-4-7-வரின் கூர்மராஜன் ஜலத்திலிருப்பான். இதன் பலன் நன்மை யுண்டாகும். சேடம் 2-5-8-வரின் கூர்மராஜன் நிலத்திலிருப்பான், இதன் பலன் நஷ்டமுண்டாகும். சேடம் 3-6-9-வரின் கூர்மராஜன் ஆகாயத்திலிருப்பான். இதன் பலன் மரணமுண்டாகும்.

### மங்களச் சக்கரம்.

**சுலோ.** *15*:—**முகட்டுச் சக்கரம்.** ஒரு புதுக்கட்டிடத்தைக் கட்டுங்காலத்தில் செங்குத்தான உருளை போன்ற மூன்று உருவங்களை யெழுதி ஒவ்வொன்றிலும் நான்கு மாடமான வரிகளை வரைய வேண்டும். இவைகளில் அசுவினி முதலிய நட்சத்திரங்களைக் குறிப்பிடவேண்டும். மேலே ஏறும் நட்சத்திரங்களும்

---

† பத்திரம் = துதியை, சப்தமி, துவாதசி
பூரணம் = பஞ்சமி, தசமி, பௌர்ணமி
ஜயை = திருதியை, அஷ்டமி, திரயோதசி

உச்சியிலிருக்கும் மூன்று நட்சத்திரங்களும் சுப பலனைக் கொடுக்கும். ஆனால் மேல் ஏறும் பக்கத்தில் பாபக்கிரகங்கள் இருப்பின் மரணத்தையும் சுபக்கிரகங்கள் இருப்பின் சுபபலனை யும் கொடுக்குமென்ப. இதற்கு மங்களச் சக்கரம் என்று பெயர்.

| மிருகசிரம். | | சித்திரை. | | அவிட்டம். | |
|---|---|---|---|---|---|
| ↑ரோக | திருவா | ↑அஸ்தம் | சுவாதி | ↑திருவோ | சதயம் |
| கார்த | புனர்பூ | உத்திர | விசாக | உத்திரா | பூரட்டாதி |
| பரணி | பூசம் | பூரம் | அநுட | பூராட | உத்திரட் |
| அசுவி | ஆயில் ↓ | மகம் | கேட் ↓ | மூலம் | ரேவதி ↓ |

## விருஷப சக்கரம்.

**சுலோ.** *16* :—**விருஷப சக்கரம்.** ஒரு புதிய வீட்டிற்குக் கிருகப் பிரவேசம் செய்யும்போது அல்லது ஒரு புதிய காரி யத்தை ஆரம்பிக்கும் போது அக்காலத்தில் சூரியனிருக்கும் நட்சத்திரம் முதல் சந்திரன் இருக்கும் நட்சத்திரம் வரையில் எண்ணவேண்டும். இவ்விதம் எண்ணும்போது அபிசித்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு எண்ணி வந்த நட்சத்திரம் சூரியனிருக்கும் நட்சத்திர முதல் 7 நட்சத்திரங் களுக்குள் இருப்பின் தீயபலன் உண்டாகும். இதன்மேல் 4 நட்சத்திரங்களுக்குள் இருப்பின் சுபபலன் உண்டாகும். இதன்மேல் 3 நட்சத்திரங்களுக்குள் இருப்பின் தீய பலன் உண்டாகும். இதன்மேல் 14 நட்சத்திரங்களுக்குள் இருப்பின் நல்ல சுபபலன் உண்டாகும். இதற்கு விருஷப சக்கரமென்று பெயர்.

## கலச சக்கரம்.

**கலச சக்கரம்.** இதேமாதிரி சூரியனிருக்கும் நட்சத்திரத் திலிருந்து சந்திரன், இருக்கும் நட்சத்திரம் 5-க்குள்ளிருப்பின் கெட்ட பலன் உண்டாகும். இதன்மேல் 8 நட்சத்திரங்களுக் குள் இருப்பின் நல்ல பலனுண்டாகும். இதன்மேல் 8 நட்சத் திரங்களுக்குள் இருப்பின் கெட்ட பலன் உண்டாகும். இதன் மேல் 6 நட்சத்திரங்களுக்குள் இருப்பின் சுபபலன் உண்டா கும். இதற்குக் கலச சக்கரம் என்றுபெயர். இம்மாதிரி ஒரு

புது காரியத்தின் நல்ல அல்லது கெட்ட பலன்களை எளிதில் அறியலாம்.

### தாச சக்கரம்.

**சுலோ.** *17-18½ :—* **தாச சக்கரம்.** இதன் உருவம் மானிட வுருவம் ஆண். வேலைக்காரனுடைய ஜென்ம நட்சத்திரத்திலிருந்து எஜமானனுடைய ஜென்ம நட்சத்திரம் வரையில் எண்ணிவந்த எண்ணிக்கை 3-க்குள் இருந்தால் தனலாபம் உண்டாகும். இதன்மேல் 3-க்குள் இருந்தால் நாசம் உண்டாகும். இதன்மேல் 5-க்குள் இருந்தால் அதிக தனலாபம் உண்டாகும். இதன்மேல் 6-க்குள் இருந்தால் தாரித்திரம் உண்டாகும். இதன்மேல் 2-க்குள் இருந்தால் உயிருக்கு ஆனி உண்டாகும். இதன்மேல் 4-க்குள் இருந்தால் மிகுந்த சுப முண்டாகும். இதன்மேல் 2-க்குள் இருந்தால் மிகுந்த பயம் உண்டாகும். இதன்மேல் 2-க்குள் இருந்தால் தனத்தையும் மரணத்தையும் தரும். இதற்குத் தாசச் சக்கரம் என்று பெயர்.

### தாசீ சக்கரம்.

**தாசீ சக்கரம்.** இதன் உருவம் மானிட வுருவம் ஆனால் ஸ்திரீ ரூபமுள்ளது. இச்சக்கரத்தில் முதல் 3-நட்சத்திரங்கள் மிகுந்த லாபத்தைத் தரும். இதன்மேல் 3-நட்சத்திரங்கள் நஷ்டத்தைத் தரும். இதன்மேல் 2-நட்சத்திரங்கள் யஜமானனுக்கு மரணந் தரும். இதன்மேல் 5-நட்சத்திரங்கள் வளர்ச்சியைத் தரும். இதன்மேல் 7-நட்சத்திரங்கள் அதிக நஷ்டத்தைத் தரும். இதன்மேல் 1-நட்சத்திரம் அவமானத்தைத் தரும். இதன்மேல் 6-நட்சத்திரங்கள் தனநஷ்டத்தைத் தரும். தாசீ சக்கரமென்பது மேற்கூறிய தாச சக்கரத்தைப் போன்றது.

### இடபச் சக்கரம்.

**சுலோ.** *18½-19½ :—* **மாட்டின் சக்கரம்.** ஒரு பசு மாட்டை அல்லது எருமை மாட்டை வாங்கும்போது கீழ்க்கண்ட விதமாக பலன்கள் நடைபெறும். உத்திர நட்சத்திரத்திலிருந்து மாடு வாங்கும் நட்சத்திரம் வரைக்கும் எண்ணிவந்த தொகை. 1 முதல் 3-க்குள் இருந்தால் சிரசு. இதன் பலன் மிகுந்த

லாபத்தைத் தரும். இதன்மேல் 2-க்குள் இருந்தால் முகம். இதன் பலன் நஷ்டத்தைத் தரும். இதன்மேல் 8-க்குள் இருந்தால் இரண்டு கால்கள். இதன் பலன் தனலாபத்தைத் தரும். இதன்மேல் 5-க்குள் இருந்தால் மார்பு. இதன் பலன் சந்தோஷத்தைத் தரும். இதன்மேல் 8-க்குள் இருந்தால் ஸ்தனங்கள். இதன் பலன் லாபத்தைத் தரும். இதன்மேல் 1-க்குள் இருந்தால் யோனி. இதன் பலன் பெரும் பயத்தைத் தரும்.

இவ்வாறே காளைகளையும், மற்ற நாற்கால் பிராணிகளையும் வாங்கும் காலத்தில் இச்சக்கரத்தைக் கவனிக்கவேண்டும். இதற்கு இடபச் சக்கரமென்று பெயர்.

## அசுவச்சக்கரம்.

**சுலோ.** $19\frac{1}{2}$-$20\frac{1}{2}$ :—**அசுவ சக்கரம்.** ஒரு குதிரையின்மேல் ஏறும்போது சூரியனிருக்கும் நட்சத்திரத்திலிருந்து தனது ஜென்ம நட்சத்திரம் வரையில் அபிசித்து உள்பட எண்ண வேண்டும். இவ்வாறு எண்ணி வந்த தொகை 5-க்குள் இருந்தால் முதுகு. இது மிகுந்த செல்வத்தைத் தரும். இதன்மேல் 10-க்குள் இருந்தால் பின்பாகம். இது மிகுந்த லாபத்தைத் தரும். இதன்மேல் 2-க்குள் இருந்தால் வால். இது களத்திர நஷ்டந்தரும். இதன்மேல் 4-க்குள் இருந்தால் கால். இது பலவித சங்கடந்தரும். இதன்மேல் 5-க்குள் இருந்தால் வயிறு. இது நாசந்தரும். இதன்மேல் 2-க்குள் இருந்தால் முகம். இது தனலாபந்தரும். இதற்கு அசுவச்சக்கரமென்று பெயர்.

## கஜ சக்கரம்.

**சுலோ.** $20\frac{1}{2}$-$21\frac{1}{2}$ :— **கஜ சக்கரம்.** ஒரு யானையின்மேல் ஏறும்போது சூரியனிருக்கும் நட்சத்திரத்திலிருந்து தனது ஜென்ம நட்சத்திரம் வரையில் அபிசித்து உள்பட எண்ண வேண்டும். இவ்வாறு எண்ணி வந்த தொகை முதல் 2-க்குள் இருந்தால் காதுகள். இது லாபந்தரும். இதன்மேல் 2-க்குள் இருந்தால் சிரசு. இது லாபந்தரும். இதன்மேல் 2-க்குள் இருந்தால் தும்பிக்கை. இது அதிக லாபந்தரும். இதன்மேல் 2-க்குள் இருந்தால் வால். இது நாசந்தரும். இதன்மேல் 2-க்குள் இருந்தால் உடம்பு. இது செல்வந்தரும். இதன்மேல்

4-க்குள் இருந்தால் முதுகு. இது தனந்தரும். இதன்மேல் 4-க்குள் இருந்தால் மார்பு. இது வியாதி தரும். இதன்மேல் 4-க்குள் இருந்தால் முகம். இது விசேட பலன் தராது. இதன் மேல் 6-க்குள் இருந்தால் கால்கள். இது மிகுந்த லாபந்தரும். இதற்குக் கஜ சக்கரம் என்று பெயர்.

## சிவிகைச் சக்கரம்.

**சுலோ.** $21\frac{1}{2}$-$22\frac{1}{2}$ :—**சிவிகைச் சக்கரம்.** ஒரு பல்லக்கில் ஏறும்போது சூரியனிருக்கும் நட்சத்திரத்திலிருந்து அன்றைய நட்சத்திரம் வரையில் எண்ணி வந்த தொகை 1 முதல் 5 வரையில் கிழக்கு. இதன் பலன் தேகாரோக்கியம். இதன்மேல் 5-க்குள் இருப்பின் தெற்கு. இதன் பலன் கஷ்டம். இதன் மேல் 5-க்குள் இருப்பின் மேற்கு. இதன்பலன் தேகமெலிவு. இதன்மேல் 5-க்குள் இருப்பின் வடக்கு. இதன் பலன் வியாதி. இதன்மேல் 7-க்குள் இருப்பின் பல்லக்கின் மத்திய பாகம். இதன் பலன் மிகுந்த உத்தமமான சுப பலன் எனப் பெரியோர்கள் கூறுகின்றனர். பல்லக்கில் சுப லக்கினத்தில் ஏறினால் தீர்க்காயுசு சந்தோஷம் முதலிய சுப பலன் உண்டாம்.

## சத்திரச் சக்கரம்.

**சுலோ.** $22\frac{1}{2}$-24 :—**பூச்சக்கரக் குடைச் சக்கரம்.** ஒருவன் பூச்சக்கரக் குடையைப் பிடித்துக்கொள்ளுவதற்குத் திருவாதிரை உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி ரோகணி பூசம் திருவோணம் அவிட்டம் சதயம் முதலிய நட்சத்திரங்கள் மிகுந்த சுபந் தரும். தான் ஜனித்த நட்சத்திரத்திலிருந்து சூரியனிருக்கும் நட்சத்திரம் வரையில் எண்ணிவந்த தொகையில் 3. நட்சத்திரங்கள் பூச்சக்கரக் கொடையின் கைப்பிடி. இதன் பலன் நாசந் தரும். இதன்மேல் 7 நட்சத்திரங்கள் கைப்பிடியின்மேலிருக்கும் கழி. இதன் பலன் தனநஷ்டந் தரும். இதன் மேல் 5 நட்சத்திரங்கள் கொடைக்கு மேல் தெரியும் சிகரத்தின் குச்சி. இதன் பலன் ராஜ சன்மானந் தரும். இதன்மேல் 8 நட்சத்திரங்கள் கொடையின் உள்பக்கம். இதன் பலன் சிறந்த அரசனுதல். இதன்மேல் 4 நட்சத்திரங்கள் கொடையின்மேலுள்ள சிகரம். இதன் பலன் மிகுந்த கீர்த்தியுண்டாம். இதற்குச் சத்திரச் சக்கரம் என்று பெயர்.

## மஞ்சச் சக்கரம்.

**சுலோ.** *25:—* **மஞ்சச் சக்கரம்.** *சூரியனிருக்கும் நட்சத்திரத்திலிருந்து அன்றைய நட்சத்திரம் வரையில் எண்ணி மஞ்சத்தின் மூலைகளுக்கு 4-நட்சத்திரங்களாகவும் கட்டில் கால்களின் கொம்மைக்கு ஒவ்வொரு நட்சத்திரமாகவும் கட்டிலின் நடுமையத்திற்கு 7 நட்சத்திரங்களாகவும் வைத்துக்கொள்ள வேண்டும். இதன் பலன்: 4-மூலைகள். அதிக பயம் தரும். நடுமையம் அதிக சந்தோஷம் தரும். கொம்மைகள் செல்வம் சந்தானப் பிராப்தி முதலியன உண்டாகும். இதற்கு மஞ்சச் சக்கரமென்று பெயர்.*

## சாபச் சக்கரம்.

**சுலோ.** *26:—* **சாப சக்கரம்.** *சூரியனிருக்கும் நட்சத்திரத்திலிருந்து ஜென்ம நட்சத்திரம் வரையில் எண்ணி வந்த தொகையில் 5 நட்சத்திரங்கள் அம்பின் வாய். இதன் பலன் மிகுந்த லாபந் தரும், இதன்மேல் 5-நட்சத்திரங்கள் அம்பின் கைப்பிடி. இதன் பலன் மிகுந்த ஜெயந் தரும். இதன்மேல் 5 நட்சத்திரங்கள் வில்லும் அம்பும் சேருமிடம். இதன் பலன் மிகுந்த தைரியந் தரும். இதன்மேல் 2 நட்சத்திரங்கள் வில்லின் பிரம்பு. இதன் பலன் காரிய நஷ்டந் தரும். இதன்மேல் 5, 5 நட்சத்திரங்கள் வில்லின் இரண்டு நுனிகள். இதன் பலன்: மிகுந்த நாசந் தரும். இதற்குச் சாபச் சக்கரமென்று பெயர்.*

## இரதச் சக்கரம்.

**சுலோ.** *27:—* **இரத சக்கரம்.** *சூரியனிருக்கும் நட்சத்திரத்திலிருந்து ஜென்ம நட்சத்திரம் வரையில் எண்ணி வந்த நட்சத்திரம் முதல் 3-க்குள் இருந்தால் இரதத்தின் மத்திய ஸ்தம்பம். இதன் பலன் ஜெயமுண்டாம். இதன்மேல் 6 நட்சத்திரங்கள் இரதத்தின் சக்கரங்கள். இதன் பலன் கீர்த்தியுண்டாம். இதன்மேல் 3 நட்சத்திரங்கள் உச்சி, இதன் பலன் மரணமுண்டாம். இதன்மேல் 6 நட்சத்திரங்கள் இரதத்தின் அடிப்பாகம். இதன் பலன் சௌக்கியமுண்டாம். இதன்மேல் 3 நட்சத்திரங்கள் இரதத்தின் முன்பாகம். இதன் பலன் தனலாபமுண்டாம். இதன்மேல் 3 நட்சத்திரங்கள் ஏர்க்கால்கள்.*

இதன் பலன் காரிய நஷ்டமுண்டாம். இதன்மேல் 3 நட்சத்திரங்கள் எல்லாவிடங்களாம். இதன் பலன் மிகுந்த சௌக்கியமுண்டாம். இதற்கு இரதச் சக்கரமென்று பெயர்.

## குருணச் சக்கரம்.

**சுலோ.** 28 :—**குருணச் சக்கரம்.** சூரியனிருக்கும் நட்சத்திர முதல் அன்றைய நட்சத்திரம் வரையில் எண்ணி வந்த நட்சத்திரங்களை 3 நட்சத்திரமுள்ள 9 பாகமாக்கவேண்டும். முதல் 3 நட்சத்திரங்கள் நாசந் தரும். 2-ஆவது மூன்று நட்சத்திரங்கள் செல்வந்தரும். 3-ஆவது மூன்று நட்சத்திரங்கள் வியாதி நீங்கி ஆரோக்கியந் தரும். 4-ஆவது மூன்று நட்சத்திரங்கள் நாசந்தரும். 5-ஆவது மூன்று நட்சத்திரங்கள் தன விருத்தியைத் தரும். 6-ஆவது மூன்று நட்சத்திரங்கள் அரசாங்கத்தாரால் பீடை தரும். 7-ஆவது மூன்று நட்சத்திரங்கள் வறுமை தரும். 8-ஆவது மூன்று நட்சத்திரங்கள் மரணந்தரும். 9-ஆவது மூன்று நட்சத்திரங்கள் சந்தோஷந் தரும். இதற்குக் குருணச் சக்கரமென்று பெயர்.

## சாறுபிழிச் சக்கரம்.

**சுலோ.** 29:—**சாறுபிழிச் சக்கரம்.** சூரியனிருக்கும் நட்சத்திரத்திலிருந்து சந்திரனிருக்கும் நட்சத்திரம் வரையில் எண்ணி வந்த தொகை முதல் 4 வரையில் சௌக்கியம். இதன்மேல் 2-க்கு நாசம். இதன்மேல் 2 க்கு அதிக லாபம். இதன்மேல் 1-க்கு நாசம். இதன்மேல் 5-க்கு மரணம். இதன்மேல் 5-க்கு சுபம். இதன்மேல் 2-க்கு தேக மெலிவு. இதன்மேல் 6 க்கு அதிக தனம். இம்மாதிரி குருண சக்கரத்திலிருந்து சுபமுகூர்த்தத்தைக் கண்டுபிடித்துக் கரும்புச் சாற்றை எடுக்கவேண்டும்.

## கலப்பைச் சக்கரம்.

**சுலோ.** 30 :—**கலப்பைச் சக்கரம்.** சூரியனிருக்கும் நட்சத்திரத்திலிருந்து அன்றைய நட்சத்திரம் வரையில் எண்ணி வந்த தொகை 1-2-3 ஆயின் அசுபம். 4-5-6 ஆயின் சுபம். 7-8-9 ஆயின் அசுபம். 10-11-12-13-14 ஆயின் சுபம். 15-16-17 ஆயின் அசுபம். 18-19-20-21-22 ஆயின் சுபம். 23-24-25 ஆயின் அசுபம். 26-27 ஆயின் சுபம். இதற்குக் கலப்பைச்

சக்கரம் என்று பெயர். இச் சக்கரத்தை விதை விதைக்கும் பொழுதும் பயிர்செய்யும்பொழுதும் கவனிக்கவேண்டும்.

## மரக்கலச் சக்கரம்.

**சுலோ.** *31* :—**நாவாய்ச் சக்கரம்.** சூரியனிருக்கும் நட்சத்திரத்திலிருந்து அன்றைய நட்சத்திரம் வரையில் அபிசித்து உள்பட எண்ணி வந்த நட்சத்திரங்கள் 6-க்குப் படகின் மேல் பாகம். இதன்மேல் 3 நட்சத்திரங்கள் மூட்டுக்காலின் உச்சி; இதன்மேல் 3 நட்சத்திரங்கள் மூட்டுக்காலின் அடிப்பாகம். இதன்மேல் 1 நட்சத்திரம் மூட்டுக்காலின் பின்பக்கம். இதன் மேல் 6 நட்சத்திரங்கள் மூட்டுக்காலின் பக்கங்கள். இதன் மேல் 3 நட்சத்திரங்கள் சுக்கான். இதன்மேல் 6 நட்சத்திரங்கள் படகின் உட்பாகம். இந்தச் சக்கரத்தைப் புதிய தோணியைச் செய்யும் பொழுதும் தோணியில் பிரயாணம் செய்யும் பொழுதும் உபயோகிக்கவேண்டும். படகின் மேல் பாகத்திலுள்ள 6 நட்சத்திரங்களும் படகின் உட்பாகத்திலுள்ள 6 நட்சத்திரங்களும் சுப பலனைத் தரும். மற்றப் பாகங்களிலுள்ளவைகள் அசுப பலனைத் தரும்.

## தீபச் சக்கரம்.

**சுலோ.** *32* :—**தீபச் சக்கரம்.** கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து அன்றைய நட்சத்திரம் வரையில் எண்ணி வந்த முதல் 5 நட்சத்திரங்கள் முகம். இதன் பலன் சன்மானந்தரும். இதன் மேல் 9 நட்சத்திரங்கள் கழுத்து. இதன் பலன் லாபந்தரும். இதன்மேல் 8 நட்சத்திரங்கள் மத்திய பாகம். இதன் பலன் எஜமானனுக்கு மரணந்தரும். இதன்மேல் 5 நட்சத்திரங்கள் தீபஸ்தம்பத்தின் பீடம். இதன் பலன் அரச பதவி தரும். இந்தத் தீபச் சக்கரத்தைப் புதிய விளக்குகளை ஏற்றும்பொழுது கவனிக்கவேண்டும். இதற்குத் தீப சக்கரமென்று பெயர்.

## கூபச் சக்கரம்.

**சுலோ.** *33* :—**ஜல சக்கரம்.** உரோகணியிலிருந்து 3 நட்சத்திரங்களை நடுமையத்திற்கும் பாக்கி 24 நட்சத்திரங்களை மூன்று மூன்று நட்சத்திரக் கூட்டங்களாகப் பிரித்துக் கிழக்கிலிருந்து

ஆரம்பித்து 8 திக்குகளுக்கும் வைத்துக்கொள்ளவேண்டும். சந்திரன் இந்த நட்சத்திரக் கூட்டங்களில் இருக்கும்பொழுது கிணறு அல்லது குளம் வெட்டினால் ஜலம் அகப்படும் அகப்படாதென்பதைக் கீழ்க்கண்டபடி அறிய வேண்டும்.

1. கிழக்கு. இதில் சந்திரனிருந்தால் ஜலம் சீக்கிரத்தில் அகப்படும். 2. தென்கிழக்கு இதில் சந்திரனிருந்தால் ஜலம் அகப்படாது. 3. தெற்கு இதில் சந்திரனிருந்தால் கொஞ்சம் ஜலம் அகப்படும். 4. தென்மேற்கு இதில் சந்திரனிருந்தால் ஜலம் அகப்படாது. 5. மேற்கு இதில் சந்திரனிருந்தால் ஜலம் ஏராளமாய்க் கிடைக்கும். 6. வடமேற்கு இதில் சந்திரனிருந்தால் இனிப்பான ஜலம் கிடைக்கும். 7. வடக்கு இதில் சந்திரனிருந்தால் உப்பு ஜலம் கிடைக்கும். 8. வடகிழக்கு, இதில் சந்திரனிருந்தால் ஜலம் நிறைய கிடைக்கும். 9. நடுமையம் இதில் சந்திரனிருந்தால் கொஞ்ச ஜலம் கிடைக்கும்.

**சுலோ.** 34 :—**துவஜம் - துவஜஸ்தம்பம் - கிணறு - தோட்டம் முதலியவைகளின் சக்கரம்.** ஒரு வீட்டைக் கட்டுவதற்கு அல்லது ஒரு கிணறு வெட்டுவதற்கு அல்லது ஒரு தோட்டத்தை யுண்டு பண்ணுவதற்கு அல்லது ஒரு துவஜம் அல்லது துவஜஸ்தம்பம் இவைகளைக் கட்டுவதற்கு முன் கீழ்க்கண்ட விஷயங்களைக் கவனிக்க வேண்டும்.

சூரியனிருக்கும் நட்சத்திரத்திலிருந்து சந்திரன் இருக்கும் நட்சத்திரம் வரையில் எண்ணி வந்த தொகை முதல் 6 நட்சத்திரங்களுக்குள் இருந்தால் மரணம் உண்டாகும். இதன்மேல் 20 நட்சத்திரங்களுக்குள் இருந்தால் செல்வம் கீர்த்தி இவைகளுண்டாகும். இதன்மேல் 2 நட்சத்திரங்களுக்குள் இருந்தால் தன நஷ்டம் உண்டாகும். இதனை அபிசித்துள்பட சேர்த்துக் கணக்கிட வேண்டும்.

### துவாரச் சக்கரம்.

**சுலோ.** 35 :—**துவார சக்கரம்.** சூரியனிருக்கும் நட்சத்திரத்திலிருந்து அன்றைய நட்சத்திரம் வரையில் எண்ணி வந்த தொகை முதல் 4 நட்சத்திரங்கள் கதவின் மேல்பாகம். இதன்

பலன் அரசனுதல், இதன்மேல் 3 நட்சத்திரங்கள் கதவின் மத்திய பாகம். இதன் பலன் அரசனுதல். இதன்மேல் 8 நட்சத்திரங்கள் கதவின் நான்கு மூலைகள், இதன் பலன் தேசப்பிரஷ்டம் உண்டாதல். இதன்மேல் 8 நட்சத்திரங்கள் கதவின் மேல் பாகத்திலுள்ள கீல்கள். இதன் பலன் அஷ்டைஸ்வரியம், இதன்மேல் 4 நட்சத்திரங்கள் கதவின் அடிப்பாகம் இதன் பலன் மரணம் உண்டாதல். இதற்குத் துவாரச் சக்கரம் என்று பெயர். இச்சக்கரத்தைக் கொண்டு கதவுகளை அமைப்பதற்குரிய சுபநட்சத்திரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

## உத்தானச் சக்கரம்.

**சுலோ.** *36* :—**அடுப்புச் சக்கரம்.** ஒரு தினத்தின் திதியைக் கண்டுகொண்டு அதனுடன் அன்றைய வாரத்தின் எண்ணிக்கையும் சேர்த்து அதனுடன் துருவம் 1-ஐயும் சேர்த்து 4-ஆல் வகுத்து வந்த சேடம் 1 அல்லது 2 ஆயின் தனநாசம் உண்டாகும். 3 அல்லது 4 ஆயின் மிகுந்த சந்தோஷம் உண்டாகும்.

சூரியனிருக்கும் நட்சத்திரம் முதல் சந்திர நட்சத்திரம் வரையில் எண்ணி இந் நட்சத்திரக் கூட்டங்களை 9 பிரிவுகளாக்கி (ஒவ்வொரு பிரிவுக்கும் மூன்று நட்சத்திரங்கள்) இவைகளை முறையே சூரியன், புதன், சுக்கிரன், சனி, சந்திரன், செவ்வாய், குரு, ராகு, கேது இவ்வொன்பதின்மர்களுக்குப் பங்கிட வேண்டும். இவ்விதம் பங்கிட்டு வரும் நட்சத்திரங்கள் சுபக் கிரகங்களுடைய பங்கில் வந்தால் சுபத்தையும் அசுபக்கிரகங்களுடைய பங்கில் வந்தால் அசுபத்தையும் குறிப்பிடும். இந்தச் சக்கரத்தைப் புதிய அடுப்பு கட்டுங் காலத்தில் உபயோகப்படுத்த வேண்டும்.

## பேட்டகச் சக்கரம்.

**சுலோ.** *37* :—**பேழைச் சக்கரம்.** ஒரு பெட்டியின் நீளத்தையும் அகலத்தையுங்கண்டு அங்குலங்களிலும் யவைகளிலும் கண்டு பிடித்து நீளத்தை அகலத்தால் பெருக்கவேண்டும். அப்படிப் பெருக்கி வந்த தொகையை 9-ஆல் வகுத்து வந்த சேடங்கள் முறையே சூரியன் - சந்திரன் - செவ்வாய் - புதன்- குரு - சுக்கிரன் - சனி - இராகு - கேது இவர்களுக்குச் சேர்ந்

தவை. சேடம் சுபக்கிரக பாகமானால் சுபத்தைத் தரும். அசுபக்கிரக பாகமானல் அசுபத்தைத் தரும். ஒரு அங்குலத்திற்கு 8 யவங்கள் இது சிற்ப சாஸ்திரங்களில் கூறப்பட்டுளது. ஆங்குக் கண்டு கொள்க.

### யவையைப் பற்றியது.

"பரமவணு விருநான்கி ரதரேணு
விதுவெட்டே பஞ்சின் றாளாம்
இரியிதுவெட் டுறிற்பாலன் கேசநுனி
யாமிதுவோ ரெட்டி லீகை
யரிதருமீ திருநான்கு பேனிதுவெட்
டியவையென்ப வதுவெட் டெய்திற்
றரிசொன்மா ணுங்குலமா மிதுவாறு
கொண்டதுவே தால மாதோ."

### மானிடச் சக்கரம்.

**சுலோ.** 38-39 :—**மானுட சக்கரம்.** ஒரு மனிதன் ஒரு புதிய ஊர் அல்லது தேசத்தில் தங்குவதற்கு முன் கீழ்ச்சொல்லப்பட்ட சக்கரத்தை உபயோகிக்க வேண்டும். இச்சக்கரம் மானிட உருவமுள்ளது. அந்த ஊரின் நாம நட்சத்திரத்திலிருந்து ஜாதகன் ஜன்ம நட்சத்திரம் வரையில் எண்ணி வந்த தொகை முதல் 5 நட்சத்திரங்களுக்குள் இருப்பின் சிரசைக் குறிப்பிடுகின்றது. இதன் பலன் தனலாபம் உண்டாம். இதன் மேல் 3 நட்சத்திரங்களுக்குள் இருப்பின் முகம். இதன் பலன் நாசமுண்டாம். இதன்மேல் 5 நட்சத்திரங்களுக்குள் இருப்பின் மார்பு. இதன் பலன் தனலாபம் உண்டாம். இதன் மேல் 6 நட்சத்திரங்களுக்குள் இருப்பின் இரண்டு கால்கள். இதன் பலன் தன நாசம் உண்டாம். இதன் மேல் 1 நட்சத்திரத்திற்குள் இருப்பின் முதுகு. இதன் பலன் பிராண பயம் உண்டாம். இதன் மேல் 4 நட்சத்திரங்களுக்குள் இருப்பின் தொடை. இதன் பலன் செல்வம் உண்டாம். இதன் மேல் 2 நட்சத்திரங்களுக்குள் இருப்பின் ஆசனம். இதன் பலன் பயம் கஷ்டம் உண்டாம். இதன்மேல் 1 நட்சத்திரத்திற்குள் இருப்பின் வலது கை, இதன் பலன் தன லாபம் உண்டாம். இதன்

மேல் 1 நட்சத்திரத்திற்குள் இருப்பின் இடது கை. இதன் பலன் வறுமையுண்டாம். இதற்கு மானிடச் சக்கரமென்று பெயர்.

## உபநயனச் சக்கரம்.

**சுலோ.** 40 :—**உபநயன சக்கரம்.** உபநயனம் செய்யவேண்டிய சிறுவனுடைய நட்சத்திர முதல் குரு இருக்கும் நட்சத்திரம் வரையில் எண்ணி அந்தத் தொகை முதல் 5 நட்சத்திரங்களுக்குள் இருப்பின் சிரசு. இதன் பலன் சந்தோஷம் உண்டாம். இதன் மேல் 3 நட்சத்திரங்களுக்குள் இருப்பின் முகம். இதன் பலன் தன்னுடைய மத தர்மத்தை வெறுத்து விட்டு விடுதல், இதன் மேல் 1 நட்சத்திரத்திற்குள் இருப்பின் மார்பு. இதன் பலன் பிறரைத் தூஷித்தல் இதன் மேல் 8 நட்சத்திரத்திற்குள் இருப்பின் இரண்டு கால்கள். இதன் பலன் வியாதியஸ்தனுதல், இதன் மேல் 2 நட்சத்திரங்களுக்குள் இருப்பின் தண்டம், இதன் பலன் கீர்த்திமானுதல், இதன் மேல் 8 நட்சத்திரங்களுக்குள் இருப்பின் கிருஷ்ண ஜனம். இதன் பலன் வித்தியாவந்தனுதல். இதற்கு உபநயனச் சக்கரம் என்று பெயர்.

## நிதிச் சக்கரம்.

**சுலோ.** 41 :—**நிதி சக்கரம்.** ஒரு வீடு அல்லது ஒரு இடத்தில் நிதி அல்லது பணம் அல்லது ஆபரணங்கள் இருக்கின்றனவா வென்று கண்டு பிடிப்பதற்குக் கீழ்ச் சொல்லப்படும் நிதிச் சக்கரத்தை உபயோகிக்கவேண்டும். அஃதாவது ஐந்து குறுக்குக் கோடுகளையும் அவைகளை வெட்டும் படியாக எட்டு நேர்க் கோடுகளையும் இழுக்கவேண்டும். இவ்வாறு செய்ய 28 சதுர அறைகள் வரும். இச்சதுரங்கள் அபிசித்துள்பட 28 நட்சத்திரங்களைக் குறிப்பிடுகின்றன.

**சுலோ.** $42\text{-}43\frac{1}{2}$ :—குறுக்குக் கோட்டின் உச்சியிலுள்ள ஏழு வீடுகள் முறையே 1. ரேவதி, 2. அசுவினி, 3. பரணி, 4. கார்த்திகை, 5. மகம், 6. பூரம், 7. உத்திரம் இவைகளுக்குச் சேர்ந்தவை. அடுத்த குறுக்குக் கோட்டில் ஏழு வீடுகள் முறையே 1. உத்திரட்டாதி, 2. பூரட்டாதி. 3. சதயம், 4. ரோகணி, 5. ஆயில்லியம், 6. பூசம், 7. அஸ்தம்,

இவைகளுக்குச் சேர்ந்தவை. 3-ஆவது குறுக்குக் கோட்டில் ஏழு வீடுகள் முறையே 1. அபிசித்து 2. திருவோணம், 3. அவிட்டம், 4. மிருக சீரிடம், 5. திருவாதிரை, 6. புனர்பூசம், 7. சித்திரை இவைகளுக்குச் சேர்ந்தவை. கடைசிக் குறுக்குக் கோட்டில் ஏழு வீடுகள் முறையே 1. உத்திராடம், 2. பூராடம், 3. மூலம், 4. கேட்டை, 5. அநுடம், 6. விசாகம், 7. சுவாதி இவைகளுக்குச் சேர்ந்தவை.

1. பரணி, 2. கார்த்திகை. 3. அசுவினி, 4. திருவாதிரை, 5. புனர்பூசம், 6. பூசம், 7. மகம், 8. ஆயில்லியம், 9. அபிசித்து, 10. ரேவதி, 11. திருவோணம், 12. உத்திராடம், 13. பூராடம், 14. பூரட்டாதி, முதலிய நட்சத்திரங்களுக்குச் சந்திரன் அதிபதியாவன். மற்ற நட்சத்திரங்களான 1. ரோகணி, 2. மிருகசிரம், 3. பூரம், 4. உத்திரம், 5. அஸ்தம், 6. சித்திரை, 7. சுவாதி, 8. விசாகம், 9. அநுஷம், 10. கேட்டை, 11. மூலம், 12. அவிட்டம், 13. சதயம், 14. உத்திரட்டாதி ஆகிய 14 நட்சத்திரங்களுக்குச் சூரியன் அதிபதியாவன். பிரசின காலத்தில் சூரியன் சந்திரன் இவர்களின் நிலையைக்கொண்டு புதையல் அல்லது நிதியின் சுபாவத்தை அறியலாம்.

**சுலோ.** $43\frac{1}{2}$-45:—சூரியன் ஒரு நட்சத்திரத்தின் ஆதியில் இருந்து அந்தியம் வரையில் செல்லவேண்டியதற்குள்ள நாழிகைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். சூரியன் அந்த நட்சத்திரத்தில் பிரவேசிக்குங் காலத்திலிருந்து எத்தனை நாழிகைகள் ஆயிருக்கின்றனவென்று கண்டு பிடித்து அதை 60-ஆல் பெருக்கி முற்கூறிய பரம நாழிகைகளால் வகுக்க வேண்டும். இவ்வாறு வகுத்துவந்த சேடத்தை 27-ஆல் பெருக்கி 60-ஆல் வகுத்துவந்த ஈவு அசுவினியிலிருந்து அந்தக் காலம் வரையில் சூரியன் சென்றிருக்கும் நட்சத்திரங்களைக் குறிப்பிடும். சேடத்தை நாழிகைகளாகவும் விநாடிகளாகவும் கணித்துக்கொண்டால் சூரியனுடைய சரியான நிலை தெரியும். சந்திரனிருக்கும் நட்சத்திரத்திலிருந்து இஷ்ட கடிகை அல்லது குறிப்பிட்ட இடத்திற்கு வருவதற்கு எத்தனை நாழிகை வேண்டு

மென்று கண்டுபிடிக்கவேண்டும், இதை 27-ஆல் பெருக்கி 60-ஆல் வகுத்துவந்த ஈவு அசுவினியிலிருந்து சந்திரன் சென்றிருக்கும் நட்சத்திரங்களின் தொகையைக் குறிப்பிடும், சேடமானது நாழிகை விநாடிகளில் சந்திரனுடைய நிலையைத் தெரிவிக்கும்.

**சுலோ.** 46 :—சந்திரன் அப்பொழுது சூரியாதி கிரகங்களினால் பார்க்கப்பட்டால் முறையே 1. பொன்னாபரணம், 2. வெள்ளி, 3. தாமிரம், 4. பித்தளை, 5. பொன், 6. வெண்கலம், 7. இரும்பு, 8. தகரம், 9. ஈயம் முதலியன கிடைக்கும். சந்திரனைப் பல கிரகங்கள் பார்த்தால் பலவித உலோகங்கள் கிடைக்கும். கிரகங்களின் பார்வை யில்லாவிட்டால் ஒன்று கூட கிடைக்காது.

**சுலோ.** 47 :—அக்காலத்தில் சந்திரன் எல்லாக் கிரகங்களாலும் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்கு ஒரு பெரிய பாத்திரத்தில் நிதி கிடைக்கும். மேற்கூறிய சந்திரன், சிம்மத்தில் இருந்தால் பொன் பாத்திரத்திலும், சந்திரனுடைய வீட்டில் இருந்தால் வெள்ளிப் பாத்திரத்திலும், செவ்வாயின் வீட்டில் இருந்தால் தாமிர பாத்திரத்திலும், புதனின் வீட்டில் இருந்தால் நவரத்தினங்களால் செய்யப்பட்ட பாத்திரத்திலும், குருவின் வீட்டில் இருந்தால் கல்லால் செய்யப்பட்ட பாத்திரத்திலும், சுக்கிரன் வீட்டில் இருந்தால் மண் பாத்திரத்திலும், சனியின் வீட்டில் இருந்தால் இரும்புப் பாத்திரத்திலும் நிதி கிடைக்கும்.

**சுலோ.** 48 :—சூரியனும் சந்திரனும் சேர்ந்து அக்காலத்தில் சந்திரனுக்குரிய நட்சத்திரத்தில் இருந்தால் நிதி நிச்சயமாய்க் கிடைக்கும். இவ்விரண்டு கிரகங்களும் சூரியனுக்குரிய நட்சத்திரத்தில் இருந்தால் நிதியில் எலும்புகள் இருக்கும். சூரியனும் சந்திரனும் பரிவர்த்தனமாய் இருந்தால் நிதியே கிடைக்காது. சூரியனோடு பாபர்கள் சேர்ந்திருந்தால் ஜாதகனுக்கு நிதி கிடைக்காது. சுபர்கள் சேர்ந்திருந்தால் நிதி கிடைக்கும், சந்திரன் அந்த நட்சத்திரத்தில் சென்றிருக்கும் நாழிகைகளைக் கொண்டு நிதி இவ்வளவு ஆழத்தில் இருக்குமென்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

### விவாகச் சக்கரம்.

**சுலோ.** *49-50* :—**விவாக சக்கரம்.** நான்கு நேர்கோடுகளையும் நான்கு குறுக்குக் கோடுகளையும் இழுக்கவேண்டும். இதில் *9* சதுரங்கள் வரும். அக்காலத்தில் சூரியன் இருக்கும் நட்சத்திரத்தில் இருந்து எண்ணிக்கொண்டு வந்து முதல் 3 நட்சத்திரங்களை நடு மையத்திற்கும் மற்ற 24 நட்சத்திரங்களை **3-3**-நட்சத்திரங்களுள்ள 8 பகுதிகளாக்கி ஒவ்வொரு பகுதியையும் முறையே கிழக்கு முதலிய எட்டுத் திக்குகளிலும் குறிப்பிட்டுக் கொள்ளவேண்டும்.

சந்திரன் கலியாண நாட்களில் எந்தச் சதுரத்தில் இருக்கின்றுரென்று கண்டு பிடித்துக்கொண்டு நடு மையத்தில் இருந்து கீழ்க்கண்ட பிரகாரம் பலன்களைச் சொல்லவேண்டும். மையத்தில் இருப்பின் சதிபதிகள் நாசமடைவார்கள், கிழக்கில் இருந்தால் மிகுந்த செல்வமுண்டாகும். தென் கிழக்கில் இருந்தால் குடும்பத்திற்கு ஹானி ஏற்படும். தெற்கில் இருந்தால் வைதவ்வியம் உண்டாகும். தென்மேற்கில் இருந்தால் குடும்ப விருத்தி உண்டாகும். மேற்கில் இருந்தால் ருணம் ரோகம் ஏற்படும். வடமேற்கில் இருந்தால் பாரியை துன்மார்க்கம் உடையவள் ஆவள். வடக்கில் இருந்தால் தனம் தானியம் இவைகள் விருத்தியாகும். வட கிழக்கில் இருந்தால் சகல ஐசுவரியமும் உண்டாகும் என்று ஸ்ரீ சிவபெருமாளுல் நந்தி கேசுரருக்கு உபதேசிக்கப் பெற்றது.

சுபம். சுபம். சுபம்.

கவிரத்ந காளிதாசன் மலரடி வாழ்க

உத்தர காலாம்ருதம்
எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

சகல கலா வல்லவன் திருவடி வாழ்க.

குகமயம்.

ஓம் குமார குருப்யோ நம:

இதுவரையில் வெளி வராதது. யாவரும் கொள்ளத்தக்கது.

# ஜோதிஷ தத்துவ சுதார்ணவம்.

## தமிழ் மொழி பெயர்ப்பு

——( : )——

உயர் நலமுடைய இந்நூல் ஏழு தரங்கங்களையும் 1715 சு
வியாக்கியானங்களையும் கொண்டது.

இவ்வுரையாசிரியர் ஸ்ரீ சுந்தர சர்மா தொல்லாசிரியர்க
1 போஜராஜன், 2 வராகமிஹிரர், 3 பைரவாசாரியர், 4 பலப
5 சங்க பண்டிதர், 6 விருத்தமனு, 7 கர்க்காசாரியர், 8 பாகுரி மு
9 வசிஷ்டர், 10 மனு, 11 ஹாரீத முனிவர், 12 யாக்ஞவல்கிய
விருத்த வசிஷ்டர், 14 சாதாதப முனிவர், 15 ஜாபால முனிவ
தேவல முனிவர், 17 கௌதம முனிவர், 18 விருத்த கௌதம மு
19 கோபில முனிவர், 20 பரத்துவாச முனிவர், 21 யவன முனிவ
மாண்டவ்ய முனிவர், 23 பட்டாச்சாரியார், 24 பராஸ்கரர், 25
பட்டர், 26 கிருஷ்ணனந்த பட்டாசாரியர், 27 ஆசுவாலாயன மு
28 போஜதேவர், 29 பராசர முனிவர், 30 பிருகு முனிவர், 31 
முனிவர், 32 ஜீமோதவாகன், 33 பிருஹந்மனு, 34 வியாச மு
35 வால்மீக முனிவர், 36 நாடிஜங்கர், 37 பிருஹஸ்பதி, 38 பிர
39 யவனசாரியர், 40 கல்யாணவர்மன், 41 விஷ்ணு, 42 சத்திய
யர், 43 விருத்தகர்க்க முனிவர், 44 வாத்சியர், 45 ஸ்மார்த்த ப
சாரியர், 46 காசியப முனிவர், 47 மார்க்கண்டேயர், 48 யமன், 49
ஹ்ருதயானந்தர், 50 ஸ்ரீபதி பட்டாச்சாரியர், 51 தைவக்ஞவல்லபர்,
52 பிரபாகரபட்டர், 53 வித்யாதரர், 54 ஸ்மார்த்த மகாமகோபாத்
தியாய வியாசர், 55 தட்ச முனிவர், 56 சூரியன், 57 கருணரத்னேஸ்
வர ஆசாரியர், 58 சங்கலிகிதர், 59 ஸ்ரீதத்தர், 60 பைடீனச முனிவர்,
61 சூலபாணி யுபாத்தியாயர், 62 இராமகாந்தர், 63 அமரசிம்மர்
முதலிய ஆசிரியர்களின் கருத்துக்களையும்,

1 சூரிய சித்தாந்தம், 2 சோம சித்தாந்தம், 3 இரத்தினமாலா, 4 ஞானமாலா, 5 தீர்த்த சிந்தாமணி, 6 சத்கிருத்திய சிந்தாமணி, 7 முகூர்த்த சிந்தாமணி, 8 வேதபலம், 9 ஹோராபலம், 10 ஸ்மிருதி, 11 நவீன வர்த்தமான ஸ்மிருதி, 12 பீமபராக்கிரமம், 13 யாச்யாத் நிர்ணயாமிருதம், 14 இராமார்ச்சன சந்திரிகை, 15 இரத்தினுவளி, 16 புஜபல பீமம், 17 விஷ்ணு தர்மோத்தரம், 18 ஜாதகாபரணம், 19 ஸ்ரீபதி விவகார நிர்ணயம், 20 ஸ்ரீபதி விவகார சமுச்சயம், 21 சம்வத்சரதீபம், 22 நாராயணபத்ததி, 23 இரத்தினகோஷம், 24 புத்திப் பிரகாசம், 25 பராசரபாஷ்யம், 26 தத்துவசாகரம், 27 மகாபாரதம், 28 சத்கிருத்தியமுக்தாவளி, 29 ஷட்திரிம்சன்மதம், 30 வட்சயமானம், 31 மத்ஸ்ய சூத்திரம், 32 சுரோதயம், 33 கண்டபாத வர்ஜ்ஜனம், 34 வித்யாதரி விலாசம், 35 ஜாதகப் பிரகரணம், 36 இலகுஜாதகம், 37 மதன பாரிஜாதம், 38 கிருஷி பராசரம், 39 சாராவளி, 40 சாத்வாரிகசங்கியை, 41 பிரகிருதிகண்டம், 42 ஏகாதசி விஷ்ணு விவேக ரகசியம், 43 நியாயரத்தினம், 44 கல்பதரு ரத்னுகரம், 45 பிரகாராந்தரம், 46 கிரந்தாந்தரம், 47 வசனுந்தரம், 48 வராகமிஹிர சம்மிதை, 49 வைஸம்பாயன சம்மிதை, 50 ஸ்ரீபதி சம்மிதை, 51 அகஸ்திய சம்மிதை, 52 ஜோதிஷ தத்துவம், 53 பிருகத்ஜாதகம், 54 ஜோதிஷ சாரம், 55 ஸ்மிருதிசாரம், 56 தந்திர சாரம், 57 யோகயாத்திரை, 58 பிருகத் யாத்திரை, 59 இராஜமார்த்தாண்டம், 60 பிருகத் ராஜமார்த்தாண்டம், 61 ஜாதக தீபிகை, 62 பசுபதி தீபிகை, 63 யாமளம், 64 விஷ்ணுயாமளம், 65 ஜோதிஷசாரசங்கிரகம், 66 ஜாதகசந்திரிகை, 67 திதிதத்துவம், 68 சிரார்த்ததத்துவம், 69 தீட்சாதத்துவம், 70 மலமாச தத்துவம், 71 புரஸ்ஸரணசந்திரிகை, 72 உருத்திரயாமள தந்திரம், 73 சனற் குமார தந்திரம், 74 யோகினீதந்திரம், 75 மத்ஸ்ய சூக்தமகா தந்திரம், 76 காலோத்தரதந்திரம், 77 விசுவசார தந்திரம், 78 சமயாதந்திரம், 79 ஆகமார்ணவ தந்திரம், 80 வராகி தந்திரம், 81 வீர தந்திரம், 82 முண்டமாலா தந்திரம், 83 நிருத்தரதந்திரம், 84 கௌதமீய தந்திரம், 85 நாரத தந்திரம், 86 தந்திரா தந்திரம் 87 மீமாம்ச தந்திரம், 88 நீலதந்திரம், 89 சாமுண்டாதந்திரம், 90 தேவீ புராணம், 91 விஷ்ணு புராணம், 92 மத்ஸ்ய புராணம், 93 ஸ்காந்த புராணம், 94 பிரம புராணம், 95 பிரமவைவர்த்தன புராணம், 96 பவிஷ்யபுராணம், 97 நாரதீய புராணம், 98 கருட புராணம், 99 கூர்ம புராணம், 100 வராக புராணம், 101 பத்ம புராணம், 102 நந்திகேசுர புராணம், 103 வாமன புராணம், 104 பவிஷ்யோத்ர புராணம், 105 பிரமாண்ட புராணம், 106 கங்காமிருத பவிஷ்யோத்ர புராணம், 107

நியாயரத்நம், 108 மைதிலர்மதம், 109 பைடீனசி வசனம், 110 உத்வாக தத்துவம், 111 சிவரகசியம், 112 துவைத நிர்ணயம், 113 யோகினீ ஹ்ருதயம், 114 யோகாந்தரம், 115 தாராப்பிரகரணம், 116 சிரார்த்த விவேகம், 117 இலகு யாத்திரை, 118 கௌதம சூத்திரம், 119 பலாந்தரம், 120 யோகமாலா, 121 ஹோரா சாஸ்திரம், 122 இலிங்க புராணம், 123 பிரயாச்சித்த தத்துவம் முதலிய பிரபல நூற்களின் கருத்துக்களையும் அநுசரித்து வடமொழியில் இந்நூலுக்கு உரை எழுதி யிருக்கின்றனர்.

இந்நூல் சிறுவரும் வாசித்துணருமாறு எளிய தமிழ் நடையில் ஆக்கப்பெற்றுளது. ஆதலின் இது ஜோதிஷம் பயின்றோரும் பயிலாதோரும் எளிதிலறியுந் தன்மையுடையது.

இது திருத்தருமபுர ஆதீன வித்வசிகாமணி ஸ்ரீ ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை அவர்களால் பரிசோதிக்கப்பெற்று அவர்களின் பாயிரத்தையுங் கொண்டது.

இது மைசூர் இன்ஸ்டிரக்ஷன் டைரக்டர் வித்வான் P. M. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் M. A. ஆனர்ஸ் L. T. அவர்களின் ஆங்கில முன்னுரையுடன் கூடியது.

இஃது உயர்ந்த கடிதத்தில் நல்ல அச்சில் அச்சிடப்பெற்று வருகின்றது.

குறிப்பு :—இந்நூலுக்கு முன்பணமாகப் பத்து ரூபாய் அனுப்புகிறவர்களுக்குப் புத்தகம் முடிந்தவுடன் ரிஜிஸ்டரில் அனுப்பப்பெறும்.

இங்ஙனம்

சு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரி,
1, ஏகாம்பர ஆச்சாரி வீதி,
பறங்கிப்பேட்டை.

சுபம்